KALKI
10.4.88
ரூ. 2.

கல்கி



பரீட்சை எனும்
பயங்கர அனுபவம்

பகிர்ந்து கொள்ளுங்கள், பாசமிக்க கணங்களை,
நேசமிக்க உணர்வுகளை. பகிர்ந்து கொள்ளுங்கள்,
குடும்பத்தினர் எப்போதும் விரும்பும் புத்துணர்ச்சி
நறுமணத்தை...



பாண்ட்ஸ்
ட்ரீம்ஃபிளவர்
டால்க்

புதுமையின் நறுமணம். இதற்கு ஏது இணை!

HTA 7010



சவால்: சொத்துக்களை மாற்றிக்கொள்வோமா?



மூப்பனாரும் கருணாநிதியும் தங்கள் சொத்துக்களை மாற்றிக் கொள்ளத் தயார் என்று வந்த அறிக்கைகளைப் படித்துத் திடுக்கிட்டேன். மற்றவருடைய சொத்துக்கள் இவ்வளவு பெறும் என்று கடைசி பைசா வரை தெரிந்து கொள்ளாமல் இப்படிச் சவால் விடுவது அசட்டுத்தனம் என்று எனக்குத் தோன்றியது. இதுபற்றி விவாதிக்க எனக்குத் தெரிந்த ஓர் அரசியல் கட்சித் தலைவர் பகளீகரன் வீட்டுக்குச் சென்றேன். மரியாதைக்காக நான் வாங்கிச் சென்ற ஓர் ஆப்பிள் பழத்தை அவரிடம் கொடுத்து விட்டுப் பேசினேன்.

பகளீகரன் எனக்குப் பழச்சாறு வரவழைத்துக் கொடுத்தார். கண்ணாடி டம்ளரை எடுத்து நீட்டிய அவர் கைவிரல்களில் தெரிந்த மோதிரங்களில் வைரம் டாலடித்தது.

"தம்பி! இந்த மாதிரி சவால்களை நீங்க ஸீரியஸா எடுத்துக்கக் கூடாது" என்றார் பகளீகரன்.

"எப்படிங்க ஸீரியஸா எடுத்துக்காம இருக்கறது? அடுத்த தமிழக முதலமைச்சர் பதவிக்குப் போட்டி போடற இரண்டு பேர் பேசியிருக்கிற விஷயமாச்சே?"

"அவங்க அறிக்கை விடலாம். அதுக்கு மேல ஒண்ணும் நடக்காதுன்னு அவங்களுக்குத் தெரியும். நீங்களும் இதைத் தெரிஞ்சுக்கிட்டிருந்தீங்கன்னா அவங்க அறிக்கையைப் படிச்சுட்டு அப்பவே விஷயத்தை மறந்திருப்பீங்க."

டெலிஃபோன் அடித்தது. பகளீகரன் ரிசிவரை எடுத்துப் பேசினார்: "ஹலோ... ஆமா... நான் அப்பாதான் பேசறேன்... சொல்லு சரோஜா... சாயங்காலம் காலேஜுக்குக் கார் அனுப்பணுமா? சரி, அம்பாசிடர் காரை அனுப்பறேன்... மெர்சிடஸ் கார்தான் வேணுமா? சரி அதையே அனுப்பறேன்!"

ரிசீவரை வைத்துவிட்டு, பகளீகரன் மறுபடியும் என்னிடம் பேசினார்: "'மூப்பனார் நினைக்கிற மாதிரி அவரை விடக் கருணாநிதிக்கு அதிக சொத்து இருக்காது. ஏமாந்து போய் மூப்பனார் சவால் விட்டுட்டார்'னு தானே உங்களுக்குத் தோணியிருக்கும்?"

"ஆமாங்க."

"தப்புக் கணக்குப் போட்டதும் ஏமாந்ததும் அவங்க ரெண்டு பேரும் இல்லே, நீங்கதான்!"

"நானா?"

"நீங்க மட்டும் இல்லே, பொது மக்கள் எல்லாரும்தான். ஏன் தம்பி, மூப்பனாரும் சரி, கருணாநிதியும் சரி, அவங்க சொத்தை இன்னொருத்தர் சொத்தோட நஷ்டத்துக்கு மாத்திப்பாங்களா? சொல்லுங்க!"

"மாட்டாங்கன்னுதான் தோணுது. ஆனா..."

"அப்ப அவங்க சவாலுக்கு என்ன அர்த்தம்னு யோசனை பண்ணிப் பாருங்க. 'கருணாநிதி அனுபவிக்கற எல்லாச் சொத்தையும் எடுத்துக்கிட்டுச் சட்டரீதியா என் பேர்ல இருக்கிற சொத்தை அவருக்குக் குடுத்திடலாம்'னு மூப்பனார் நினைச்சுப் பேசியிருப்பாரு. கருணாநிதியும், 'மூப்பனார் அனுபவிக்கிற சொத்து பூராவும் நமக்கு வரட்டும். சட்டரீதியா என் பேர்ல இருக்கிற சொத்து மட்டும் அவருக்குப் போகட்டும்'னு கணக்குப் போட்டுச் சவாலைத் தைரியமா ஏத்துக்கிட்டிருப்பாரு. அவ்வளவுதான்" என்று விளக்கினார்



பகளீகரன்.

மறுபடியும் டெலிஃபோன் அடித்தது. பகளீகரன் யாருடனே பேசுவதை நான் கேட்டேன். "எத்தனை கிரவுண்டு விலைக்கு வந்திருக்கு...? ஏழு கிரவுண்டா...? கிரவுண்டு ஆறு லட்சம்னு பரவாயில்லே. அந்த இடத்துக்குச் சரியான விலைதான்... ஆமா, வாங்கிட வேண்டியதுதான். இப்பவே முடிச்சுடுங்க" என்று பேசி முடித்தார் அவர்.

நான் பகளீகரனிடம் தொடர்ந்து கேட்டேன்: "அதாவது வாங்கும்போது அடுத்தவரோட எல்லாச் சொத்தையும் வாங்கிப்பாங்க. கொடுக்கும்போது தன்னோட சொத்துல துளியூண்டு பிரிச்சு, 'இதுதான் என் சொத்து'ன்னு சொல்லிக் குடுத்துடுவாங்கன்னு அர்த்தமா?"

"தம்பி! நீங்க சரியாப் புரிஞ்சுக்கலே! இப்ப உங்ககிட்டவே கேக்கறேன்; என் சொத்தையும் உங்க சொத்தையும் மாத்திக்கலாமா? நீங்க சரின்னு சொன்னா நஷ்டம் உங்களுக்குத்தான், ஞாபகம் வச்சுக்குங்க!"

"என் கூடவா சொத்து மாத்திக்குவீங்க? என் சொத்து என்ன மதிப்புன்னு தெரியுமா உங்களுக்கு?"

"நீங்களே சொல்லுங்களேன்."

"ஊர்ல ரெண்டு சென்ட் நிலம் இருக்கு. வேறே சொல்லணும்னா என்னோட டீ. வி., சைக்கிள், வாட்ச், பாங்க்ல ஐந்நூறு ரூபாய் பணம் இருக்கும்... அவ்வளவுதான்."

"பரவாயில்லே, தம்பி! நான் என்னோட எல்லா சொத்தையும் உங்களுக்குக் குடுத்துட்டு உங்க சொத்தை எடுத்துக்கறேன். உங்களுக்குப் பிரியம்னா சொல்லுங்க" என்று அசராமல் சொன்னார் பகளீகரன்.

வைர மோதிரங்களும், மெர்சிடஸ் காரும், ஏழு கிரவுண்டு நிலமும் என் கண்களில் நிழலாடின. பகளீகரனின் பைத்தியக்காரத்தனத்தை உடனடியாகப் பயன்படுத்திக் கொள்ள நினைத்தேன். "உங்க சொத்து என்ன என்னன்னு மதிப்புப் போட்டு எழுதிக் குடுங்க" என்றவாறு ஒரு பேப்பரையும் பேனாவையும் அவர் கையில் கொடுத்தேன்.

பகளீகரன் சிரித்தார். "சட்டப்படி என் பேருக்குச் சொந்தமான சொத்து ஒண்ணே ஒண்ணுதான். இன்னிக்கே மாத்திக்கிட்டோம்னா உங்களுக்கு அந்தச் சொத்தாவது கிடைக்கும்!"

"எதுங்க? இந்தப் பெரிய வீடா?"

"இல்லே, தம்பி! இதோ இந்த ஆப்பிள்தான் இன்றைய தேதியில் எனக்கு இருக்கிற ஒரே சொத்து" என்று கூறி, சற்று முன் நான் அவருக்குப் பரிசளித்த ஆப்பிள் பழத்தை எடுத்துக்காண்பித்தார் பகளீகரன்!

— மாதவன்



அடுத்த இதழ்...

தில்லி தமிழர் சிறப்பிதழ்

* ராஜீவுக்கு நஷ்டம்;
  ஹிந்துஜாவுக்கு லாபம்!

  —— ஏ. பி. வெங்கடேசுவரனுடன் ஒரு சந்திப்பு

* தில்லியில் வாழும் சேலத்துத் தொழிலாளர்கள்

  —— சிறப்புக் கட்டுரை

* சுப்புடு பார்வையில் தில்லித் தமிழர்கள்

* மற்றும் இந்திரா பார்த்தசாரதியின் சிறப்புச் சிறுகதையுடன் ஏராளமான இதரச் செய்திகள்; கட்டுரைகள்; புகைப்படங்கள்.

அதிக பக்கங்கள் : : அதே விலை!



ஸ்ரீ சாரதாம்பாள்



ஸ்ரீ மஹாஸன்னிதானம்



ஆதி சங்கரர்



ஸ்ரீஸன்னிதானம்

தக்ஷிணாம்னாய சிருங்கேரி சாரதாபீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார்
ஸ்ரீ மஹாஸன்னிதானம் ஸ்ரீஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹாஸ்வாமிகளின்
அருளாசியுடன்
தக்ஷிணாம்னாய சிருங்கேரி சாரதாபீடம் ஜகத்குரு சங்கராச்சாரியார்
ஸ்ரீ ஸன்னிதானம் ஸ்ரீஸ்ரீ பாரதி தீர்த்த மஹாஸ்வாமிகள்
சென்னைக்கு 14-4-88 முதல் 7-5-88 வரை விஜயம் செய்கிறார்கள்.

நிகழ்ச்சி நிரல்

ஏப்ரல் 14	
மாலை 6-30 :	வருகை
14-22:	முகாம் : ராஜா அண்ணாமலைபுரம் சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மந்திரம்.
	ஆதிசங்கரர் 12வது நூற்றாண்டு ஜயந்தி விழா
17-21:	ஜயந்தி விழா : சிருங்கேரி ஜகத்குரு பிரவசன மந்திரம், ராஜா அண்ணாமலைபுரம்.
21:	சிறப்புக் கூட்டம்
22 காலை: 9 மணி	P.S. சீனியர் உயர்நிலைப் பள்ளியில் "ஸ்ரீ சிருங்கேரி வித்ய பாரதி" கட்டிடத்தை ஜகத்குரு ஸ்ரீ ஸன்னிதானம் திறந்து வைக்கிறார்கள்
23-29:	முகாம்:சிவசுந்தர் அவென்யூ, திருவான்மியூர், சென்னை.
30-மே 1:	முகாம் :ஸ்ரீ சாரதாம்பா கோயில், ஆற்காடு சாலை, கோடம்பாக்கம், சென்னை.
மே 2:	முகாம் :ஸ்ரீ சங்கர மடம், கிருபாசங்கரி தெரு, மேற்கு மாம்பலம், சென்னை.
3-7:	முகாம் :ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு சங்கர மடம், 11, வெங்கட்நாராயணா சாலை, தி. நகர்.

EI 879-88

ஸ்ரீ சங்கர ஜயந்தி விழாக் கமிட்டி, 1988
"நவகஜா", சென்னை 600 028.



• வெங்கட்ராமன்

33 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் வெற்றி!



தமிழ்நாடு அணி ரஞ்சிக் கோப்பையை வென்றபோது அந்த மகத்தான காட்சியைச் சேப்பாக், சிதம்பரம் ஸ்டேடியம் பெவிலியனிலிருந்து பூரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள் பாலு அழகண்ணன், எம். கே. முருகேஷ், டி. எல். சக்ரவர்த்தி, எம். ஜி. பவநாராயணன் ஆகியோர். இவர்கள் எல்லாம் யார்....? கிரிக்கெட்டின் தீவிரக் காதலர்களுக்குத் தெரியும் பாலு அழகண்ணன் தமிழ்நாடு (அப்போது மெட்ராஸ்) அணி முதன் முறையாக 1955 ஆம் ஆண்டில் ரஞ்சிக் கோப்பையை வென்றபோது அதன் காப்டனாக இருந்தவர். ஹோல்கார் அணியைத் தோற்கடித்த அன்றைய மெட்ராஸ் அணியின் சில உறுப்பினர்கள்தான் முருகேஷ், சக்ரவர்த்தி மற்றும் பவநாராயணன். இவர்களுள் பவநாராயணன் தமிழ்நாடு அணியின் தேர்வுக் குழு உறுப்பினர் என்பதால் அவருக்குப் பழைய நினைவுகளோடு சற்றுக் கூடுதலான பெருமிதமும் ஏற்பட்டிருக்கும்.

மெட்ராஸ் முதன் முதலில் ரஞ்சிக் கோப்பையை வென்ற 1955 ஆம் ஆண்டில் பிறந்தவர்தான் இன்றைய தமிழ்நாடு அணியின் காப்டன் வாசுதேவன். ரஞ்சிப் பந்தயங்களில் 150 விக்கெட்டுகளை விழ்த்தியுள்ள இடது கை சுழற்பந்து வீச்சாளரான இவர், ஓர் உபயோகமான கடைநிலை பாட்ஸ்மன் னும் கூட; ரஞ்சிப் பந்தயங்களில் இரண்டு சதங்களை அடித்துள்ளார். அடக்கத்துடனும் அமைதியுடனும் விளங்கும் இவரது தலைமையில் தமிழ்நாடு அணி பதற்றப்படாமல் நிதானமாகச் செயல்பட்டது.

''ரஞ்சி பந்தயங்களைப் போன்ற உள்நாட்டுக் கிரிக்கெட் போட்டிகளைச் சர்வதேச பந்தய சீசன் ஆரம்பிப்பதற்கு முன்னால் முடித்து விடுவது நல்லது. இப்படிச் செய்தால் உள்நாட்டுப் போட்டிகளில் சோபிப்பவர்களுக்குச் சர்வதேசப் பந்தயங்களில் ஆட வாய்ப்பு கிடைக்கக்கூடும். ஆனால், இரண்டுமே ஒரே சமயத்தில் நடத்தப்படுகின்றன. இப்போது பாருங்கள் — ராபின் சிங்கும் வெங்கட்ராமனும் அயல்நாட்டு அணிகளை எதிர்த்து ஆட இன்னும் ஓராண்டுக் காலம் பொறுத்திருக்க வேண்டும்'' என்று வாசுதேவன் கூறியது நியாயமாகத் தோன்றியது.

ரயில்வேஸுக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையே நடந்த ரஞ்சிக் கோப்பை இறுதிப் போட்டியில் மிக நன்றாக ஆடியவர்கள் வரிசையில் இடம் பெறும் ராபின் சிங், மேற்கிந்தியத் தீவுகளில் உள்ள டிரினிடாடைச் சேர்ந்த இந்தியர். இந்தியாவில் விளையாட வேண்டும் என்ற முடிவுடன் 'ஷெல் ஷீல்டு' போட்டிகளில் (மேற்கிந்தியத் தீவுகளில் நடப்பவை) ஆடக் கிடைத்த அழைப்பை மறுத்தவர். இந்த சீசனில் நான்கு செஞ்சுரிகள் எடுத்துள்ள ராபின் சிங் இந்தியாவின் தலைசிறந்த ஃபீல்டர்களுள் ஒருவர். நெருக்கடியான நேரங்களில் இரண்டு முறை வி. சிவராமகிருஷ்ணனு



தமிழ்நாடு அணி

டன் இணைந்து பாட் செய்து கைகொடுத்துள்ள ராபின் சிங், மீடியம் பேஸ் பந்து வீச்சாளரும் கூட.

உடற்கட்டைப் பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துவார் ராபின். மழையோ வெயிலோ பாராமல் தினமும் மைதானத்துக்குப் போய் உடற்பயிற்சி செய்வார். இறுதிப் பந்தயம் தொடங்குவதற்கு முந்தைய தினம் சில அடையாளம் தெரியாத ஆட்கள் இவரது வீட்டுக்குள் புகுந்து இவரைத் தாக்க முயற்சி செய்தது ஒரு சலசலப்பை ஏற்படுத்தியது. எதிரிகளற்ற இந்த இளைஞர் தாக்கப்பட்டதன் மர்மம் இன்னும் விடுபடவில்லை. அன்று இரவு முழுவதும் ராபின் தூங்கவில்லையென்றாலும் மறுநாள் அபாரமாக ஆடி 131 ரன்களைக் குவித்தார்.

"இந்தியப் பிரஜாவுரிமை கோரியிருக்கிறேன் — இந்தியாவுக்கு ஆட வேண்டும் என்று எனக்கு ஆசை" என்று கூறும் ராபின், கால்பந்து, ஸ்குவாஷ், ஓட்டப் பந்தயங்கள் என்று பல விளையாட்டுக்களில் பங்கேற்றுப் பெருமை கண்டவர். "நீங்கள் இவ்வளவு பிரமாதமாக விளையாடிக் கொண்டிருப்பது டிரினிடாடில் உள்ள உங்கள் பெற்றோர்களுக்குத் தெரியுமா?" என்று ராபினைக் கேட்டபோது — "முழு விவரங்களும் தெரியாது; தெரிந்தால் நான் ஒழுங்காகப் படிக்க வேண்டுமே என்ற கவலை அவர்களுக்கு வந்துவிடும்" என்று புன்னகையுடன் சொன்னார் அந்தப் பச்சையப்பன் கல்லூரி பி.ஏ., இரண்டாம் ஆண்டு மாணவர்.

மதுரை வீரர் வெங்கட்ரமணா டி. வி. எஸ். ஆதரவில் வளர்ந்து வரும் இருபது வயது இளைஞர். ஆஃப் ஸ்பின்னரான இவர் இந்த ஆண்டு ரஞ்சிப் பந்தயங்களில் 35 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். பந்தயத்தில் நுழைந்த ஆண்டிலேயே இவர் புரிந்துள்ள இச் சாதனை வெங்கட்டின் ஓய்வுக்குப் பிறகு, எல். சிவா பாட்ஸ்மனாக உருமாறிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் தமிழகத்துக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும். "ஸ்ரீகாந்த் வெங்கட் போன்றோர் கொடுக்கும் சிறிய அறிவுரைகளை" நன்றியுடன் நினைவு கூர்ந்தார் வெங்கட்ரமணா.

இந்தப் பந்தயத் தொடரில் மிகச் சிறப்பாக ஆடி ஐந்நூறு ரன்களைக் கடந்துள்ள பாட்ஸ்மென்களுள் ஒருவர் எல். சிவராமகிருஷ்ணன். இந்த ஐந்நூறில் மூன்று சதங்கள் அடங்கும். சில அபாரமான காட்சுகளைப் பிடித்துள்ளார். ஐந்நூறு ரன்களைத் தாண்டியுள்ள இதர ஆட்டக்காரர்கள் வி.பி. சந்திரசேகர், ராபின் சிங்.

ரஞ்சி டிராஃபிக்கான பந்தயங்களுள் முதல் பந்தயம் மைசூருக்கும் மெட்ராஸுக்கும் இடையே நமது சேப்பாக் மைதானத்தில்தான் நடந்தது. மைசூரை மெட்ராஸ் தவிடுபொடியாக்கிய இந்தப் பந்தயத்தில் மெட்ராஸுக்காக ஆடினார் பி. எஸ். ராமச்சந்திரன். இன்றைக்கும் ஆரோக்கியமான,



* ராபின் சிங், வி. சிவா.

மெலிந்த தேகத்துடன் சுறுசுறுப்பாய் வளைய வரும் இந்த எழுபது வயதுக்காரர் வேறு யாரும் இல்லை.... 'ஓய்வு பெறுகிறேன்' என்று அறிவித்துவிட்டு மீண்டும் விளையாட வந்து சக்கைப் போடு போட்ட வி. சிவராம கிருஷ்ணனின் மாமா தாத்தா!

தேர்வுக் குழுத் தலைவரான பிரபாகர் ராவும் தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷன் செயலாளர் வெங்கட்ராகவனும் வற்புறுத்தியதன் பேரில் தமது முடிவை மாற்றிக் கொண்டு மீண்டும் களத்தில் இறங்கினார் வி. சிவராமகிருஷ்ணன். இவர் ரஞ்சிப் பந்தயங்களில் ஐயாயிரம் ரன்களைப் பூர்த்தி செய்ய இன்னும் 150 ரன்களே எடுக்க வேண்டியுள்ளது. அதனை எட்டி விட்டால் இதுவரை எந்தத் தமிழ்நாட்டு ஆட்டக்காரரும் செய்யாத சாதனையைப் படைத்தவராவார், முப்பத்தாறும் வயதை நெருங்கிக் கொண்டிருக்கும் வி. சிவா.

இவ்வாண்டு தமிழ்நாட்டு கிரிக்கெட் வீரர்களின் பாட்டிங் சாதனைகள் இங்கு நிறைய திறமை இருப்பதை இந்தியத் தேர்வுக் குழுவுக்கு உணர்த்தும். பாட்டிங்கில் நமது குழு கண்டுள்ள முன்னேற்றத்துக்கு ஒரு காரணம் ஒருநாள் பந்தயங்களாக இருந்த உள்ளூர் லீக் கிரிக்கெட் பந்தயங்கள், இரண்டு நாள் பந்தயங்களாக மாற்றப்பட்டதுதான். இதனால் நமது ஆட்டக்காரர்கள் பொருந்தி, நிதானமாக விளையாடி, நிறைய ரன்கள் எடுக்கும் குணத்தை வளர்த்துக் கொண்டுள்ளது உண்மை. மூன்று இறுதிக் கட்ட ரஞ்சிப் பந்தயங்களில் தமிழ்நாடு முறையே 500, 600, 700 என்று ரன்களைக் குவித்திருக்கிறது.

கடந்த காலத்தில் ஆட்டக்காரர்களிடையே சில சமயங்களில் எழுந்த கௌரவப் பிரச்னைகள் இன்றையத் தமிழ்நாடு குழுவினரிடையே எழுவதில்லை. நட்புறவும் கூட்டு முயற்சியும் நிலவுகிற அதே சமயத்தில் தனி நபர்களின் குறிக்கோள்களும் லட்சியங்களும் அணியின் வெற்றிக்கு உதவியுள்ளன. அதனால்தான் டெல்லி போன்ற ஒரு வலிமையான அணியைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குள் நமது அணியால் நுழைய முடிந்தது.

ரயில்வே அணியைப் பொறுத்தவரை இந்தப் பந்தயம் எட்டியும் எட்டாமல் போன பழம். முதன் முறையாக இறுதிப் போட்டியை எட்டிய இவ்வணி சிறப்பாக ஆட ஆரம்பித்தாலும் வெங்கட்ரமணாவின் சுழற்பந்து வீச்சுக்கெதிராகச் சரிந்து விட்டது. இவ்வணியைச் சேர்ந்த நரேஷ் சூரி ஓர் அற்புதமான சதம் எடுத்தார். ஆனால் பின்னால் வந்த ஆட்டக்காரர்கள் நல்வாய்ப்புக்களைத் தவறவிட்டு விட்டனர். இரண்டாம் நாள் பிட்ச் சுழற்பந்து வீச்சுக்குச் சாதகமாக மாறிய போதும் இந்த அணி அதனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமல் போனதில் வெற்றி நிச்சயமாகக் கைநழுவிப் போயிற்று. போதாக் குறைக்கு ரயில்வே குழு முக்கியமான 'காட்ச்'களை வேறு கோட்டை விட்டது. தமிழ்நாடு அணி மூன்று விக்கெட் இழப்பிற்கு 174 என்று இருந்த நிலையில் ராபின் சிங்கையும் வி. சிவராமகிருஷ்ணனையும் ஐந்தாவது விக்கெட்டுக்கு 168 ரன்கள் எடுக்க அனுமதித்து விட்டது. ரயில்வேஸ் காப்டன் ஹைதர் அலிக்கும் அவரது அணியினருக்கும் வெற்றி கை நழுவிப் போனது இந்தக் கட்டத்தில்தான்.

வெற்றி பெற்ற தமிழ்நாடு அணிக்கும் இறுதிப் பந்தயத்தை முதன் முறையாக எட்டிய ரயில்வே அணிக்கும் வாழ்த்துக்கள்!

— குண்டுமணி

புகைப்படங்கள்: கே. என். சாரி

''தங்கள் 'பலவீனம்' என்ன என்பதை எதிரி நாட்டு மன்னன் தெரிந்துகொண்டு விட்டான் மன்னா!''

''எப்படிச் சொல்கிறீர் அமைச்சரே?''

''தங்களோடு சமாதானம் பேச இரண்டு பெண்களை மட்டுமே அனுப்பி வைத்திருக்கிறான்!''



சர்வர்: ''சாரை எங்கேயோ பார்த்த மாதிரி இருக்குதே...?''

வந்தவர்: ''இதே இடத்திலேதாம்பா... இரண்டு மணி நேரத்துக்கு முன்னாலே சாருக்கு என்ன வேணும்னு கேட்டுட்டு உள்ளே போனியே நினைவிருக்கா....?''

— அ. தெய்வசிகாமணி.



சுஜாதா

எழுதும்




வெவ்வெ வெவ்வெ வெவ்வே!
சந்திர சேகர்
சூட்டிப் பய.. என்னமா வெளையாடுறான்!
தேவெகௌடா
வேதாரண்யம் உப்பு சத்தியாக்கிரக யாத்திரை போறோம்! காந்தி வேஷம் கச்சிதமா இருக்கணும்!
ஆர்.வீ.
மூப்பனார்
என் வலையிலே விழுற வரைக்கும் உங்களை நான் விடப் போறதில்லே!
யார் வலையிலேயும் விழாதீங்க!.. என் வலையிலே விழுந்துடுங்க!
இ.காங்கிரஸ் செயலாளர்



கல்கி

1988 ஏப்ரல் 10
மலர் 46 இதழ் 37
பிரபவ பங்குனி 28



ஹெக்டே ஆட்சிக்கு ஆபத்து!

அரசியல்வாதி, ராஜதந்திரி, மாண்புமிகு என்ற சொற்களுக்கெல்லாம் அர்த்தமே மாறிப் போய்க் கேவலப்பட்டுப் போன நிலையில், கர்நாடக முதல்வர் ஹெக்டேயை என்னவென்று வர்ணிப்பது? அபூர்வமாக நாட்டில் பாக்கியிருக்கும் தேசபக்தர்களுள் ஒருவர்; கனவான்; என்று கூறுவதோடு நிறுத்திக் கொள்ள வேண்டியதுதான்! அவரது ஆட்சி, இந்திய மாநிலங்கள் அனைத்துக்கும் ஓர் எடுத்துக்காட்டாக இருந்து வந்திருக்கிறது: (பின்பற்றுவோர் யாருமில்லை என்பது வேறு விஷயம்!) அப்படிப்பட்ட அவரது ஆட்சிக்கு இன்று ஆபத்து முளைத்திருக்கிறது! உருவாக்கியிருப்பவர் தேவே கௌடா.

ராஜ்யசபைத் தேர்தலில் தமது கோஷ்டியினர் ஜனதா வேட்பாளர்களுக்கு வோட்டுப் போட மாட்டார்கள் என்பதாகத் தகராறு செய்ய ஆரம்பித்தார் தேவே கௌடா. கடைசி விநாடி வரை இந்தப் பிடிவாதம் நீடித்தது. தம்மைச் சுற்றி ஓர் அணி திரட்டிக் கொண்டு, கட்சியில் தம்மால் பிளவு உருவாக்கி விட முடியும் என்பதாகக் காட்டிக் கொண்டு, கடுக்காய் கொடுத்து வருகிறார் தேவே கௌடா.

தேவே கௌடாவின் இந்தப் போக்குக்குக் காரணத்தை ஊகிப்பது சிரமம் அல்ல. வேண்டியவர்களுக்குச் சலுகை; அதிகார துஷ்பிரயோகம் ஆகிய குற்றச்சாட்டுக்களை தேவே கௌடா மீது சுமத்தியது பி. ஜே. பி. ஒரு நேசக் கட்சியே இவ்வாறு குற்றம் சாட்டிய பிறகு ஹெக்டே என்ன செய்ய முடியும்? ஒரு நேர்மையாளர் என்ன செய்வாரோ அதைச் செய்தார். விசாரணைக்கு உத்தரவிட்டார். இப்போது தேவே கௌடா, கோஷ்டி சேர்த்துக் கொண்டு, 'கட்சியை என்னால் உடைக்க முடியும்' என்று கூறாமல் கூறி மிரட்டுகிறார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் பதவியை ராஜினாமா செய்த கௌடா, போதிய அளவு தமது துறைக்கு நிதி உதவி பெற முடியாததைக் காரணம் காட்டியிருக்கிறார். இது நொண்டிச் சமாதானமே. 'ராஜ்ய சபைத் தேர்தலுக்கு நிறுத்தி வைக்கப்பட்ட வேட்பாளர்கள் பற்றி முன்னறிவிப்பு இல்லை, விவாதம் இல்லை' என்று தமது ஒத்துழையாமைக்குக் காரணம் கூறுகிறார். இதுவும் புருடாதான். தம் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டால் பின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்பதை உணர்த்துவதே அவரது மெய்யான நோக்கம் என்று அனுமானிக்க இடமிருக்கிறது.

இந்த அச்சுறுத்தலுக்கு அஞ்சுகிறவர் அல்ல ஹெக்டே. 'கர்நாடகத்தின் ஜனதா கட்சி பிளவுபடாமல், வாக்கெடுப்பு நடத்தியோ, ஏகமனதாகவோ புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதாயின் தாம் விலகிக் கொள்ளத் தயார்' என்று இப்போது மட்டுமல்ல; முன்பே ஒரு முறையும் தெளிவாகக் கூறியிருக்கிறார் ஹெக்டே. அவருக்குப் பதவி ஆசை கிடையாது. ஆனால் பொறுப்புக்களை விட்டு விட்டு ஓடுகிறவரும் அல்ல அவர்.

ஜனதா கட்சித் தலைவர் சந்திரசேகர், தேவே கௌடாவைக் கடிந்து கொள்ள வேண்டாமோ? ஊஹும்! நமுட்டுச் சிரிப்புடன் வாளாவிருக்கிறார்! காரணம், அவருக்கே ஹெக்டேயைக் கண்டால் ஆகாது! கர்நாடகத்தில் மக்களின் அன்புக்குப் பாத்திரமாகி, சிறந்த முதலமைச்சர் என்று ஹெக்டே பேரும் புகழும் பெற்று வருவதே அவருக்குக் கஷ்டமாயிருக்கிறதோ என்னவோ! அல்லாத போனால் ஹெக்டேயின் கருத்தை அடியோடு புறக்கணித்து விட்டு, லோக தளம்(அ)வுடன் அவசரமாகத் தமது கட்சியை இணைக்க முன் வருவாரா? அஜித் சிங்கை இணைந்த கட்சியின் உபதலைவராக்கி ஹெக்டேயை ஓரம் கட்ட எண்ணுவாரா?

தேவே கௌடாவின் அச்சுறுத்தல்கள், சந்திரசேகரின் சின்னத்தனங்கள் இவற்றால் பாதிக்கப்படப் போவது ஹெக்டே அல்ல. அவரது பெருமையும் மதிப்பும் குறைந்து போகாது. ஜனதா கட்சிக்குத்தான் இதனாலெல்லாம் இழிவு ஏற்படும். தேச சரித்திரத்தின் ஒரு முக்கியமான கால கட்டத்தில், ராஜதந்திரத்துடன் சிறப்பாகச் செயலாற்ற வேண்டிய தருணத்தில், ஜனதா, தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போட்டுக் கொள்ளத்தான் வேண்டுமா?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.

— டாக்டர் மால்கம் ஆதிசேஷையா கூறுகிறார்:

"பள்ளிக்கூடங்கள் கல்விக்கூடங்களாக வேண்டும்!"

கேள்வி: கல்விக்கு நிறைய நிதி ஒதுக்க இந்தியப் பொருளாதாரம் இடங் கொடாது; நம் மக்கள் தொகை அதிகரிப்புக் காரணமாகப் பள்ளிகளில் மாணவ — ஆசிரியர் விகிதாசாரம் திருப்திகரமாக இல்லை. இதனால்தான் நமது கல்வித் தரம் உயரவில்லை என்று காரணங்கள் கூறப்படுகின்றன. நிதிப் பற்றாக் குறையும் மக்கட் தொகைப் பெருக்கமும் குறுகிய காலத்தில் தீர்க்கக்கூடிய பிரச்னைகள் அல்ல; எனவே அப் பிரச்னைகளுக்கிடையேயும் கல்வியின் தரத்தை மேம் படுத்தப் பாடுபட வேண்டியது அவசியமாகிறது. இதனை நாம் எப்படிச் செய்ய முடியும்?

பதில்: நமக்கு இருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு இடையிலும் மத்திய அரசு புதிய கல்வித் திட்டத்துக்கென 180 கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளது. இது மிகப் பெரிய முன்னேற்றம் என்றே கொள்ள வேண்டும். தமிழ்நாட்டுக் கிராமப்புறப் பள்ளிகளை மேம் படுத்த, சுமார் 4.5 கோடி செலவில் திட்டம் தீட்டப்பட்டு, அதற்கு மத்திய அரசின் அங்கீகாரமும் நிதியுதவியும் கிடைத்து விட்டன. இந் நிதியைக் கொண்டு தமிழக அரசு கரும்பலகைப் புரட்சி (operation black board) ஒன்றைச் செயல்படுத்தவிருக்கிறது. ஒவ்வொரு கிராமப்புறப் பள்ளிக்கும் குறைந்தபட்சம் இரண்டு வகுப்பறைகள் கட்டித் தந்து, அதில் ஆசிரியர், மாணவர், அமர்வதற்கு மேஜை, நாற்காலி, பாய்கள் முதலியன அளித்து, கரும் பலகைகள் வாங்கிப் பொருத்தி, அப் பள்ளிகள் ஒவ்வொன்றிலும் குறைந்தபட்சம் இரண்டு ஆசிரியர்களை நியமித்து, (அவர்களுள் ஒருவர் பெண் ஆசிரியையாக இருப்பார்) அவற்றைக் கல்விக்கு உகந்த இடமாக மாற்றுவது முதல் முயற்சியாக இருக்கும். குறிப்பாக, வளர்ச்சி குன்றிய, பின்தங்கிய கிராமப் பகுதிகளுக்கு இத் திட்டத்தில் முதலிடம் அளிக்கப்படும்.

அதே சமயத்தில் பாடத் திட்டத்தை நவீனப்படுத்தும் முயற்சியும் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இதற்கென ஒரு கமிட்டியை அமைத்து, அதற்குத் தலைமை ஏற்கும் படி தமிழக அரசு என்னைப் பணித்தது. முதல் வகுப்பிலிருந்து பன்னிரண்டாம் வகுப்பு வரை எல்லா வகுப்புகளுக்குமான பாடத் திட்டத்தைச் சீர்திருத்தி அளித்துள்ளோம். சீர்திருத்தத்தை ஒரே சமயத்தில் புகுத்தாமல் பகுதிப் பகுதியாக அமுல்படுத்தும் படியும் சிபாரிசு செய்துள்ளோம். வருகிற கல்வியாண்டில் முதல், மூன்றும், ஆறும் வகுப்புக்களில் புதிய பாடத் திட்டம் நுழைக்கப்படும். இத் திட்டத்தின்படி கல்வி கற்பிக்க எல்லா ஆசிரியர்களுக்கும் இரு வாரகாலப் பயிற்சி அளிக்கப்படும். இதனால் பள்ளிகளில் ஆரோக்கியமான சூழல் அமையப் பெற்று இதுவரையில் அங்கு நடக்காத கல்வி கற்பித்தல் மற்றும் கல்வி கற்றல் ஆகிய செயல்கள் நடைபெற ஆரம்பிக்கும் என்று நம்புகிறோம்.

பிரச்னைகளுக்கு இடையேயும் கல்வித் தரம் உயர வேண்டும் கல்வி அறிவு பெருக வேண்டும் — இதற்கு என்ன வழி என்று கேட்டீர்கள். ஆசிரியர்கள் மனம் வைத்தாலொழிய இது நடக்காது. ஜப்பான் முன்னேறிய நாடு. அங்குள்ள பள்ளிகளில் மாணவ— ஆசிரியர் விகிதாசாரம் 1:60 என்ற கணக்கில் இருக்கிறது; 1:30 என்ற விகிதாசாரமே சரியானதாகக் கருதப்படுகிறது. ஆனால் அதைப் போன்ற இரண்டு மடங்கு மாணவர்களை ஜப்பான் நாட்டு ஆசிரியர்கள் ஏற்று, நல்ல கல்வி வழங்குகிறார்கள். மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதையே இது உணர்த்துகிறது.

கேள்வி: இதுநாள் வரை ஆசிரியர்கள் கல்வியாளர்களாக இராமல் போனது ஏன் என்று நினைக்கிறீர்கள்?

பதில்: வேலை செய்யாமலே சோம்பலாய் இருப்பது மனித இயல்பு. இரண்டாவது காரணம், ஆசிரியர்களுக்குச் சரியான பயிற்சி அளிக்கப்படாததுதான். அவர்கள் பெற்றுள்ள பயிற்சி அவர்களைக் கடுமையான கிராமப்புறச் சூழல்களில் பணியாற்றத் தயார்ப்படுத்தவில்லை. கிராமப் பள்ளி ஆசிரியர்கள் எத்தகைய சூழல்களில் வேலை செய்ய வேண்டியுள்ளது என்று கற்பனை செய்து பார்ப்பதே கடினம். சிலர் அக்கம் பக்கத்து ஊர்களிலிருந்து பள்ளிக்கு வர வேண்டும். சரியான சாலை, போக்குவரத்து வசதிகள் இராது; மழைக் காலத்தில் சாலைகள் பழுதாகிவிடும். அல்லது, போக்குவரத்து வசதி கிடைக்காது. அத்தகைய சமயங்களில் ஆசிரியர்கள் பள்ளிக்குப் போகாமலே இருந்து விடுகிறார்கள்!

சமீபத்தில் பீஹார் அரசாங்கம் நடத்திய



ஆய்வின்படி அம் மாநிலத்தின் இளநிலைப் பள்ளி ஆசிரியர்கள் பலர் பள்ளிகளுக்குச் செல்வதேயில்லை; தங்களுக்குப் பதில் பள்ளிகளுக்குப் போய் வர வேறு சில ஆட்களை நியமித்து அவர்களுக்குத் தங்கள் சம்பளத்தில் முப்பது/நாற்பது சதவிகிதத்தைக் கொடுத்து விடுகிறார்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது. இவர்களுடன் ஒப்பு நோக்கத் தமிழ் நாட்டு ஆசிரியர்கள் எவ்வளவோ மேல். இருந்தாலும் இங்கேயும் இன்னும் அபிவிருத்திக்கு எவ்வளவோ இடமிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. அதற்காகத்தான் ஆசிரியர்களைத் தயார்ப்படுத்தப் புதிய பயிற்சி அளிப்பதைப் புதிய கல்வித் திட்டத்தின் ஓர் அம்சமாகச் சேர்த்திருக்கிறோம்.

கேள்வி: இவற்றைச் செய்த பிறகு மாணவர்களைப் பள்ளிக்கு வரச் செய்து, பொருந்தி உட்கார்ந்து கல்வி பயில வைப்பது எப்படி? கல்வியை இடையிலேயே கைவிட்டு விட்டு ஓடிவிடும் மாணவர்கள் தானே மிக அதிகமாய் இருக்கிறார்கள்...?

பதில்: மாநில திட்டக் கமிஷன் உறுப்பினராக இருந்தபோது இந்தப் பிரச்னையை ஆராயும் பொறுப்பு என்னுடையதாக இருந்தது. அப்போதைய கணக்கெடுப்பில், ஐந்தாம் வகுப்பை எட்டுவதற்குள் ஐம்பத்திரண்டு சதவிகிதம் குழந்தைகள் பள்ளிக்கு வருவதை நிறுத்தி விடுகிறார்கள் என்று கண்டறியப்பட்டது. சத்துணவுத் திட்டத்தால் இப்பிரச்னை குறைந்து, குழந்தைகள் ஒழுங்காகப் பள்ளிக்கு வருகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டது. கல்வித் துறையினர் எம்.ஜி.ஆரிடம் இவ்வாறு கூறிய போது, 'அது உண்மையல்ல' என்று நான் மறுத்தேன். சத்துணவு அளிப்பது மிக நல்ல செயலாக இருக்கலாம்; ஆனால் அதனால் மட்டுமே குழந்தைகளைக் கல்வியில் ஈடுபாடு கொள்ளச் செய்ய முடியாது. பள்ளிகளை விட்டுக் குழந்தைகள் விலகுவதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று: வறுமை. ஒரு குழந்தை பள்ளிக்குப் போகும் நேரத்தில் ஏதேனும் வேலை செய்து சில ரூபாய்கள் சம்பாதித்தால் கூட அது குடும்ப வருமானத்தைப் பெருக்க உதவும் என்று பெற்றோர்கள் கருதுகிறார்கள். இதுதான் எண்பது சதவிகிதக் காரணம். இருபது சதவிகிதக் காரணம், நமது கல்வி முறையில் உள்ள கோளாறு. அதாவது, மோசமான பாடப் புத்தகங்கள், மோசமான விதத்தில் கல்வி போதித்தல் ஆகிய இரண்டும்தான். இவை குழந்தைகளின் ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் தூண்டும் விதமாக இல்லை என்பதே உண்மை. குழந்தைகள் பரீட்சையில் தேறி மேல் வகுப்புகளுக்குப் போகாமல் ஒரே வகுப்பில் தொடர்ந்து இருப்பதற்கும் இதுதான் காரணம்.

கேள்வி: இப்போதுதான் கீழ் வகுப்புகளுக்குக் கட்டாய 'பாஸ்' முறை அமுலில் இருக்கிறதே?

பதில்: இருக்கிறது. ஆனால் அதனால் என்ன பயன்? எட்டாம் வகுப்புத் தேறிய மூன்று பெண்களை முதியோர் கல்வித் திட்டத்துக்குப் பயிற்சியாளர்களாகத் தேர்ந்தெடுக்க நான் முற்பட்டபோது அவர்களுக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது என்பது தெரிய வந்தது. பல முறை கேட்டும் அவர்கள் பள்ளியில் என்ன செய்தார்கள் என்பதைக் கண்டறிய முடியவில்லை. நமது பள்ளிகளில் கல்வி கற்பித்தலும் கற்பதும் சரியாக நடைபெறவில்லை என்பதற்கு இது ஒரு சான்று. எல்லாப் பள்ளிகளும் இவ்வளவு மோசமில்லை என்றாலும் பொதுவாக நிலைமை திருப்திகரமாக இல்லை என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

கேள்வி: வறுமை காரணமாகப் பள்ளிகளை விட்டு அகலும் மாணவர்களுக்குக் கல்வியுடன் இணைந்த சிறு வேலை வாய்ப்புகள் தந்து குறைந்தபட்ச ஊதியமாவது கொடுத்தால் அது உதவிகரமாய் இருக்குமே....?

பதில்: இதனை மிகக் குறைந்த அளவில் தான் செய்ய முடியும். சமூகம் ஏழைச் சமூகம்; நாடு ஏழை நாடு; பணம் எங்கிருந்து வரும்..? வறுமையை ஒழிக்க அரசாங்கம் முழு மூச்சுடன் முயன்று வெற்றி கண்டாலன்றி இப் பிரச்னை தீராது. கிராமப்புற வளர்ச்சிக்கு RLEGP, IRDP போன்ற திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளது உண்மை. ஆனால் இவற்றால் நிரந்தரத் தீர்வு ஏற்படுமா என்பது சந்தேகமே....

கேள்வி: குழந்தைகளின் கல்வி அறிவை மதிப்பிடப் பரீட்சைகள் தவிர வேறு அளவுகோல் கிடையாதா?

பதில்: பரீட்சைகள் எப்போதும் எல்லோருக்கும் நியாயமான அளவுகோலாக விளங்குவதாகக் கூறவே முடியாது. இன்னும் நான்கைந்து வருடங்களுக்குள் எல்லா

அரசுப் பள்ளிகளிலும் பரீட்சை முறையைப் படிப்படியாக ஒழித்துக் கட்டிவிட்டு செமஸ்டர் கல்வி முறையைப் புகுத்த வேண்டும் என்று சிபாரிசு செய்திருக்கிறோம். வினுடி வினு, கட்டுரை எழுதுவது; கூட்டு முயற்சியில் கற்பது, கலந்துரையாடுவது போன்ற முறைகளில் மாணவர்களின் தகுதி எடை போடப்படும். ஒவ்வொரு மாணவனின் படிப்படியான வளர்ச்சியையும் விவரிக்கும் cumulative record தயாரிக்கப்படும். அமெரிக்க மாநிலங்கள் அனைத்திலும் இம்முறைதான் நிலவுகிறது. ஆனால் நமது அரசாங்கமும் தனியார் துறையும் இந்த வளர்ச்சி ஏடுகளை ஒரு மாணவனின் தகுதிக்குச் சான்றாக ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்க வேண்டுமே! அதுவும் ஒரு பிரச்னை. காரணம் இதிலும் சோம்பேறித்தனம் புகுந்து கொள்கிறது. 'என்ன பாஸ் பண்ணியிருக்கே' என்றுதான் முதலில் கேட்பார்கள். தகுதியின் தரத்தை மதிப்பெண்களைக் கொண்டு அரை நிமிஷத்தில் தெரிந்து கொள்ளும் சுலபமான முறை இருக்கும் போது, படிப்படியான வளர்ச்சி பற்றி நிதானமாக ஆராய்ந்து பார்க்க அவகாசம் இருக்குமா? அக்கறை ஏற்படுமா...? சமூக, சமுதாயப் பார்வைகளும் கல்வி முறை மாற்றங்களுக்கு ஏற்ப ஓரளவு மாறினால்தான் முழுப் பயன் விளையும்.

கேள்வி: நமது கல்வி முறை நிறைய கல்வியாளர்களை உருவாக்குகிறது. ஆனால் அவர்களில் வெகு சிலரே பண்பாளர்களாக இருக்கிறார்கள்.... கல்வி, நல்ல மனிதர்களை உருவாக்க வேண்டாமா...?

பதில்: இதற்கு ஒரே வழி, உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் செயல்முறை விளக்கங்களை நிறையச் சேர்ப்பதுதான். உதாரணமாக பூகோளப் பாடம் என்றால், குழந்தைகள் எந்த ஊரில் வசிக்கிறார்களோ அந்த ஊரைப் பற்றிய பூகோள விவரங்களை அவர்கள் தாங்களே சென்று நேரில் கண்டறிய

* விடிய விடியப் படிப்பு...




— கலாக்ஷேத்ராவைச் சேர்ந்த சங்கர மேனனுடன் ஒரு சந்திப்பு.

கல்வி என்றால் என்ன...? ஒரு மாணவனின் இயல்பான திறமைகளையும் குணாதிசயங்களையும் மலரச் செய்து அதன் மூலம் அவனை வாழ்க்கைக்குத் தயார்ப்படுத்துவதுதான் கல்வி. இயற்கையில் மரம், செடி; கொடிகள் எவ்வளவு இயல்பாக வளர்கின்றனவோ அவ்வளவு இயல்பாக, வலியின்றி, வருத்தமின்றி, ஒவ்வொரு மாணவனும் முழுமையான வளர்ச்சியடைய வேண்டும். அவன் மனம் அமைதியுற்று, அவன் வாழும் சூழலில் அவன் இயல்பாகப் பொருந்தி வாழ்க்கை நடத்த வேண்டும்.

ஆனால் இவற்றில் எதையுமே நமது கல்வி முறை, மாணவர்களுக்கு அளிப்பதில்லை. எந்தப் பள்ளிக் கூடத்தில் பார்த்தாலும் கல்வி ஒரு திணிக்கப்படுகிற விஷயமாகவே இருக்கிறது. இது நேர் மாறுதலான பலனைத்தான் அளிக்கும்.

ஒரு சிறுவனுக்குக் 'கணக்கே வரவில்லை' என்று ஆசிரியர் புகார் செய்தால் அதற்கு என்ன அர்த்தம்? அந்தப் பாடத்துக்கு அவன் சரியாக அறிமுகப்படுத்தப்படவில்லை என்றுதான் அர்த்தம். ஒவ்வொரு மாணவனுக்கும் ஒரு தகுதி இருக்கிறது. அந்தத் தகுதியை உணர்ந்து ஆசிரியர்தான் அவனுக்கு உதவும் வகையில் கீழிறங்கி வந்து சொல்லித் தர வேண்டும். பல பட்டங்களைப் பெற்று, பெருமை கண்டவராக ஆசிரியர் இருக்கலாம். ஆனால் அவர் நடத்தும் பாடம் மாணவனுக்குப் புரியாவிட்டால் அந்தப் பட்டங்களால் பயனில்லை.

நமது கல்வித் திட்டத்தின் அடிப்படையே சரியில்லை. கல்வி கற்பிப்பது கல்வி பெறுவது ஆகிய இரண்டுமே பணம் சம்பாதிப்பதற்கு, ஒரு வழியாகத்தான் கருதப்படுகின்றனவே தவிர மனித மனத்தின் மேம்பாட்டுக்காகக் கல்வி போதிக்கப்பட வேண்டும்; கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய பாடம் நடத்தும் போது மாணவர்களை அத்தகைய சங்கங்களுக்கு அழைத்துப் போய் அவற்றின் செயல்பாட்டில் ஈடுபடுத்த வேண்டும். ஆசிரியர்களும் உடன் சென்று அவர்களுக்கு உதவலாம். பள்ளியிலேயே கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொடங்கலாம். இப்படியெல்லாம் செய்தால் தங்களைச் சுற்றி நடப்பனவற்றில் மாணவர்களுக்கு ஈடுபாடு ஏற்படும்; அவர்களுடைய சமூகப் பார்வை விரிவடையும். தவிர, விளையாட்டு, கலைகள் ஆகியன பாடத் திட்டத்தின் அம்சங்களாகச் சேர்க்கப்பட வேண்டும். மாணவர்கள் இப் பாடங்களைப் புறக்கணிக்காமல் இருக்க வேண்டுமானால் இவற்றையும் மதிப்பீடு செய்து மொத்த



முழுமையான மனிதர்களாக மலர...

மல் போகலாம்.

“நல்ல மாணவர்களை உருவாக்குவதில் கல்வி முறையைக் காட்டிலும் ஆசிரியர்களுக்குத்தான் அதிகப் பொறுப்பும் பங்கும் உண்டு. பிரம்பு முனையில் மிரட்டிச் சொல்லித் தரப்பட்டனவற்றை மறந்து விடுவோம்; பரீட்சை எழுதும் கட்டாயத்தில் படித்தனவற்றையும் பட்டம் பெறும் நோக்கில் பயின்றனவற்றையும் மறந்து விடுவோம். ஆனால் நம் மீது அன்புள்ள ஒருவரால், நமது நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒருவரால் நமக்குச் சொல்லித் தரப்பட்டனவற்றை என்றும் மறக்க மாட்டோம்.

“மாணவர்கள் மேலும் மேலும் என்னிடம் வந்து சேர்வார்களாக; அவர்களிடம் பேசும் பொழுது எனது மொழி தேன் சிந்தும் இனிமையுடையதாக இருக்கட்டும்” என்று ஓர் ஆசிரியர் வேண்டிக் கொள்வதாகத் தைத்திரியோ உபநிஷதத்தில் கூறப்பட்டிருக்கிறது.

— சீதா ரவி

மேலட்டையில்:
செல்வி ஷைலஜா சுப்பாராவ்
வண்ணப்படம்: யோகா

வதாகவோ பெறப்படுவதாகவோ தெரியவில்லை. பரீட்சைகள், வகுப்புகள் போன்ற கடுமையான பாகுபாடுகளும் மதிப்பீட்டு முறைகளும் இருக்கக் கூடாது. மாணவர்கள் தங்கள் தகுதிக்கு ஏற்ப ஒவ்வொரு பாடத்தைக் கற்கவும் தம் விருப்பம் போல் மேல் நிலை, கீழ் நிலை அல்லது நடுநிலை வகுப்புகளுக்கு மாறி மாறிச் செல்லவும் அனுமதிக்கப்பட வேண்டும். புத்திசாலி மாணவர்களை மட்டுமே தேர்ந்தெடுத்துப் பள்ளியில் சேர்த்துக் கொள்வது என்பதும் தவறு. ஏனென்றால் ஒவ்வொரு மாணவனுக்கும் ஓர் இயல்பான தகுதி நிச்சயம் இருக்கும். நமது பரிசோதனையில் அது வெளிப்படா வளர்ச்சிச் சான்றிதழில் குறிப்பிட வேண்டும். மதிப்பெண்கள் வழங்கும் முறையை ஒழித்து விட்டால், இப்பாடங்களின்பால் சில மாணவர்கள் கொண்டுள்ள வெறுப்பு நீங்கி ஈடுபாடு வளரும்... தடகள விளையாட்டுத் துறையில் உலக அரங்கில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம் என்றால் காரணம் என்ன....? மாணவப் பருவத்தில் விளையாட்டுப் பயிற்சி அளிக்கப்படாததுதான்.

கேள்வி: கல்வி கற்பிக்கும் முறைகளை நவீனப்படுத்தி, கம்ப்யூட்டர்களின் துணையுடன் பாடம் நடத்துவதும் அயல் நாடுகளில் தயாரிக்கப்படும் திரைப்பாடங்களை ஸாடிலைட் மூலம் பெற்று மொழி பெயர்த்து நம் மாணவர்களுக்குக் காட்டி விளக்குவதும் குழந்தைகளைக் கவர்ந்து, கல்வியின்பால் அவர்களை நாட்டம் கொள்ளச் செய்யும் அல்லவா?

பதில்: ஆறாம் வகுப்பு துவங்கி கம்ப்யூட்டர் வழிக் கல்வியை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். இதற்குத் தேவைப்படும் மினி கம்ப்யூட்டர்கள் அதிகம் விலை இல்லை. அடுத்த தலைமுறையினர், இப்போது நாம் டெலிபோனைக் கையாள்வதைப் போல் கம்ப்யூட்டர்களைக் கையாள்வார்கள் என நம்பலாம். ஆனால் சாட்டிலைட் மூலம் பாடங்கள் பெறுவது பற்றி இன்னும் சிறிது காலம் சென்ற பிறகே சிந்திக்க முடியும். கம்ப்யூட்டர் வழி கல்விக்கே நிறைய செலவழிக்க வேண்டிவரும்.

— புகைப்படம்: கே. வி. ஆனந்த்



உங்கள் குழந்தைக்கு ஊட்டுங்கள் காய்கறிகளின் சிறந்த சத்தூட்டத்தை!
:.பாரெக்ஸ்®-வெஜ்
6 மாதம் முதல்
புதிய ஃபாரெக்ஸ்-வெஜ். இது, வைட்டமின் வளம் செறிந்த காய்கறிகளான காரட், தக்காளி மற்றும் பச்சைப் பயற்றின் இயற்கையான ஊட்டச்சத்துக்களைக் கொண்டதாகும்.
இது, நன்றாக, முன்பே - பக்குவப்படுத்தப்பட்டது. ஆகவே இது, குழந்தையின் மென்மையான வயிற்றின் ஜீரண சக்திக்கு ஏற்றதாகும்.
:.பாரெக்ஸ்—சுவையுடன் வளரும் வழி

GX/41/203 TML


சுபஸ்ரீ

பரீட்சை எனும் பயங்கர அனுபவம்!

சுபஸ்ரீ (பதினோராம் வகுப்பு):

எனக்கு நினைவு தெரிந்த நாளிலிருந்து எந்தப் பரீட்சை என்றாலும் ஜுரம் வந்து விடும். இத்தனைக்கும் நான் நன்றாகப் படிக்கக் கூடிய பெண்தான். பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஐந்நூறுக்கு நானூற்று ஐம்பது வாங்கினேன். ஆனாலும், இந்தப் பயத்தை மட்டும் என்னால் தவிர்க்க முடியவில்லை. இத்தனைக்கும் என் அப்பாவும், அம்மாவும் 'அனாவசியமாய்ப் பயப்படாதே!' என்று அறிவுரை சொல்வார்கள். பரீட்சை முடிந்த பின் 'நன்றாகத்தானே எழுதியிருக்கிறோம். ஏன் அனாவசியமாய்ப் பயப்பட்டோம்' என்று என்னை நானே கடிந்து கொள்வேன். ஆனால் அடுத்த பரீட்சையின் போது 'பழைய குருடி கதவைத் திறடி' தான்....

கல்யாண சுந்தரம்:

ஹையர் செகண்டரி பள்ளி ஒன்றின் துணைத் தலைமை ஆசிரியரான இவரைக் கேட்டபோது வித்தியாசமான கருத்தைச் சொன்னார்: "இந்தப் பரீட்சை பயம், என்கிற வார்த்தை. கான்வென்ட் பள்ளிகளில்தான் அதிகம் உபயோகப் படுத்தப்படுகிறது. மாநிலமெங்குமுள்ள நூற்றுக்கணக்கான அரசாங்க, மற்றும் நகராட்சிப் பள்ளிக்கூடங்களில் கிடையாது. காரணம் கல்வித்தரம்தான். ஒன்பதாம் வகுப்பு வரை பாஸ் மார்க் என்ற கண்டிப்புக் கிடையாது. ஏறத்தாழ ஆட்டமாடிக் பாஸ் போலத்தான். இதனால் பரீட்சை என்றால் பயமில்லை என்பது மட்டுமில்லை. பரீட்சை என்றால் ஒரு சீரியஸ்னஸ்ஸே இல்லாமல் போய் விட்டது. பத்தாம் வகுப்பிலும் இதே போக்கு தொடர்கிறது. ஆனால் அது பொதுப் பரீட்சை. பாஸ் செய்யக் குறைந்த பட்ச மார்க்காவது வாங்க வேண்டும். இதனால் பலர் ஃபெயிலாகிறார்கள். இதுவரை பயப்படாதவர்கள் திடீரென்று பயத்துக்கு ஆளாகிறார்கள்.



© கல்யாணசுந்தரம்



© ராதிகா

குழந்தை ராதிகா (யூ. கே. ஜி.):

"பரீட்சை எழுதுவேன். அப்புறம் ஃபர்ஸ்ட் ஸ்டாண்டர்டு போயிடுவேன்" என்றது மகிழ்ச்சியுடன். உனக்குப் பரீட்சை எழுதப் பிடிக்குமா? என்ற போது, "ஓ! அப்பத்தானே வேற கிளாஸுக்குப் போகலாம்" என்று பதில் வந்தது. ராதிகாவின் அம்மா திருமதி காஞ்சனா மோகன் சொன்னார்: பரீட்சை பயம் என்பது என்னவென்று தெரியாமல் வளர்க்க வேண்டும் என நினைக்கிறோம். ஆனால் சில சில வீடுகளில் பார்க்கிறேன். சின்னக் குழந்தைகளிடம் போய், 'பரீட்சை.... படிச்சியா....? விளையாடாதே!' என்றெல்லாம் கண்டிக்கிறார்கள். இது தவறு என்பது என் அபிப்ராயம்.

கோவிந்தகுமார்:

ஆறும் வகுப்பு வரை தமிழ் மீடியத்தில்தான் படித்தேன். நான் தான் வகுப்பில் முதல் ராங்க். இப்போது ஆங்கில மீடியம். கொஞ்சம் கஷ்டமாய்த்தான் இருக்கிறது. தினமும் ஒழுங்காய்ப் படித்து விடுவேன். பரீட்சை சமயத்தில் தினம் காலை நாலு மணிக்கு எழுந்து விடுவேன். படித்து முடித்து விட்டால் டீ.வி.யில் ஒலியும் ஒளியும், சினிமா, கிரிக்கெட் இவற்றை விடமாட்டேன். முடிக்கவில்லையெனில் டீவி பார்க்க மாட்டேன். பரீட்சை என்றால் எனக்குப் பயமில்லை. ஆனால் பரீட்சைக்குப் பயப்படும் சில மாணவர்கள் என் வகுப்பில் இருக்கிறார்கள்.



© கோவிந்தகுமார்

பிரமீளா ரவி:

பத்து வருட ஆசிரியை அனுபவமுள்ள இவர் சொல்கிறார்: பரீட்சை என்றால் பல மாணவ, மாணவிகளுக்குச் சிம்ம சொப்பனமாய் இருப்பது உண்மைதான். இதற்கு முக்கிய காரணம் பெற்றோர்கள் தான். வகுப்பில் ஒரே ஒருவர்தான் முதல் ராங்க் வர முடியும் என்கிறதையே மறந்து விட்டு, அத்தனை பெற்றோர்களும் தங்கள் பையன் அல்லது பெண் முதல் ராங்க் வாங்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். நடைமுறையில் சாத்தியமில்லாத ஒன்றுக்காக, குழந்தைகளை வாட்டி வதைப்பது சரியில்லையே! பயத்துக்கு இன்னும் சில காரணங்களும் உண்டு. நல்ல மார்க் எடுக்காவிட்டால் வீட்டில் கிடைக்கப் போகும் தண்டனை பயத்தை ஏற்படுத்துகிறது. 'உன் அண்ணன், அக்காவெல்லாம் முதல் ராங்க். நீதான் ஒழுங்காய்ப் படிப்பதில்லை' என்றோ, 'உன் கூடப் படிக்கும் காயத்திரியும், கௌரியும் வாங்குகிற மாதிரி நீ ஏன் மார்க் வாங்குவதில்லை' என்றோ பெற்றோர்கள் ஒப்பிட்டுத் திட்டுவது மாணவர்களின் மனோதிடத்தை மிகவும் பாதிக்கிற விஷயம். சமீபத்தில் சென்னை பள்ளிக்கூட மாணவன் ஒருவன், காலையில் பரீட்சை எழுதிவிட்டு வந்தவன் சரியாக எழுதாததால் மாலையில் தற்கொலை செய்து கொண்டு விட்டான். காரணம், தன்னுடைய ஒரு அண்ணன் இஞ்சினியர்; இன்னொரு அண்ணன் டாக்டர். இவனை இந்தப் பரீட்சையை நன்றாய் எழுது எழுது என்று மிரட்டியிருக்கிறார்கள் வீட்டில். அதனால் தற்கொலை செய்து கொண்டுவிட்டான்!

பேட்டி: எஸ். சந்திரமௌலி

படங்கள்: சோமு



© பிரமீளா ரவி


களைப்பும் தாகமும் உங்களை வாட்டும்போது உங்கள் உடலுக்குத் தேவை உடனடி சக்தி.

(வெறும் தாகம் தணிக்கும் பானம் அல்ல)



- க்ளுகோன்-ஸி யில் உள்ள க்ளுகோஸ், உங்களைச் சுறுசுறுப்புடன் வைக்க உடனடி சக்தி அளிக்கிறது.
- பற்கள், எலும்புகள், உடல் திசுக்கள் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு மிக முக்கியமானது, விட்டமின்-ஸி. அதன், ஒரு நாளைய தேவையின் மூன்றில் ஒரு பங்கை இது அளிக்கிறது.
- தயாரிப்பதும் சுலபம். நாலு முழு தேக்கரண்டி க்ளுகோன்-ஸி யை குளிர்ந்த தண்ணீரிலே கலக்கவும். ஆரஞ்சுச் சுவை கொண்ட, புத்துணர்ச்சியூட்டும் பானம் தயார்.

விலைமிக்க சர்க்கரை சேர்க்க தேவை இல்லை



ஆரஞ்சுச் சுவைகொண்ட, சக்தி பானம்

க்ளுகோன்-ஸி

அருந்திய உடனே அளித்திடும் 'புத்துயிர்'

HTA 1648

13

கவே, செக்ஷன் 302 படி.

வினோத்குமார் இரண்டு சட்டைகள் போட்டுப் பார்த்து, திருப்தியடையாமல் கழற்றி, மூன்றாவதில் சமாதானமானான். நிவிதாவுக்குப் பிடித்த காப்பிக் கொட்டை நிற பேண்ட் அணிந்தான். லேசாக சென்ட் பீய்ச்சிக் கொண்டான். மணி பர்சும், கர்சீப்பும் எடுத்துக் கொண்டு கட் ஷூ அணிந்து கொண்டு வீட்டு வாசலுக்கு வந்தான்.

அப்பா காற்றோட்டமாக நாற்காலி போட்டுக் கொண்டு, மடியில் டிரான்சிஸ்டர் வைத்துக் கொண்டு, ஸ்டூலின் மேல் தட்டு நிறைய காராபூந்தி வைத்துக் கொண்டு காலையில் வந்த ஆங்கிலத் தினசரியை ஒரு வரி விடாமல் படித்துக் கொண்டிருந்தார்.

வினோத்குமார் தன் மோட்டார் பைக்கை அடைந்து, அதன் சைடு பாக்ஸில் இருந்து துணி எடுத்து மேலாகத் துடைத்தான்.

''வினோத், இங்கே வா.''

''என்னப்பா?''

''அம்மா சொன்னாங்களா?''

''எதை?''

''அப்போ சொல்லலேன்னு தெரியுது. ஏன் தள்ளிப் போட்டுக்கிட்டே இருக்கே வினோத்?''

''எதைச் சொல்றீங்கப்பா?''

''புரியாத மாதிரிப் பேசாதே. கல்யாணம்ங்கிறது காலா காலத்தில நடக்க வேண்டிய விஷயம். அதை ஜவ்வு மாதிரி இழுத்துக்கிட்டே இருக்கக் கூடாது. நீ படிச்சவன். பக்குவப்பட்டவன். சுயமாச் சம்பாதிக்கிறவன். உன் முடிவுகள்ல தப்பு இருக்காதுன்னு எனக்கு அசாத்திய நம்பிக்கை எப்பவும் உண்டு. ஜாதி, ஜாதகம் இதிலே எனக்கு நம்பிக்கை கிடையாது. எனக்கு நம்பிக்கை இருந்து சொன்னாலும் நீ ஏத்துக்கிற நிலையிலே இல்லை. வினோத், சுத்தி வளைக்காமக் கேக்கறேன். எங்க மருமகளை எப்போ கண்ல காட்டப் போறே? தேதி பார்க்கிறதுக்கு எப்போ அனுமதிக்கப் போறே?''

பைக்கைப் பார்த்துக் கொண்டு சொன்னான் வினோத்:

''இன்னிக்கு ராத்திரி உங்க கேள்விக்கெல்லாம் பதில் சொல்றேன்ப்பா,'' என்று பைக்கில் அமர்ந்து புறப்பட்டான்.

மவுண்ட் ரோடில் கலந்து, மாலை நேரப் போக்குவரத்து நெரிசலில் கவனமாக ஓட்டி, தன் பில்டிங் வந்து, அதன் போர்ட்டிகோவில் ஓரமாக பைக்கை நிறுத்திவிட்டு மணி பார்த்தான். 5.05. ஐந்து நிமிடம்தான் தாமதம்.

இன்றைக்கு நிவிதாவிடம் கேட்டுவிட வேண்டும் தீர்மானமாக. இதுநாள் வரையில் தம்பிக்கு ஒரு நிலையான வேலை கிடைக்கட்டும், திருமணத்தைப் பற்றிச் சிந்திக்கலாம் என்று சொல்லி வந்தாள். இப்போது வித்யாசாகருக்கு வேலை கிடைத்து விட்டது. நிவிதாவின் வேலையை அவள் தொடரவும், சம்பளம் முழுவதையும் அவள் குடும்பத்திற்கே அனுப்பவும் சம்மதம் தர நான் தயாராய் இருக்கிறேன்.

இனிமேலும் தள்ளிப் போட... எந்தக் காரணமும் இல்லை.

ஸ்டாண்ட் போட்ட பைக்கில் அமர்ந்து கொண்டு அலுவலகம் முடிந்து பஸ்ஸுக்குச் செல்லும் வாடின மனிதர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டே, நிவிதாவிற்காகக் காத்திருந்தான் வினோத்குமார்.

தத்தம் மேஜைகளின் டிராயர்களைப் பூட்டி விட்டு, பேனாக்களை மூடிவிட்டு, டைப்ரைட்டர்களைப் போர்த்திவிட்டு, விரல்களில் சொடக்கு எடுத்துக் கொண்டு, டாய்லெட்டில் முகம் கழுவிக் கொண்டு, பஸ் பாஸை எடுத்து அவசரமாய் எடுக்கத் தயாராய் பாக்கெட்டில் வைத்துக் கொண்டு...

அலுவலகம் காலியாகிக் கொண்டிருந்தது.

நிவிதா கைப்பையைத் திறந்து, சிறிய மேக்கப் பாக்ஸ் எடுத்து, அதன் மேல் மூடியின் உள்பக்கம் இருந்த கண்ணாடியில் முகம்

பட்டுக்கோட்டை பிரபாகர்

பார்த்துக் கொண்டாள். கைக்குட்டையால் முகத்தை அழுந்தத் துடைத்துக் கொண்டு, மற்றொரு சிறிய டப்பாவில் இருந்த ரோஸ் பவுடரைக் கைக்குட்டையில் தொட்டுத் தொட்டு முகத்தில் சீராகப் பரப்பிக் கொண்டு, எடுத்த ஸ்டிக்கர் பொட்டை வைத்துக் கொண்டு, சூரிதாரின் மேல் துப்பட்டாவைச் சரி செய்து கொண்டு எழுந்தாள். கைப்பையைத் தோளில் மாட்டிப் புறப்பட்ட போது...

பியூன் எதிரே வந்து, "அம்மா, உங்களை ஆர். எம். உடனே அவர் ரூமுக்கு வரச் சொன்னார்" என்றான்.

நிவிதா கைக்கடிகாரம் பார்த்து, அனேகமாக வினோத்குமார் வந்து கீழே காத்திருப்பான் என்கிற தவிப்புடன், அலுவலக நேரம் முடிந்த பிறகு எதற்காக வரச் சொல்கிறார் என்கிற கேள்விக் குறியுடன், ஜெனரல் மானேஜரின் அறையை நோக்கி நடந்தாள்.

கதவைத் தட்டிவிட்டுத் தள்ளிக் கொண்டு உள்ளே வந்தாள்.


தன் நாற்காலியில் அமர்ந்து புகைத்துக் கொண்டிருந்தான் ஷியாம். அவனுக்கு வலதுபுறம் அந்தோணி அமர்ந்திருந்தார்.

"வாங்க மிஸ் நிவிதா. உக்காருங்க."

"இல்லை சார். நான் போகணும். என்ன, சொல்லுங்க?"

"அவ்வளவு அவசரமாச் சொல்ற விஷயமில்லைங்க. ப்ளீஸ், உக்காருங்க."

மேஜைக்கு இந்தப் பக்கத்து குஷன் தைத்த நாற்காலியில் அமர்ந்தாள்.



"ஆத்மா டிஸ்டிரிபியூட்டர்ஸ் ஹரி உங்களுக்கு எந்த வகையில் சொந்தம்?" என்றான் ஷியாம் கண்ணாடி பேப்பர் வெயிட்டை உருட்டிக் கொண்டே.

"அவர் யாருன்னே எனக்குத் தெரியாது சார். சொந்தம் எல்லாம் இல்லை."

"அன்னைக்கு போன்ல கூப்பிட்டான். நீயும் பேசினே. பேசி முடிச்சதும் நானும் கேட்டேன். சொந்தமான்னேன். ஆமாம்னு சொன்னியே பேபி?" என்றார் அந்தோணி.

"ஏதோ வாய் தவறிச் சொல்லிட்டேன். அவரை எனக்குத் தெரியாது சார்."

"சரி, அன்னைக்கு யாருன்னே தெரியாத அந்த ஹரி எதுக்காகம்மா உனக்கு போன்

செஞ்சான்?''

''அது...'' தயங்கினாள். எப்படிச் சொல்வது? தான் காதலிப்பதைச் சொல்லியாக வேண்டும். தன் காதலனைப் பற்றித் தவறாகச் சொன்னதைச் சொல்லியாக வேண்டும். கடிதம் வந்ததை, போய் ஹோட்டலில் ஏமாந்ததை எல்லாம் சொல்லியாக வேண்டும். இதெல்லாம் எவ்வளவு அந்தரங்கமான விஷயங்கள். இதை ஏன் நான் சொல்ல வேண்டும்?

''சொல்லுங்க மிஸ் நிவிதா, காரணத்தோடதான் கேக்கறோம்'' என்றான் ஷியாம்.

''ஸாரி சார். அது ப்யூர்லி பர்சனல். எதுக்காக இந்தவிசாரணைன்னு நான் தெரிஞ்சுக்க விரும்பறேன் சார்!''

''அந்த ஹரிக்கு நீங்க ஏதோ ஒரு வகையிலே உதவி செய்றீங்க, இல்லேன்னா செய்யப் போறீங்கன்னு உங்க செக்ஷன் ஹெட், மிஸ்டர் அந்தோணி சந்தேகம் தெரிவிச்சார். விசாரிக்க வேண்டியது என் கடமை.''

''உங்க கடமையை நான் தப்பு சொல்லலே. என்னை எந்த வகையிலே சந்தேகப் படறீங்கன்னுதான் புரிஞ்சுக்க முடியலே. சார், நான் ஒரு நேர்மையான குடும்பத்திலேர்ந்து வந்தவ. பணத்தைப் பெரிசா நினைக்காதவ. நேத்து ஒரு தடவை கூப்பிட்டு எனக்கு அறிவுரை மாதிரி சொன்னீங்க. இன்னைக்கு எனக்கு வந்த போன் செய்தியை எல்லாம் விசாரிக்கிறீங்க. இது என்னை அவமானப் படுத்தற மாதிரி இருக்கு.''

''இருங்க மிஸ் நிவிதா. உணர்ச்சிவசப் படாதீங்க. என் சீட்டிலே நீங்க இருந்தாலும் கிடைச்சிருக்கிறதகவல்களை வச்சிச் சந்தேகப் படத்தான் செய்வீங்க.''

''அப்படி என்ன சார் தகவல் வச்சிருக்கீங்க?''

''என்னைச் சொல்ல வேண்டிய சூழ்நிலைக்குக் கொண்டாந்துட்டீங்க. ஒக்கே. மிஸ் நிவிதா, நேத்து ஹரிகிட்டேர்ந்து உங்களுக்கு ஒரு கவர் வந்ததா?''

''ஆமாம். வந்தது.''

''அதிலே என்ன எழுதியிருந்திச்சு?''

''என் சொந்த விஷயம் அது.''

''சொல்ல வேணும். சரி. அதன்படி சாயங்காலம் இம்ப்பீரியல் ஹோட்டல் போனீங்களா?''

''சார்!'' என்று வெகுவாக ஆச்சர்யப் பட்டாள்.

''சொல்லுங்க. உங்க மேல் சந்தேகம் ஏற்பட்டதாலே உங்க நடவடிக்கைகளைக் கண்காணிச்சோம். நீங்க போனீங்க. ரெஸ்ட்டாரெண்ட்ல ஹரியைச் சந்திச்சீங்க. சதித் திட்டம் பேசினீங்க. ஒப்புக்கறீங்களா?''

''நோ!'' என்று படபடத்தாள் நிவிதா. ''நான் ஹோட்டல் போனது உண்மை. ஆனா ஹரி கோழைத்தனமா என்னைச் சந்திக்க வரலே. ரெஸ்ட்டாரெண்ட்ல ஒரு மணி நேரம் காத்திருந்து சோர்ந்து போய்ப் புறப்பட்டுப் போனேன். ஹரி யாருன்னும் எனக்குத் தெரியாது. அவர் முகம் எப்படி இருக்கும்னும் எனக்குத் தெரியாது. அவர் போன்ல சொன்ன செய்தி வேறே. என் சொந்த வாழ்க்கையைப் பாதிக்கிற செய்தி. அது சம்பந்தமா பேசத்தான் வரச் சொன்ன எடத்துக்குப் போனேன். ஆனா அவன் வந்து பேசலே.''

''பேபி! இவ்வளவு பொய் ஆகாது'' என்றார் அந்தோணி.

''நான் எதுவுமே பொய் சொல்லலே சார்.''

''போன்ல சொன்னான். லெட்டர்ல சொன்னான். ஆனா நேர்ல மட்டும் சொன்னபடி வரலே. எவ்வளவு பெரிய ரீல் சுத்தறே பேபி. காலேல நானே போய் ஹோட்டல் ரிசப்ஷன்ல விசாரிச்சேன். ஈவினிங் அவன் வந்து நீ வந்தா ரெஸ்ட்டாரெண்ட்டுக்கு வரச் சொல்லிட்டுக் காத்திருந்தானாம். நீ வந்ததும் ரிஸப்ஷனிஸ்ட் விவரம் சொன்னதும் வழி விசாரிச்சிக்கிட்டுப் போனியாம். உண்மையா, இல்லேயா?''

''உண்மைதான். ஆனா ரெஸ்ட்டாரெண்ட்ல நான் இருந்த ஒரு மணி நேரத்திலே யாருமே என் கிட்டே வந்து பேசலே.''

ஷியாம் பெருமூச்சு விட்டான். அந்தோணியைப் பார்த்தான். ''ரொம்ப முரண்பாடா பேசறாங்க. பிடிவாதமாப் பேசறாங்க. என்ன செய்றது சார்?'' என்றான்.

நிவிதாவிற்குக் குழப்பமாக இருந்தது. அதே சமயம் அவமானமாகவும் இருந்தது. யாரோ மலர்க்கொத்து அனுப்புகிறார்கள். யாரோ புடைவை அனுப்புகிறார்கள். யாரோ ஹரி என்று போனில் பேசுகிறான். கடிதத்தில் இடம் குறிப்பிட்டு அழைக்கிறான். போனால், வந்து சந்திக்காமல் ஏமாற்றுகிறான். அலுவலகத்தில் சந்தேகப்படுகிறார்கள். என் செயல்களை வேவு பார்க்கிறார்கள். தனியே அழைத்துக் கடுமையாக விசாரிக்கிறார்கள்.

இதெல்லாம் என்ன?

என்னைச் சுற்றி என்ன நடக்கிறது? துரோகமா, சதியா, நானா? என்னையும் அறியாமல் ஏதோ ஒரு மாய வலையில் சிக்கிக் கொண்டிருக்கிறேனா?

''மிஸ் நிவிதா, நீங்க போகலாம்'' என்றான் ஷியாம்.

''சார், தயவு செஞ்சு என் வார்த்தைகளை நம்புங்க. வெளியே சொல்ல விருப்பம் இல்லாத ஒரு விஷயம் காரணமாத்தான் நான் ஹரியைச் சந்திக்கப் போனேன். நம் கம்பெனிக்கு எதிரா எந்த நடவடிக்கைகளிலேயும் நான் இறங்கலே. அப்படிப்பட்ட பொண்ணு இல்லே நான். எப்படியோ என் மேல் சந்தேகப் பார்வை விழும்படியா நான் நடந்துக்கிட்டிருக்கேன்ங்கிறதை நினைச்சா வருத்தமா இருக்கு.''

''உங்க விளக்கம் போதும் நிவிதா. நான் அலுவலகம் சம்பந்தப்பட்ட விஷயங்களிலே ரொம்ப கண்டிப்பானவன். யாரோ புடைவை அனுப்பினதுக்காக உங்க உணர்ச்சிக்கு மதிப்பு கொடுத்து எச்சரிக்கைக் கடிதம் நோட்டீஸ் போர்டிலே வைக்க அனுமதி

கொடுத்தேன். அவ்வளவு தன்மானம் பார்த்த உங்க மேலேயே சந்தேகப்படும் படியா ஒரு நிலை உருவாகியிருக்கு. சொந்த விஷயம்னு சொல்றீங்க. ஏதேதோ மழுப் பறீங்க. இது வரைக்கும் உங்க மேல் குற்றம் சுமத்த எங்ககிட்டே எந்த ஆதாரமும் இல்லை. விளக்கம் எதுவும் வேணும். ஏதாவது துரோக எண்ணம் மனசுல இருந்தா, அதைச் சுத்தமாத் துடைச்சுடுங்க. மீறிச் செயல்பட்டு, ஆதாரபூர்வமா மாட்டிக் கிட்டா, அப்புறம் பொண்ணுச்சேன்னு இரக்கம் எல்லாம் காட்ட மாட்டேன். சட்ட ரீதியான நடவடிக்கைகள்ல இறங்கிடுவேன். எச்சரிக்கையா இருங்க. போகலாம்'' என்றான் ஷியாம் கடுமையாக.

நிவிதா கூசிக் குறுகிப் போனாள். ஒரு தவறும் மனதறியச் செய்யாத நிலையில், இவ்வளவு கடுமையான வார்த்தைகள்!

இன்னும் ஒரு விநாடி அதிகமாக அங்கே நின்றால் வெடித்து அழுது விடும் நிலையைத் தவிர்த்து, குரல் கம்ம, ''திஸ் ஈஸ் டூ மச் சார். நான் எந்தத் தப்பும் செய்யலை. உயர் அதிகாரிங்கற மரியாதைக்காக எதிர்த்து எதுவும் பேசாமல் போறேன்.'' என்று சொல்லி விட்டு வேகமாக வெளியேறினாள் நிவிதா.

''எப்படி எப்படியெல்லாம் கேக்கறேம்? சொல்றாளா பார்த்தீங்களா? அறிமுகமே இல்லையாம். முகம் எப்படி இருக்கும்னே தெரியாதாம். ஆனா அவன் சொன்ன எடத்துக்குப் போவாளாம். கேட்டா சொந்த விஷயமாம். இவ போனாளாம். ஆனா அவன் வந்து பேசலையாம். எவ்வளவு அப்பட்டமான பொய் சார்! நாளைக்கு அந்த ஹோட்டல் ரிஸப்ஷனிஸ்ட் பத்மநாபனை நம்ம ஆபீசுக்குக் கூட்டி வந்து அவன் முன்னாடி விசாரிக்கணும்'' என்றார் அந்தோணி.

''அதுக்கெல்லாம் அவசியம் இல்லை. நாம உஷாரா இருக்கோம், கண்காணிக்கிறோம்னு தெரியப்படுத்தியாச்சு. இனி ஹரியோட ஒத்துழைக்க நினைக்க மாட்டா. ஆனாலும் நம்ம கண்காணிப்பை நிறுத்திட வேணாம். பார்க்கலாம்'' என்று எழுந்தான் ஷியாம்.

தன்னை நோக்கி வந்த நிவிதாவின் முகத்தைப் பார்த்த வினோத் குமாருக்குப் 'பக்'கென்று இருந்தது.

''நிவி, என்ன இது, பேயறைஞ்ச மாதிரி வர்றே? எல்லாரும் போய்ட்டாங்க. ஏன் லேட்டு? என்னாச்சும்மா? சொல்லு.''

''ஒண்ணுமில்லை. போகலாம், வாங்க.''

''பின்னே ஏன் இப்படி இருக்கே?''

''எப்படி இருக்கேன்? நல்லாதான் இருக்கேன். தம்பி போன் செஞ்சான். எந்த ரயில்லயும் பர்த் கிடைக்கலையாம். திருவனந்தபுரம் போய் அங்கேர்ந்து பஸ் மாறிப் போறானாம். ஒன்பது மணிக்கு பஸ்.''

''அப்போ முழுசா மூன்றரை மணி நேரம் இருக்கு. என்ன செய்யலாம், சொல்லு. பீச்சுக்குப் போய்டலாமா?''

வந்தார்கள். அமர்ந்தார்கள்.

நடந்ததை எல்லாம் வினோத் குமாரிடம் சொல்லி விடலாமா? யோசித்தாள்.


''நிவிதா, நீ நார்மலா இல்லை.''

''ஆமாம், நார்மலா இல்லை.''

''என்ன நடந்துச்சும்மா?''

''சொல்றேன்'' என்றாள்.

(தொடரும்)



ஒலிம்பிக் காணிக்கை

ராஜா பாலச்சந்தர்

அதிகமாகப் போனால், அந்தச் சாக்கடையின் அகலம் மூன்று அடிதான் இருக்கும்.

அதைத் தாண்டினால்தான், பாண்டியனால் தன் வீட்டை அடைய முடியும்.

தாண்டினான்.

நெடிய பாரம்பரியமற்ற சாக்கடை அது. ஒரு திடீர் பிரசவத்தில் தோன்றிய அழுக்குப் பிள்ளை. அது உண்டான கதை சற்று வித்தியாசமானது.

சுமார் ஐம்பது குடிசைகள் கொண்ட சின்னக் கிராமம் அது. வாக்காளர்கள் குறைவு என்பதால், இதுவரை அரசியல் வாதிகளின் பாதம்படாத புண்ணிய பூமி.

அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத இடம். ஆனால், அமைதிக்குப் பஞ்சமில்லை. அங்கு திடீரென்று முளைத்தது ஒரு பிரும்மாண்டமான தொழிற்சாலை. கிராமத்தின் சுற்றுப்புறங்களை வி ழு ங் கி ஏப்பம் விட்டது.

அதிலிருந்து சிறிய நச்சுப் புகையால் அவதியுற்றனர் மக்கள். அது ஒருபுறம் இருக்க, அவர்களின் குடிசைகளுக்கு முன் பாகத் தன் கழிவுநீரைப் பீச்சியடித்தது தொழிற்சாலை.

கழிவுநீர் துர்நாற்றம் வீசியது. குமட்டலை ஏற்படுத்தியது.

கிராம மக்கள் எதிர்த்தனர். ஆனால், எதிர்ப்பில் வலுவில்லை. வேறு வழியின்றி, அந்தத் துன்பத்துடன் இணைந்து வாழப் பழகிக் கொண்டனர்.

ஆனால், பிரச்னை அத்துடன் முடியவில்லை.

கழிவுநீர் தேங்கி, சாக்கடையாக மாறியது. சில வாரங்களில் சிறிய வாய்க்காலானது. பிறகு, அருகே ஓடிய ஆற்றுடன் உறவாடியது; வற்றாத ஜீவநதியாக மாறியது.

பன்றிகள் அதில் பரதநாட்டியம் பயின்றன. ஏகாந்தமாக நீந்தித் திளைத்தன எருமைகள். கொழுத்துப்போன கொசுக்களின் கொட்டம் கொடூரமானது.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகத் தன் அகலத்தில் பெருகிக் கொண்டே இருந்தது சாக்கடை.

இதைப் பற்றித் தொடர்ந்து கவலைப்பட்ட ஒரே ஜீவன் பாண்டியன்தான். இளைஞன். ஓரளவு படித்தவன். தன் கிராமத்தின் மீது பற்றுக் கொண்டவன்.

பக்கத்து நகரில் இருந்த சுகாதார அதிகாரியைப் பார்த்தால், பலன் கிடைக்குமெனக் கேள்விப்பட்டான்.

பிரயாசைப்பட்டுச் சென்றான்.

பெரிய கட்டடம் அவனை அயர வைத்தது. வயிறும், வழுக்கையுமாக அமர்ந்திருந்தவரை வணங்கினான்.

''என்னடா பையா விஷயம்?''

கூறினான்.

அதிகாரி பரிதாபப்பட்டார், ''ச்ச்.... இதுக்கு நான் எதுவும் செய்ய முடியாது. மாவட்டக் கிராம நல அதிகாரியைப் போய்ப் பாரு.''

விசாரித்துக் கொண்டு, அங்கேயும் சென்றான் பாண்டியன். வணங்கினான். வந்த விஷயத்தைக் கூறினான்.

அதிகாரி சிரித்தார். ''நாட்டில் எவ்ளோ பிரச்னை இருக்கறப்ப, இதை ஒரு விஷயம்னு தூக்கிட்டு வந்திருக்கியே. உலகம் தெரியாத பையனா இருக்கயே நீ! சரி, வந்துட்டே. ஒரு விண்ணப்பம் எழுதிக் கொடுத்துட்டுப் போ.''

எழுதிக் கொடுத்து விட்டு வந்தான் பாண்டியன். இன்று வரை எந்தப் பலனும் கிடையாது.

அந்தச் சாக்கடை இப்போது, சிறிய ஆறு போல ஓடியது. அகலம் நான்கு மடங்காகியிருந்தது. அசுத்தம் நாற்பது மடங்குகளுக்கும் மேல்.

முக்கிய சாலையை அடைய, அதனைக் கடக்க வேண்டியது தவிர்க்க முடியாததாகி விட்டது.

வயோதிகர்கள், அந்த அழுக்கு நீரில் கால் முழுக நடந்து சென்றனர். வேறு வழி?

ஒரு சிலர், வரிசையாகக் கற்களை அடுக்கி, அதன் மேல் நடந்து, வழுக்கி விழுந்தனர்.

ஆனால், ஆரம்பக் காலம் முதலே, தனது காலை அந்த அருவருப்பான நீரில் வைக்கக் கூசினான் பாண்டியன். எனவே, எப்போதும் அதைத் தாண்டிக் குதித்தே சென்றான்.

சாக்கடை மூன்றடி வாய்க்காலாக இருந்தபோது தாண்டுவது எளிதாக இருந்தது. அகலம் அதிகரிக்க அதிகரிக்கத் தாண்டுவது கடினமாக இருந்தது. ஆனாலும் ஒரு 'தம்' பிடித்துத் தாண்டி வந்தான் பாண்டியன்.

''உட்காருங்க தம்பி. என்ன விஷயமா வந்தீங்க? ஏதாச்சும் சிறுகதை எழுதி, எடுத்து வந்திருக்கீங்களா?'' மென்மையாகக் கேட்டார் அந்தப் பத்திரிகை ஆசிரியர். காப்பிக்கு உத்தரவிட்டார்.

''இல்லே சார். வேறே ஒரு முக்கியமான விஷயம்.'' என்றான் பாண்டியன்.

''சொல்லுங்க.''

''சார், எங்க கிராமத்துக்கு நடுவுல ஒரு

பெரிய சாக்கடை ஓடுது...'' என ஆரம்பித்தான். முழு விவரங்களையும் மூச்சு விடாமல் கூறினான்.

பொறுமையோடு கேட்டார் ஆசிரியர். ''சரி, இதுக்கு நாங்க என்ன செய்யணும்னு எதிர்பார்க்கறீங்க?''

''சார், நானும் சம்பந்தப்பட்ட எல்லா அதிகாரிகளையும் போய்ப் பார்த்துட்டேன். பலர், நாட்டுக் கோழி கறி நல்லா இருக்கும்னாங்க. கொண்டு போய்க் கொடுத்தேன்.''

''!''

''ஆனா இதுவரைக்கும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படலை. அந்தச் சாக்கடையில் நிறைய பன்றிகள் புரளும், கொசுத் தொல்லை தாள முடியாது. சமீபத்தில் ஒரு குழந்தை மூளைக் காய்ச்சலால் இறந்துட்டது சார்.''

''அப்படியா?''

''இதைப் பற்றி உங்க பத்திரிகையில் ஒரு கட்டுரை எழுதினால், நல்ல பயன் இருக்கும்னு நம்பறேன் சார்'', கெஞ்சுவது போலப் பேசினான் பாண்டியன், ''இந்த உதவியை நீங்க மறுக்காமல் செய்யணும்...''

''தம்பி, எங்க பத்திரிகை மேல இவ்வளவு நம்பிக்கை வச்சு நீங்க வந்ததற்காக ரொம்ப நன்றி. ஆனால், இன்னொரு விஷ



யத்தையும் நீங்க மனசுல வச்சுக்கணும்.''

''என்ன சார்?''

''இதை என் அனுபவத்தால் சொல்லறேன். கட்டுரை வெளியானதும், பலன் கிடைச்சுடும்னு அதிகமா நம்பிடாதீங்க. பின்னால் ஏமாற்றத்தை உங்களால் தாங்கிக்க முடியாமலும் போகலாம். மற்றபடி, இப்போதே எங்க பத்திரிகையின் சிறப்பு நிருபரை உங்களோட அனுப்பறேன். சந்தோஷம்தானே?''

ஆதரவாகப் பேசிய ஆசிரியரை, நன்றியுணர்வுடன் வணங்கினான் பாண்டியன்.

கழுத்தில் காமெரா. கையில் குறிப்பேடு. பார்வையில் கூர்மை.

பத்திரிகை நிருபரை விநோதமாகப் பார்த்துச் சூழவந்தனர் கிராமத்துச் சிறுவர்கள்.

அருகே தொழிற்சாலை தெரிந்தது. 'எதிரே சின்ன கிராமம். நடுவே நெளியும் சாக்கடை'.

ஒவ்வொன்றைப் பற்றியும் விளக்கிக் கொண்டு வந்தான் பாண்டியன்.

தேவையானவற்றை நிருபர் குறித்துக் கொண்டார். அவசியமான காட்சிகளைத் தம் காமிராவில் சிறைப்படுத்தினார்.

''மிஸ்டர் பாண்டியன், இனி இந்தக் கிராம மக்கள் சிலரைப் பேட்டி காணணுமே?'' எனத் தம் விருப்பத்தை வெளியிட்டார் நிருபர்.

''தாராளமா. ஆனா, அதுக்கு இந்தச் சாக்கடையைத் தாண்டித்தான் போயாகணும். வாங்க,'' என்றபடி, ஒரே தாவில் அதனைத் தாண்டினான் பாண்டியன்.

மறு கரையில் ஒரு மானைப் போல் கால் பதித்தான்.

அதிர்ந்து போய் அவனையே வெறித்தார் நிருபர்.

''என்ன சார், அங்கேயே நிற்கறீங்க? தாண்டி வாங்க. முடியலேன்னா இறங்கி நடந்துத்தான் வரணும்.'' எனச் சாதாரணமாகக் கூறினான் பாண்டியன். ''ஏன் என்னை அப்படிப் பார்க்கறீங்க?''

சிலையாக ஸ்தம்பித்து நின்ற நிருபரால், சில நிமிடங்களுக்குப் பிறகே பேச முடிந்தது, ''மிஸ்டர் பாண்டியன், பேட்டியை அப்புறமா வச்சுக்கலாம். முதல்ல வேறொரு விஷயம் பற்றி உங்களோடு பேசணும். திரும்பி இங்கே வாங்க.''

அலட்சியமாக மறுபடியும் தாண்டினான் பாண்டியன். அந்தக் காட்சியைத் தன்னுள் பத்திரப்படுத்தியது நிருபரின் காமெரா.

அந்த வாரப் பத்திரிகையின் கதாநாயகன் பாண்டியன்தான்.

அட்டையில் வண்ணமயமாகச் சிரித்தவனை, 'யார் இந்தப் புதியவன்?' என்ற கேள்விக் குறியோடு பார்த்தனர் வாசகர்கள்.

அவசரமாகக் கவர்—ஸ்டோரியைப் புரட்டினர்.

'நீளம் தாண்டுவதில், இந்தியாவின் தேசிய சாதனையை முறியடித்த வாலிபர்' என்ற தலைப்பில் கட்டுரை நீண்டது. பாண்டியனின் திறமையைப் போற்றிப் புகழ்ந்தது. சாதனையை அறிமுகப்படுத்தியது. இப்படிப்பட்ட திறமைசாலிகளை அரசாங்கம் புறக்கணிப்பதை ஓர் இமாலயக் குற்றம் எனச் சாடியது. எதிர்வரும் ஒலிம்பிக்கில் இந்தியாவின் சார்பில் தாண்டுவதற்கு உரிமையும் முழுத் தகுதியும் உள்ள ஒரே வாலிபர் பாண்டியனே என ஆணித்தரமாக வாதிட்டது பத்திரிகை.

இந்திய விளையாட்டு உலகம் மட்டுமின்றி, முழு நாடே பாண்டியனைப் பற்றிப் பரபரப்பாகப் பேசியது.

தமது செல்வாக்கைப் பயன்படுத்தி, மத்திய விளையாட்டு அமைச்சரைச் சந்தித்தார் பத்திரிகை ஆசிரியர். காரசாரமாக விவாதித்தார். பாண்டியனை நிராகரித்தால், புரட்சி வெடிக்கும் என எச்சரித்தார்.

''இந்த மிரட்டல்களுக்கெல்லாம் அவசியமே இல்லையே?'' என முடிவில் புன்னகை செய்தார் மந்திரி.

ஒலிம்பிக்...

அந்தப் பிரும்மாண்டமான ஸ்டேடியத்தைச் சுற்றி, எழுந்து நின்று வேடிக்கை பார்த்தன உலக நாடுகளின் பலவண்ணக் கொடிகள். உற்சாகமாகக் கையசைத்தன.

லட்சக்கணக்கான பல நாட்டு விழிகள் அங்கே சம்பவிக்கப் போகும் அதிசயங்களைக் காண ஆவலுற்று இருந்தன.

போட்டி ஆரம்பமானது.

ரஷ்யா, அமெரிக்கா, சீனா, ஜப்பான், தென் கொரியா எனப் பல நாட்டு வீரர்கள் கம்பீரமாக வந்தனர். திடகாத்திரமான மேனியோடு ஓடிவந்து தாண்டினர்.

கைதட்டல்களைப் பெற்றுக் கொண்டு நகர்ந்தனர்.

அது ஹேங்கிங் மெதேட், இது சைக்ளிங் என என்னென்னவோ பேசிக் கொண்டார்கள். பாண்டியனுக்கு எதுவும் புரியவில்லை.


அமைதியாக அமர்ந்திருந்தான்.

''பாண்டியன் ஃப்ரம் இண்டியா'' என ஒலிபரப்பியது ஒலிபெருக்கி.

அதே அலட்சியத்தோடு எழுந்து வந்தான் பாண்டியன். ஒலிம்பிக் வீரனுக்கு இருக்க வேண்டிய உடற்கட்டு இல்லாததனால் அவனைச் சிலர் ஏளனமாகப் பார்த்தார்கள்.

ஆனால், எதையும் பொருட்படுத்தவில்லை பாண்டியன். அவன் கண்களுக்கு, ஆரவாரிக்கும் மக்கள் தெரியவில்லை. அசையும் கொடிகள் தெரியவில்லை. அயர வைக்கும் ஸ்டேடியம் தெரியவில்லை.


தெரிந்தது ஒன்றேயொன்றுதான்.




• **படைக்கும் உணவில் ஒரு சிட்டிகை அன்பைக் கலந்து பரிமாறு! வெவ்வேறு ருசி உள்ள எல்லோருக்கும் அது பிடிக்கும்.**

(ப்ளாட்டஸ்)

— ராஜா ரவீந்தர்.



பேச்சு சுவாரஸ்யத்தில் பேன்களும் பரவுவதை உங்கள் மகள் அறியமாட்டாள்



பேன் பிரச்சினையை பாதுகாப்பாகவும், நிச்சயமாகவும் தீர்த்திடுங்கள். தேர்ந்தெடுங்கள் மெடிக்கர்.

மெடிக்கர் — நன்கு ஆராய்ச்சி செய்து தயாரிக்கப்பட்ட பேன் கொல்லி மருந்தாகும். இது உங்கள் மகளின் கேசத்தை மென்மையாக பாதுகாக்கிறது. மெடிக்கர் ஆற்றல் மிக்கது. பாதுகாப்பானது. பேன்களையும், ஈருகளையும் முற்றிலும் ஒழிக்கிறது.

6 நிமிடங்களில், ஆரோக்கியமான, சுத்தமான பேன்கள் அற்ற கேசம்.

மெடிக்கர், ஷாம்புவைப் போன்றதால் உபயோகிப்பது எளிது.

1. உங்கள் குழந்தையின் கேசத்தை நீரில் அலசுங்கள். 1/2 பேக்கட் அல்லது மூடி நிறைய மெடிக்கரை கேசத்தில் ஊற்றுங்கள்.
2. மெடிக்கரை, தலையில் 3 நிமிடங்களுக்கு நன்கு நுரை வரும் வரை தேய்க்கவும்.
3. கேசத்தை அலசியபின் மீண்டும் அதே போன்று (குறிப்பு 1 மற்றும் 2) மீதமுள்ள 1/2 பேக்கட் அல்லது மூடி நிறைய மெடிக்கரை உபயோகிக்கவும்.

மெடிக்கர் பேன்களையும் ஈருகளையும் ஒழிப்பதோடு மட்டுமின்றி உங்கள் கேசத்தை ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும் திகழச் செய்கிறது.

மெடிக்கர்

பேன்களிலிருந்து உங்களைக் காக்கும் பாதுகாவலன்.

எளிதானது. பாதுகாப்பானது. ஆற்றல் மிக்கது.



everest/l/87/RHL/548-tm

வழங்குவோர்: ரிசர்ட்ஸன் ஹிந்துஸ்தான் லிமிடெட் — விக்ஸ் மற்றும் கிளியரசில் தயாரிப்போர்.

வாசகர் பங்கு:

தளபதி திடமதி



இந்த இதழ் தவிர இன்னும் இரண்டே இதழ் களில்தான் கூப்பன் இடம்பெறும். திடமதிக்கு விடைகொடுக்குமுன் அவருக்கு 'விட்' அடிக்க உதவி, நீங்களும் அதிகபட்சப் பயன் அடைய முயற்சி செய்யுங்கள். அரசியல்—சமுதாயப் பிரச்னைகள் பற்றி திடமதியின் அறிவுக் கொழுந்தான கருத்தை மேடைப் பேச்சாகவோ உரையாடலாகவோ கீழே கூப்பனில் எழுதி அனுப்பவும். பிரசுரமானால் பரிசு ரூ. 25/—. அடுத்து வரும் வாரங்களில் ஒருவரே எழுதிய சில துணுக்குகள் பிரசுரமானால் ஒவ்வொரு முறையும் பரிசு இரட்டிப்பாகும். அதிகபட்சப் பரிசு ரூ. 400/—. உறை மீது 'தளபதி திடமதி' என்று குறிப்பிடுக.

கூப்பன்:

கல்கி இதழ்: 10.4.88 — முடிவு தேதி: 19.4.88.

தளபதி திடமதி: ''...........................

....

....

....

....

....

....

....

....

....

....

....''

என் பெயர்:...........................

விலாசம்:............................

....

அசுரத்தனமாக வளர்ந்து, அகன்ற பரப்பை வியாபித்து ஓடிய அந்தச் சாக்கடை. அவன் கிராமத்துச் சாக்கடை. ஓடிச் சென்று தாவினான் பாண்டியன். மறு விநாடி வானில் பறந்தான். மறு உலகில் சென்று கால் பதித்தான்.

கைதட்டல்கள் விண்ணை அதிர வைத்தன.

உலக ஒலிம்பிக் சாதனையை முறியடித்தான் பாண்டியன்.

அடக்கத்தோடு வெற்றி மேடை ஏறினான். மதிப்புமிக்கத் தங்கப் பதக்கம் ஓடிவந்து, அவன் கழுத்தைக் கட்டியணைத்தது.

இந்தியா...

பிலவுலகண்டி (பி) தெக்கபரம்பில் (டி) உஷாவாக விரைந்து கொண்டிருந்த கார், திடீரென தடம் மாறி, சின்னப் பாதையில் ஊர்ந்தது.

உள்ளே அமைதியாகப் பாண்டியன். அருகே, அவன் திறமையைப் பறைசாற்றிய நிருபர், ''மிஸ்டர் பாண்டியன், நீங்க ஒலிம்பிக்ல சாதனை படைச்சதும், உங்களைப் பற்றி நாடாளுமன்றத்துல பேசினாங்க தெரியுமா?'' என்றார்.

''என்னன்னு?''

''நம் நாட்டுக்கு இவ்வளவு புகழைத் தேடித் தந்த பாண்டியனின் வீட்டு முன்னால ஓடற சாக்கடையை எப்போ மூடப் போறீங்கன்னு கேட்டு, எதிர்க்கட்சிக்காரங்க விளாசித் தள்ளிட்டாங்க.''

பாண்டியன் பேசவில்லை.

கிராமம் சமீபித்தது.

ஊருக்கு எதிரே கார் நின்றது. ஏற்கெனவே அங்கே குழுமியிருந்த பிரமுகர்களும், நிருபர்களும் அவனைச் சூழ்ந்து கொண்டனர். கேள்விகள் கேட்டனர்.

ஆனால், அனைவரையும் நிராகரித்தான் பாண்டியன். சாக்கடையை நோக்கி நடந்தான்.

அங்கே வேலை நடந்து கொண்டிருந்தது. நூற்றுக்கும் மேலான ஆட்கள் சாக்கடையை மூடும் பணியில் மும்முரப்பட்டு இருந்தனர். இருபது லாரிகள் வரிசையாக வந்து மணலைக் கொட்டின.

ஏறக்குறைய முழுவதுமாக மூடப்பட்டு விட்டது சாக்கடை. இன்னும் சில அடிகளே எஞ்சியிருந்தன. அதையும், ஒரு லாரியிலிருந்து தானாகக் கொட்டிக் கொண்டிருந்த மணல் நிரப்பிக் கொண்டிருந்தது.

அந்த இடத்தை நோக்கி ஆவேசமாக ஓடினான் பாண்டியன். எஞ்சியிருந்த சாக்கடைப் பகுதியை வெறித்துப் பார்த்தான்.

பிறகு, தன் கையில் தொங்கிய ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை அந்தச் சாக்கடை நீரில் வீசினான்.

பதக்கத்தோடு சமாதியானது சாக்கடை.

அனைவரும் அவனையே திகைப்பாகப் பார்த்தனர். அமைதியாக வீட்டை நோக்கி நடந்தான் பாண்டியன்.

பொன்னியின் செல்வன்

மூன்றாம் அத்தியாயம்

ஆந்தையின் குரல்

நந்தினி கடலை நோக்கினாள். பழுவேட்டரையர் ஏறிச் சென்ற படகு பார்த்திபேந்திரனுடைய கப்பலை நெருங்கிக் கொண்டிருந்தது.

நந்தினி பெருமூச்சு விட்டாள். அது பார்த்திபேந்திரனுடைய நெஞ்சில் புயலாக அடித்தது.

"தேவி! சொல்லுங்கள். நான் செய்ய வேண்டியது இன்னதென்று சொல்லுங்கள். தங்களுக்கும் எனக்கும் உகந்தது என்று பிரித்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. தங்களுக்கு எது உகந்ததோ அதுதான் எனக்கும் உகந்தது!" என்றான் பல்லவ வீரன்.

அவன் மனத்தில் விசித்திரமான எண்ணங்கள் எல்லாம் அந்நேரத்தில் உதித்தன. இந்தப் பெண் அந்தக் கொடிய கிழவனிடம் அகப்பட்டுக் கொண்டு கூண்டுக் கிளியைப் போல் தவித்துக் கொண்டிருக்கிறாள் என்பதில் சந்தேகமில்லை. அந்தக் காட்டுப் பூனையிடமிருந்து இவளை ஏன் விடுதலை செய்யக் கூடாது? இவள் மட்டும் தன் விருப்பத்தைத் தெரிவிக்கட்டும்! அவனை அக்கப்பலிலேயே சிறைப்படுத்திக் கண்காணாத தேசத்துக்குக் கொண்டு போய் விட்டுவிடச் செய்யலாம்! சண்டாளன்! புதல்வியும் பேத்தியுமாக இருப்பதற்குரிய இளம் பிராயமுடைய பெண்ணை மனைவியாக்கிக் கொள்ள எப்படி இவன் மனந்துணிந்தது?......

அமரர் கல்கி

நந்தினி இன்னமும் படகையும் கப்பலையும் பார்த்துக் கொண்டிருந்தாள். படகிலிருந்து பழுவேட்டரையர் கப்பலில் ஏறுவதைப் பார்த்தாள்.

"நல்லவேளை! பத்திரமாக ஏறிவிட்டார்! எவ்வளவு வீரராயிருந்தாலும் வயதாகி விட்டதல்லவா? படகிலிருந்து கப்பலில் ஏறும்போது தடுமாறாமல் இருக்க வேண்டுமே என்று எனக்குக் கவலையாயிருந்தது!" என்றாள்.

பல்லவன் ஏமாற்றமடைந்தான். கிழவனிடம் இவளுக்கு இவ்வளவு பரிவு ஏன்? படகிலிருந்து அவன் கடலில் விழுந்து இறந்தால் என்ன? நாட்டுக்கும் க்ஷேமம்; இவளுக்கும் விடுதலை! எதற்காக இவ்வளவு பரிவு காட்டு

கிருன்?

''கிழவருக்குச் சோழ குலத்தாரிடம் எவ்வளவு அபிமானம் என்பது இன்றைக்குத்தான் எனக்குத் தெரிந்தது. இளவரசருக்கு ஆபத்து என்றதும் எப்படித் துடிதுடித்துப் போய்விட்டார்? — ஐயா! இளவரசர் தப்பிப் பிழைத்திருக்கக் கூடும் அல்லவா? இறந்துதான் போயிருக்க வேண்டும் என்பது நிச்சயம் இல்லையே?'' என்ருள் நந்தினி.

''நிச்சயம் இல்லை; ஆனல் அப்பேர்ப்பட்ட சுழற்காற்றில் கடலில் குதித்தவர் பிழைத்திருப்பது அசாத்தியம்! விதியின் போக்குக்கு நாம் என்ன செய்ய முடியும்?'' என்ருன் பல்லவன்.

''இதற்கு விதி காரணம் இல்லை; அந்தப் பழையாறை ராட்சஸியின் பேராசைதான் காரணம். தங்களுக்குத் தெரியுமா, ஐயா? குந்தவை தேவிக்கு ஜோதிடத்திலும் ரேகை சாஸ்திரத்திலும் அபார நம்பிக்கை. தம்பியின் ஜாதகத்தையும், கைரேகையையும் பார்த்து வைத்துக் கொண்டு அவன் மூன்று உலகையும் ஆளும் சக்கரவர்த்தியாகப் போகிருன் என்று நம்பிக்கை வைத்திருந்தாள். ஐயோ! பாவம்! அந்த அருமைத் தம்பிக்கு இந்தக் கதி நேர்ந்தது என்று அறியும் போது அவள் எவ்வளவு கஷ்டம் அடைவாள்! அச்சமயம் நான் அவள் கூட இருந்து ஆறுதல் சொல்ல வேண்டும் போலிருக்கிறது!''

இவ்விதம் கூறிய நந்தினியின் குரலில் குதூகலம் தொனித்தது. பல்லவன் ஒரு கணம் ஆச்சரியப்பட்டுப் போனன். பிறகு தன் செவிகளில் தான் கோளாறு என்று தீர்மானித்துக் கொண்டான்.

''ராணி! தாங்கள் எதற்காக ஆறுதல் சொல்ல வேண்டும்? அவளுடைய பேராசையினல் நேர்ந்துவிட்ட விபரீதம்தானே இது? அதற்காக அவள் கஷ்டப்பட வேண்டியதுதான்...''

''அது எப்படி ஐயா? அவள் கண்ணில் ஒரு சொட்டுக் கண்ணீர் துளித்தால் நெஞ்சு பதறுகிறவர்கள் சோழ நாட்டில் ஆயிரம் பதினயிரம் பேர் இருக்கிருர்கள். அவள் சக்கரவர்த்தியின் செல்வப் புதல்வி. மூன்று உலகிலும் ஈடு இணையற்ற அழகி!''

''நானும் ஒரு சமயம் அவ்வாறுதான் நினைத்திருந்தேன். அதாவது தங்களைப் பார்ப்பதற்கு முன்னல்!''

''என்னைப் பார்த்த பிறகு என்ன நினைக்கிறீர்கள்?''

''குந்தவை தேவியின் அழகு தங்கள் பாதச் சுண்டுவிரலின் அழகுக்கு இணையாகாது என்றுதான்.''

''இப்போது இப்படித்தான் சொல்வீர்கள். நாளைக்கு அவளைப் பார்த்தால் நான் ஒருத்தி இவ்வுலகில் இருக்கிறேன் என்பதையே மறந்து விடுவீர்கள்!''

''ஒரு நாளும் மாட்டேன், தேவி! என்னைச் சோதனை செய்து பாருங்கள் என்றுதான் சொல்கிறேனே? தங்கள் கட்டளை இன்னதென்று இக்கணமே தெரிவியுங்கள்.''

''கட்டளையிடும் பாத்தியதை எனக்குக் கிடையாது, ஐயா! விண்ணப்பம் செய்து கொள்கிறேன். பெரிய பழுவேட்டரையரை நான் மணந்த பிறகு சோழ நாட்டில் பிளவும் குழப்பமும் ஏற்பட்டிருப்பதாகச் சிலர் அவதூறு சொல்கிருர்கள். அது பொய் என்பதை நிரூபிக்க விரும்புகிறேன். அதற்குத்தான் தங்கள் உதவியை நாடுகிறேன்.''

பார்த்திபேந்திரன் சிறிது ஏமாற்றம் அடைந்தான். நந்தினி அவனுக்காக ஏதோ ஒரு கஷ்டமான காரியத்தில் தன்னை ஏவுவாள் என்று எண்ணியிருந்தான். அதை நிறைவேற்றி அவளை மகிழ்விக்க ஆர்வம் கொண்டிருந்தான். ஆனல் அவள் இராஜ்ய காரியத்தைப் பற்றி எதுவோ சொல்கிருள்!

''சொல்லுங்கள், ராணி! தங்கள் விருப்பம் எதுவாயிருந்தாலும் சொல்லுங்கள்!'' என்ருன்.

''ஐயா! சோழ நாட்டில் அமைதி ஏற்படாமல் தடுத்து வந்தவள் இளைய பிராட்டி. அவளுடைய அகம்பாவத்தினல் சோழ நாட்டுச் சிற்றரசர்களையும் பெருந்தர அதிகாரிகளையும் கோபம் கொள்ளச் செய்தாள். தம்பி அருள்மொழி வர்மனை எப்படியாவது



இந்தச் சோழ நாட்டுச் சிம்மாசனத்தில் ஏற்றிவிட வேண்டும் என்று அவளுக்கு ஆசை. இதனால் சமரசம் ஏற்படாமல் தடுத்து வந்தாள். இப்போது அந்தக் காரணம் போய்விட்டது. இனிமேல் சமரசம் செய்து வைப்பது சுலபம். கேளுங்கள், ஐயா! தாங்கள்தான் சொன்னீர்களே! மந்திரிகளும் மற்றப் பெருந்தர அதிகாரிகளும் சுந்தர சோழருக்குப் பிறகு மதுராந்தகருக்குப் பட்டம் கட்ட விரும்புகிறார்கள். சக்கரவர்த்தியும் அதற்கு இணங்கி விட்டார்.''

''அப்படியா, தேவி!''

''ஆம், ஐயா! இல்லாவிடில் இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரக் கட்டளையிட்டிருப்பாரா? ஆனாலும் அது சரியல்ல என்பது என் கருத்து. சமரசமாகத் தீர்த்துக் கொள்வதற்கு இடம் இருக்கிறது. வெள்ளாற்றுக்கு வடக்கேயுள்ள ராஜ்யத்தை ஆதித்த கரிகாலருக்கு என்றும், தெற்கேயுள்ள பகுதியை மதுராந்தகருக்கு என்றும் பிரித்துக் கொள்ளலாமே? தங்கள் முன்னோர்கள், பல்லவ மகா சக்கரவர்த்திகள், தொண்டை மண்டலத்தை ஆள்வதுடன் திருப்தி அடையவில்லையா? பூர்வீக சோழ மன்னர்கள் இரண்டு வெள்ளாற்றுக்குமிடையேயுள்ள இராஜ்யத்துடன் திருப்தி அடையவில்லையா?......''

''தேவி! இதையெல்லாம் எதற்காக என்னிடம் சொல்லுகிறீர்கள்? எந்த ராஜ்யம் எப்படிப் போனால் எனக்கு என்ன? யார் எந்த ராஜ்யத்தை ஆண்டால்தான் எனக்கு என்ன?......''

''ஐயா! தாங்கள் ஆதித்த கரிகாலரிடம் உண்மை விசுவாசமுள்ள சிநேகிதர் என்று எண்ணினேன்.''

''பிறருக்கு விசுவாசமாயிருந்து, பிறருடைய புகழுக்காகப் போராடி, பிறருடைய நன்மைக்காக உழைத்து, —



இத்தனை நாளும் கழித்தாகி விட்டது. இனிமேல் எனக்காக நான் வாழ விரும்புகிறேன், ராணி! இதைக் கேளுங்கள்! நான் எதற்காக இவ்வுலகில் பிறந்தேன், எதற்காக உயிரோடிருக்கிறேன் என்று பல தடவை நான் சிந்தித்ததுண்டு. என் முன்னோர்களாகிய பல்லவ சக்கரவர்த்திகள் பெரிய சாம்ராஜ்யங்களை ஆண்டார்கள். மாமல்லபுரத்தைப் போன்ற சொப்பன உலகங்களைச் சிருஷ்டித்தார்கள். அவர்களுடைய பெருமையை என் காலத்தில் மீண்டும் நிலைநாட்டப் பிறந்திருக்கிறேனோ என்று நான் எண்ணியதுண்டு. ஆனால் அதில் என் மனம் ஈடுபடவில்லை; ராஜ்யங்களைச் சிருஷ்டிப்பதில் உற்சாகம் கொள்ளவில்லை. சோழ குலத்தின் பெருமைக்கு உழைப்பதிலேயே திருப்தி அடைந்தேன். ஆதித்த கரிகாலரின் சிநேகத்தில் மகிழ்ந்தேன். இப்படியே என் வாழ்நாளைக் கழித்து விடுவது என்றுதான் எண்ணியிருந்தேன். இன்றைக்குத்தான் என் கண்கள் திறந்தன; சற்று முன்னாலேதான் நான் பிறந்தது எதற்காக என்று தெரிந்தது. அதோ கேளுங்கள்! அந்தக் கடல் அலைகளின் குரல் என் உள்ளத்தின் குரலை 'ஆம், ஆம்' என்று ஆமோதிக்கிறது. அதோ, காட்டில் வாழும் பறவைகள் எல்லாம் 'சரி சரி' என்று கூவுகின்றன. தேவி! சோழ சாம்ராஜ்யத்தைப் பங்கு போடுவது பற்றி என்னிடம் சொல்ல வேண்டாம். வேறு ஏதாவது சொல்லுங்கள்! கடல்களுக்கு அப்பாலுள்ள பவழத் தீவிலிருந்து விலை மதிக்க முடியாத பவழங்களைக் கொண்டுவரச் சொல்லுங்கள். ஆழ் கடலின் அடியிலிருந்து முத்துக்களைக் கொண்டு வரச் சொல்லுங்கள். மேரு மலையின் உச்சிச் சிகரத்திலே ஏறிச் சஞ்சீவி மூலிகையைக் கொண்டு வரச் சொல்லுங்கள். மேக மண்டலத்துக்கு மேலே பறந்து நட்சத்திரங்களைப் பறித்துக் கொண்டு வந்து ஆரம் தொடுத்துத் தங்கள் கழுத்தில் போடச் சொல்லுங்கள். பூரண சந்திரனைக் கொண்டு வந்து தங்களுடைய முகம் பார்க்கும் கண்ணாடியாக்கித் தரும்படி சொல்லுங்கள்!......"

"போதும், ஐயா, போதும்! என்னை ஏற்கெனவே அந்தப் பழையாறைப் பிராட்டி 'பைத்தியம்' என்று சொல்லிக் கொண்டிருக்கிறாள். உண்மையாகவே எனக்குப் பைத்தியம் பிடிக்கச் செய்து விடாதீர்கள்!" என்றாள் நந்தினி.

பார்த்திபேந்திரன் சிறிது வெட்கம் அடைந்தான். "பைத்தியம் பிடித்திருப்பது எனக்குத்தான்; மன்னியுங்கள். தங்களுடைய விருப்பத்தை முதலில் தெரிவியுங்கள்!" என்றான்.

"சோழ நாடெங்கும் — தமிழகமெங்கும் — எனக்கு ஏற்பட்டிருக்கும் கெட்ட பெயரைப் போக்கிக் கொள்ள விரும்புகிறேன். அதற்குத்தான் தங்கள் உதவியை நாடுகிறேன்.

நான் இந்தக் கிழவரை மணந்ததின் காரணமாகச் சோழ குலத்துக்கே கேடு வந்துவிட்டதென்று ஜனங்கள் பேசிக் கொள்கிறார்களாம். மதுராந்தகத் தேவரை இராஜ்ய ஆசை கொள்ளச் செய்தது நான்தான் என்று சொல்லுகிறார்களாம். சோழ நாட்டுச் சிற்றரசர்களை அவர் பக்கம் திருப்பியதும் நான்தான் என்றும் சொல்கிறார்களாம். இந்த அவப் பெயருடன் இறந்து போவதற்கு நான் விரும்பவில்லை......!''

''இறந்து போவதைப் பற்றி ஏன் பேசுகிறீர்கள்? என்னைத் துன்புறுத்துவதற்காகவா?''

''பல்லவகுமாரா! தங்களுக்கு ரேகை சாஸ்திரம் தெரியுமா? ரேகை சாஸ்திரத்தில் தங்களுக்கு நம்பிக்கை உண்டா?'' என்று நந்தினி சம்பந்தமில்லாத ஒரு கேள்வியைக் கேட்டாள்.

பார்த்திபேந்திரன் அதற்கு நேர் மறுமொழி சொல்லாமல் ''எங்கே? கையைக் காட்டுங்கள்!'' என்றான்.

நந்தினி வலது கையை நீட்டினாள். அதைப் பார்த்திபேந்திரன் சிறிது நேரம் உற்றுப் பார்த்துவிட்டு, ''ஆச்சரியமான ரேகைகள்! இம்மாதிரி காண்பதே அபூர்வம்! அந்தக் கையையும் சிறிது காட்டுங்கள்!'' என்றான்.

நந்தினி இன்னொரு கையையும் நீட்டினாள். பல்லவன் அதையும் பார்த்துவிட்டு, ''தேவி! இதற்கு முன் யாராவது தங்கள் கரங்களின் அதிசயமான ரேகைகளைப் பார்த்துவிட்டு ஏதாவது சொல்லியிருக்கிறார்களா?'' என்று கேட்டான்.

''ஆம்; பழையாறை இளையபிராட்டி ஒரு தடவை என் கையைப் பார்த்து விட்டுச் சொன்னாள்......''

''என்ன சொன்னாள்?''

''நான் அற்பாயுளில் சாவேன் என்று சொன்னாள்.''

''அது உண்மைதான்!'' என்றான் பார்த்திபேந்திரன்.

''ஐயோ! நீங்களுமா அப்படிச் சொல்கிறீர்கள்?''.

''ஆனால் அவள் அரை குறையாக சாஸ்திரம் படித்தவள் என்று தெரிகிறது. இந்தக் கைரேகையில் ஒன்று அற்பாயுளைக் குறிப்பது உண்மைதான். ஆனால் மற்றொரு ரேகை அந்தக் கண்டத்தைக் கடந்து புனர் ஜன்மம் ஏற்படும் என்றும் கூறுகிறது. அந்தப் புனர் ஜன்மத்துக்குப் பிறகு கடல் கடந்த பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்யும் பாக்கியம் உண்டு என்றும், மன்னாதி மன்னர்களுக்குக் கிட்டாத ஆனந்த வாழ்க்கை வெகு காலம் உண்டு என்றும் கூறுகிறது. இவ்வளவும் தற்செயலாகக் கடற்கரையில் சந்தித்த ஒரு யவ்வன புருஷனுடைய உண்மைஅன்பினால் கிடைக்கும் என்று தெரிகிறது. தங்களுடைய சின்னஞ்சிறு விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அவன் தன் உயிரையே அர்ப்பணம் செய்வான் என்று ரேகைகள் மிகத் தெளிவாகச் சொல்லுகின்றன...''

இவ்விதம் கூறிக்கொண்டே பார்த்திபேந்திரன் சட்டென்று நந்தினியின் விரித்த இரு கரங்களையும் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

நந்தினி கைகளை உதறி விடுவித்துக்கொண்டு, ''சீச்சீ! இது என்ன காரியம் செய்தீர்?'' என்றாள்.

''மன்னியுங்கள்! இவை தங்கள் கரங்கள் என்பதை மறந்து விட்டேன். இரண்டு செந்தாமரை மலர்கள் என்று எண்ணிக் கொண்டேன்'' என்றான்.

''பழுவேட்டரையர் பார்த்திருந்தால் உம்மை ஈட்டி முனையில் கழுவேற்றியிருப்பார்!''

''தேவி! தங்களுக்காகக் கொடுப்பதற்கு எனக்கு இருப்பது ஓர் உயிர் தானே என்று கவலைப்படுகிறேன்...''

''அந்த ஓர் உயிரையும் இப்படிக் கொடுப்பானேன்? இந்த அநாதைப் பெண்ணுக்கு உதவி செய்வதற்காகக் காப்பாற்றி வைத்துக் கொண்டிருங்கள்!''

''என்ன செய்ய வேண்டும் என்று சொல்லுங்கள்!''

''சோழ சாம்ராஜ்யம் தாயாதிக் கலகத்தினால் பாழாகி விடாமல் காப்பாற்ற வேண்டும். அதற்குத் தங்களுடைய உதவி வேண்டும்.''

''எப்படி?''

''தங்கள் சிநேகிதர் கரிகாலரைக்

புதிய

லிப்டன் டாப் ஸ்டார் டீ
சுவையே அதன் வலிமை



லிப்டன் டாப் ஸ்டார். சுவைதான் எப்போதும் இதன் மாபெரும் வலிமை. இப்போதுஇது இன்னும் மேன்மையாக திகழ்கிறது. ஏனெனில் இவ்வகை இதர டீக்களைவிட அதிக சுவையும் திண்மையும் கொண்ட மிஞ்சிடும் கலவையை புதிய லிப்டன் டாப்ஸ்டார் கொண்டுவந்துள்ளது. முயன்றுதான் பாருங்களேன்! வேறுபாட்டினை நீங்களும் உணர்ந்திடுவீர்.

இப்போது லிப்டன் டாப் ஸ்டார் பொலிவான புதிய பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.




லிப்டன்

டாப் ஸ்டார் டீ

ருசியும் சக்தியும்
வெற்றிகரமான கொண்ட இணைப்பு

LINTAS BLORE LIL TS P1 2416 TAM





ஆயிரம் மலர்களின் மயக்கும் மென்மை.
மனதைக் கவரும் மணங்கள். Top 3. Fantasy. Gulistan.
தரமான ஊதுவத்திகள். அளிப்பவர்கள் பத்மினி.


நறுமணத்தின்
நளினம்
Padmini
Fantasy
Padmini®
157, காமராஜ் சாலை, பெங்களூர்-560 001.


இக்கோடையின் கடுமையை இனிமையாக்குங்கள்!
nafed
"சுவை மன்னர்கள்"
பரபரப்பூட்டும் இன்சுவை ரகங்கள்:
டொமேடோ கெச்சப், பைன் ஆப்பிள் ஜூஸ்
தக்காளி ஜூஸ், மாங்கோ பல்ப், ஆரஞ்சு ஜூஸ்
மிக்சட் ப்ரூட் ஜாம், மற்றும் பல விதங்கள்
APPLE JUICE
NAFED PROCESSED FOODS
"Cresent Court "2nd Floor, 963, Poonamallee High Road,
Madras-600 084, Phone: 665851, Telex: MS-7472.

கடம்பூர் சம்புவரையர் வீட்டுக்கு அழைத்து வாருங்கள். சம்புவரையருக்கு ஒரு பெண் இருக்கிறாள். அவளை ஆதித்த கரிகாலருக்கு மணம் செய்து வைத்து விட்டால் என் மனோரதம் பூர்த்தியாகும்.''

''இந்த அற்பக் காரியத்துக்குத்தானா இவ்வளவு பீடிகை? ஆதித்த கரிகாலரை அவசியம் கடம்பூருக்குக் கொண்டு வந்து சேர்க்கிறேன். அப்புறம்......?''

''ஆதித்தகரிகாலருக்குச்சம்புவரையர்மகளைக்கலியாணம்செய்துவைத்து விட்டால் கலகம் பாதி தீர்ந்து விட்டதாகும். சோழ சாம்ராஜ்யத்தில் மதுராந்தகருக்குத் தென் பாதியும் கரிகாலருக்கு வடபாதியும் என்று பிரித்துக் கொடுத்துவிட்டால் கலகம் முழுதும் தீர்ந்ததாகும்.''

பின்னர்?.......

''எனக்கு ஏற்பட்டிருக்கும் கெட்ட பெயர் போய்விடும். பிறகு என் தலைவிதியை நானே நிறைவேற்றிக் கொள்வேன். நடுக்கடலில் விழுந்து உயிரை விடுவேன்......''

''நான் பின்தொடர்ந்து வந்து தங்களைக் காப்பாற்றுவேன். நம் இருவருடைய புனர் ஜன்மம் ஆரம்பமாகும். கடல்களைக் கடந்து தூர தேசங்களுக்குச் செல்வோம். அங்கே தங்களுக்காக ஒரு மாபெரும் ராஜ்யத்தை ஸ்தாபிப்பேன்.''

''ஐயா! இப்படியெல்லாம் பேச வேண்டாம். தென் தமிழ்நாட்டுப் பத்தினிப் பெண்களின் மரபில் வந்தவள் நான். பழுவேட்டரையரின் தர்ம பத்தினி......''

''தேவி! என்னிடம் உண்மையைச் சொல்லுங்கள். இந்தக் கிழவரை எதற்காக மணந்து கொண்டீர்கள்? இவர் பேரில் காதல் கொண்டா? அல்லது இவருடைய பலாத்காரத்திற்காகவா?''

நந்தினி பெருமூச்சு விட்டாள். அவளுடைய கண் விழிகள் மேல் நோக்கிச் சென்றன. ஏதோ பழைய துயரமான ஞாபகங்களில் சிறிது நேரம் ஆழ்ந்திருந்தாள் என்று தோன்றியது.

''பாவம்! கிழவர் பேரில் பழி சொல்லவேண்டாம். மனதார இஷ்டப்பட்டுத்தான் இவரை மணந்தேன்......''

''ஏன்? எதற்காக? இவரிடம் அப்படி என்ன கண்டீர்?''

''இவரிடம் ஒன்றும் காணவில்லை. அரண்மனை வாழ்வுக்கும் அதிகாரத்துக்கும் ஆசைப்பட்டு நானாகவே இவரை மணந்தேன்......''

''என்னால் நம்ப முடியவில்லை''

''நம்ப முடியாதுதான். ஆனாலும் அது உண்மை. சின்னஞ்சிறு பிராயத்திலிருந்து என்னை ஒருத்தி ஏழை என்றும் அநாதையென்றும் ஏளனம் செய்து வந்தாள். அரச குலத்துப் பிள்ளைகளுடன் விளையாடும் உரிமை கூடக் கிடையாது என்று சொல்லி வந்தாள். அந்த அவமதிப்பைப் பொறுக்க முடியாமல் இந்தத் தவறைச் செய்தேன்.''

''தேவி! அப்படித் தங்களை அவமதித்த பெண் பேய் யார்?''

''தெரியவில்லையா? ஊகிக்க முடியவில்லையா?''

''இளையபிராட்டி குந்தண்வ தானே?''

''ஆமாம்.''

''அவளுக்கு ஒரு நாள் நான் புத்தி புகட்டியே தீர்வேன்.''

''கடவுளே அவளுக்குத் தண்டனை அளித்து விட்டார். அருமைத் தம்பியும் ஆருயிர்க் காதலனும் ஒரே போக்கில் போய் விட்டார்கள். இப்போது அவளுடைய நிலையை நினைத்தால் எனக்கு அனுதாபமாயிருக்கிறது.''

''இந்தத் தண்டனை அந்த அகம் பாவக்காரிக்குப் போதவே போதாது.''

''சற்றுமுன் நான் தங்களை வேண்டிக் கொண்ட காரியத்துக்கு உதவி செய்தால் அவளுடைய தண்டனை பூர்த்தியாகும். சோழ சாம்ராஜ்யத்திற்குத் தனி நாயகியாயிருக்க வேண்டும் என்ற அவள் ஆசை மண்ணோடு மண்ணாகும்.''

''தங்கள் விருப்பத்தை நிறைவேற்றுகிறேன். பரிசு என்ன தருவீர்கள்?''

"எது கேட்டாலும் தருவேன். தமிழ்ப் பெண் குலத்தின் மரபுக்கு மாறுபடாத எதைக் கேட்டாலும் தருகிறேன்......"

"ராணி! மேலை நாடுகளில் ஒரு புதிய சமயம் தோன்றியிருக்கிறதாம். அரபு தேசம், பாக்தாத் தேசம், பாரஸீகம் முதலிய தேசங்களில் அது பரவியிருக்கிறதாம். அந்தச் சமயக் கோட்பாட்டின்படி கல்யாணமான தம்பதிகள் விரும்பினால் பிரிந்து விடலாமாம். அதற்கு ஒரு சடங்கு உண்டாம். ஸ்திரீகள் கூட வேறு கலியாணம் செய்து கொள்ளலாம்."

"ஆம்; நானும் அவ்வாறு கேள்விப் பட்டிருக்கிறேன்."

"நாம் அந்த நாடுகளுக்குப் போய் விடுவோம். அந்தச் சமயக் கோட்பாட்டைச் சேர்ந்துவிடுவோம்......"

"அப்படியெல்லாம் சில சமயம் நானும் பகற் கனவு காண்பதுண்டு. ஆனால் நடக்கக் கூடிய காரியமா?"

"தேவி! ஏன் நடக்காது? அவசியம் நடக்கும். தாங்கள் மட்டும் சம்மதித்தால் நடக்கும். தங்களுடன் கப்பல் ஏறிக் கடல் கடந்து செல்வேன். தூர தேசங்களில் இறங்குவேன். இந்தக் கையில் பிடித்த கத்தியின் வலிமையினால் பெரியதொரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பேன். நவரத்தின கசிதமான சிங்காதனத்தில் தங்களை ஏற்றி வைப்பேன்! தங்களுடைய சிரஸில் பார்த்தோர் கண் கூசும்படியான மணி மகுடத்தைச் சூட்டுவேன். இதற்காகவே நான் பிறந்திருக்கிறேன்; இதற்காகவே இவ்வளவு போர்க்களங்களிலும் சாகாமல் உயிரோடு இருந்து வருகிறேன்......"

"ஐயா! அதோ என் கணவர் திரும்பி வந்து கொண்டிருக்கிறார். படகு கரையை நெருங்கி விட்டது. அமைதி அடையுங்கள். மற்ற விஷயங்களைப் பிறகு பேசிக் கொள்ளலாம்......"

"பிறகு எப்போது தேவி?"

"எங்களுடன் தஞ்சாவூருக்கு வாருங்கள்! விருந்தாளியாக வர அழைப்புக் கிடைக்கா விட்டால் சிறையாளியாகவாவது வாருங்கள்!"

"தங்களுடைய அழைப்பே எனக்குப் போதும்" என்றான் பார்த்திபேந்திரன்.

பழுவேட்டரையர் ஏறி வந்த படகு கரையை அடைந்தது. கிழவர் படகிலிருந்து இறங்கி ஆங்காரமே உருவெடுத்தவர் போல் வந்தார்.

நந்தினியும் பார்த்திபேந்திரனும் எழுந்து நின்றார்கள். அவர்களைப் பழுவேட்டரையர் பார்த்த பார்வையில் அனல் பொறி கிளம்பிற்று. பாவம்! அத்தனை நேரம் அவர்கள் சேர்ந்து உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்ததை நினைத்தாலே கிழவருக்குக் கோபமாயிருந்தது. அதை வெளியிடுவதற்கும் வழியில்லை. ஆகையால் உள்ளத்தில் கோபம் மேலும் கொதித்துப் பொங்கியது.

"நாதா! கப்பலை நன்கு சோதித்தீர்களா? மாலுமிகளை நன்றாய் விசாரித்தீர்களா? இவர் கூறியதெல்லாம் உண்மைதானா?" என்று நந்தினி கொஞ்சும் குதலை மொழியில் கேட்டாள்.

அந்தக் குரல் பழுவூர் அரசரைக் கொஞ்சம் சாந்தப்படுத்தியது.

"ஆம், ராணி! இவன் கூறியதெல்லாம் உண்மையென்று தெரிந்தது. சோழ நாட்டின் தவப் புதல்வன், சோழ குலத்தின் செல்வக் குமாரன், — தமிழகத்தின் கண்ணின் மணியான இளவரசன், — போய் விட்டான்!" என்று கூறிப் பல்லவனைத் திரும்பிப் பார்த்து, "அதற்குக் காரணமானவன் இதோ நிற்கும் கொலை பாதகச் சண்டாளன்தான்!" என்று கர்ஜித்தார்.

"ஐயா! அதற்குக் காரணம் நான் அல்ல; என் பேரில் பழி போடாதீர்கள்! இளவரசரைக் கடல் கொண்டதற்குக் காரணம் சோழ நாட்டையே ஆட்டுவிக்கும் பெண் உருக் கொண்ட மோகினிப் பிசாசு!" என்றான் பார்த்திபேந்திரன்.

கிழவரின் கோபம் இப்போது அணை கடந்த வெள்ளமாயிற்று. நந்தினியைப் பற்றித்தான் அவன் அவ்வாறு சொன்னதாக எண்ணினார்.

"அடப்பாவி! என்ன சொன்னாய்?" என்று கூறிக் கொண்டு, தரையில் கிடந்த ஈட்டியைச் சட்டென்று குனிந்து எடுத்தார். பார்த்திபேந்திர

ளைக் குறிவைத்து ஓங்கினார்.

நந்தினி அவருடைய கையைப் பிடித்துத் தடுத்தாள். "நாதா! இது என்ன காரியம்! எத்தனையோ பகைவர்களைக் கொன்ற தங்கள் வெற்றிவேல் இந்த விருந்தாளியின் இரத்தத்தினால் கறைப்படலாமா?" என்றாள்.

"ராணி! இவனா விருந்தாளி? சற்று முன்னால் உன்னைப் பற்றி இவன் கூறியதை நீ கேட்கவில்லையா?" என்றார் கிழவர். கோபத்தினால் அவர் குரல் குழறிச் சொற்கள் தடுமாறின.

"அவர் என்னைப் பற்றியா சொன்னார்? நன்றாய்க் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். அப்படியானால் என் கையிலுள்ள கத்தியினாலேயே பழி வாங்குவேன். தங்களுக்குச் சிரமம் தர மாட்டேன்!" என்றாள் நந்தினி.

"ஐயா! நான் என்ன பைத்தியமா, பழுவூர் இளைய ராணியைப் பற்றி அவ்விதம் சொல்வதற்கு? பழையாறையில் உள்ள மோகினிப் பிசாசைப் பற்றியல்லவா சொன்னேன்? இளைய பிராட்டி குந்தவை வந்தியத்தேவன் என்னும் வாலிபனிடம் இரகசிய ஓலை கொடுத்து இளவரசருக்கு அனுப்பினாள். அந்த முரட்டு வாலிபனைக் காப்பாற்றுவதற்காகவல்லவோ நான் எவ்வளவு தடுத்தும் கேளாமல் இளவரசர் அலை கடலில் குதித்தார்? ஆகையால் இளவரசரின் மரணத்துக்குக் குந்தவை காரணம் என்று சொன்னேன்" என்றான் பார்த்திபேந்திரன்.

பழுவேட்டரையர் தம் அவசர புத்தியைக் குறித்துச் சிறிது வெட்கம் அடைந்தார். அதை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "வெறுமனே மூடி மறைக்கப் பார்க்காதே! இளவரசரின் அகால மரணத்துக்கு நீயும் பொறுப்பாளிதான். அத்தகைய சுழற் காற்று அடித்த சமயத்தில் அவர் கப்பலிலிருந்து படகில் இறங்குவதற்கு நீ எப்படிச் சம்மதித்தாய்!— தொலைந்து போ! என் கண் முன்னால் நில்லாதே!" என்றார்.

நந்தினி குறுக்கிட்டு, "நாதா! இவரையும் தஞ்சாவூர் அழைத்துப் போவது நல்லதல்லவா? நடந்தது நடந்தபடி இவரே சக்கரவர்த்தியிடம் தெரிவிப்பது நலம் அல்லவா? இல்லாவிட்டால், ஏற்கெனவே நம் பேரில் குற்றம் சொல்லக் காத்திருப்பவர்கள் இதையும் சேர்த்துச் சொல்வார்களே? நாம்தான் இளவரசரைக் கடலில் மூழ்கடித்து விட்டோம் என்று கூடக் கூசாமல் பழி சொல்வார்களே?" என்றாள்.

"சொன்னால் சொல்லட்டும்! அதற்கெல்லாம் நான் அஞ்சியவன் அல்ல. சொல்லுகிறவன் நாக்கைத் துண்டிக்கச் செய்வேன். ஆனால் இவன் நம்மோடு வருவதும் ஒரு காரியத்துக்கு நல்லதுதான். — பார்த்திபேந்திரா! ஏன் அங்குமிங்கும் பார்த்து விழிக்கிறாய்? தப்பி ஓடலாம் என்று பார்க்கிறாயா?" என்று கூறிச் சற்றுத் தூரத்தில் நின்ற வீரர்களைக் கைகாட்டி அழைத்தார். நாலு பேர் விரைந்து வந்தார்கள்.

"இவனைப் பிடித்துக் கட்டுங்கள்!" என்று கட்டளையிட்டார்.

வீரர்கள் நாலு பேரும் பார்த்திபேந்திரனை நெருங்கினார்கள். அருகில் நெருங்கி வரும் வரையில் அவன் சும்மாயிருந்தான். பிறகு ஒரு நொடிப் பொழுதில் தன் கைவரிசையைக் காண்பித்தான். நாலு வீரர்களும் நாலு பக்கம் போய் விழுந்தார்கள்.

"ஐயா! என்னைக் கட்டித் தளையிடுவதாயிருந்தால் மற்றவர்களை அனுப்ப வேண்டாம். வீராதி வீரரும் முப்பத்தாறு போர்க்களங்களில் அறுபத்து நாலு காயங்களை அடைந்தவருமான பெரிய பழுவேட்டரையர் கையினால் கட்டுப்படுவதற்கு நான் சித்தமாயிருக்கிறேன். மற்றவர்களை என் அருகிலும் நெருங்க விட மாட்டேன்!" என்றான்.

பழுவேட்டரையர் முகத்தில் சிறிது மலர்ச்சி காணப்பட்டது. "நீ வீர பல்லவ குலத்தில் பிறந்த வீரன்; சந்தேகமில்லை. எங்களுடன் தஞ்சாவூருக்கு வந்து விட்டுப் போகச் சம்மதம் என்றால் சொல். உன்னைக் கட்ட வேண்டிய அவசியமில்லை" என்றார்.

"அதுதான் என் விருப்பம்; சக்கரவர்த்தியை நேரில் பார்த்து நடந்தது நடந்தபடி சொல்ல விரும்புகிறேன். என் பேரிலும் வீண் பழி ஏற்படக் கூடாதல்லவா?" என்றான் பார்த்திபேந்திரன்.

"அப்படியானால், உடனே புறப்

அருள்வாக்கு



"பகவான் நம்மைக் கண் திறந்து பார்க்க வேண்டும்" என்று எல்லோரும் குறைப்பட்டுக் கொள்கிறோம். கருணைக் கடலான ஈச்வரன் கண்ணைத் திறந்து பார்த்துக் கொண்டேதான் இருக்கிறான். ஏன் அவன் நாம் இஷ்டப்படுகிற மாதிரி நமக்கு ஸௌபாக்கியங்களைத் தரவில்லை என்றால், நாம் கண்ணைத் திறந்து லோகத்தின் கஷ்டங்களைப் பார்த்து அது நிவ்ருத்தியாவதற்கு நம்மாலான உபகாரத்தைப் பண்ணாமலிருப்பதால்தான். நம் மனஸ் மற்றவர்களிடம் தயையால் நிரம்பினால், உடனே கருணையே உருவமான ஈச்வரனும் நமக்கு தயைபுரிவான். ஆனதால் கண்ணைத் திறந்து பார்க்க வேண்டியது நாம்தான்; பகவானல்ல.

கண்ணைத் திறந்து பல தினுசாகக் கஷ்டப்படுகிறவர்களையும் பார்த்து நம்மாலான வரையில் அதை நிவிருத்தி பண்ண வேண்டும். நம் மதத்தில் பொதுத் தொண்டு உண்டா என்று கேட்பவர்கள் கேட்டுவிட்டுப் போகட்டும். நான் சொல்கிறேன்: இப்போது நம் மதத்துக்கே தொண்டால்தான் வேலி போட்டு இதை விட்டு எவரும் போகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டும். ஹிந்து மதம் வேலி இல்லாத தர்காஸ்து நிலம் மாதிரிக் கிடக்கிறது. இந்த நிலைமை மாறி இந்த மதத்தைக் கவனிக்க மனுஷ்யர்கள் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை உண்டு பண்ண வேண்டும். ஸ்வய மரியாதையுடன் நம் மதத்தில் இருக்கலாம் என்று ஸகல வகுப்பினருக்கும் நம்பிக்கையை உண்டு பண்ணுவது எல்லோரும் சங்கமாகக் கூடிச் செய்கிற பொதுத் தொண்டுதான்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

படுவோம்" என்றார் பழுவேட்டரையர்.

அச்சமயம் அவர்கள் இருந்த இடத்துக்குச் சற்றுத் தூரத்திலிருந்த காட்டிலிருந்து ஆந்தை ஒன்று கூவும் சத்தம் கேட்டது.

நந்தினி சத்தம் வந்த திக்கை நோக்கினாள். அதனால் அவள் முகத்தில் ஏற்பட்ட மாறுதலை மற்ற இருவரும் கவனிக்கவில்லை.

"இந்தக் கோடிக்கரைக் காடு மிக விசித்திரமானது. இங்கே பட்டப் பகலிலேயே கோட்டான் கூவுகிறதே!" என்றான் பார்த்திபேந்திரன்.

இன்னும் இரண்டு தடவை அதே மாதிரி ஆந்தையின் குரல் கேட்டது.


நந்தினி திரும்பிப் பார்த்து, "உடனே புறப்பட வேண்டியதுதானா? இன்னும் ஒரு நாள் இங்கே இருந்து பார்ப்பது நல்லதல்லவா? இளவரசர் ஏதாவது கட்டையைப் பிடித்துக் கொண்டு கரையில் வந்து ஒதுங்கக் கூடும் அல்லவா?" என்றாள்.

"பார்த்திபேந்திரா! இளையராணியின் மதிநுட்பத்தைப் பார்த்தாயா? நமக்கு இது தோன்றாமல் போயிற்றே? ஆம்; இன்னும் ஒருநாள் இங்கே இருக்க வேண்டியதுதான். இருப்பது மட்டும் போதாது. கடற்கரை நெடுகிலும் ஆட்களை நிறுத்தி வைக்க வேண்டும்; தேடிப் பார்க்கவும் சொல்ல வேண்டும்!" என்றார் பழுவேட்டரையர்.

"எனக்கு ஆட்சேபமில்லை, ஐயா! ஆனால் இளவரசர் இனி அகப்படுவார் என்ற நம்பிக்கை எனக்கில்லை. சுழற் காற்று அடித்த போது கடலின் கொந்தளிப்பைப் பார்த்திருந்தால் தாங்களும் என்னைப் போலவே நிராசை கொள்வீர்கள்" என்றான் பார்த்திபேந்திரன்.

எனினும், கிழவர் கேட்கவில்லை. கடற்கரை நெடுகிலும் ஒரு காத தூரத்துக்குத் தம் ஆட்களைப் பரவலாக நிறுத்தி வைத்தார். அவரும் அமைதியின்றிக் கடற்கரையோரமாக அலைந்து திரிந்தார்.

(தொடரும்)



அடிவாரத்தில் ஓர் அனுபவம்

— ஸரோஜ்

கோவையிலிருந்து வந்த அந்தத் திருமண அழைப்பைப் பார்த்தவுடனேயே நான் நிச்சயம் செய்து விட்டேன் — கல்யாணத்திற்குப் போவது மட்டுமல்லாமல், கோவைக்கு மிக அருகாமையில், அறுபடை வீடுகளுக்குச் சமமாகக் கருதப்படும் அந்தக் குன்றின் மேல் அமர்ந்திருந்த முருகனை மீண்டும் ஒருமுறை கண் குளிரத் தரிசிக்க வேண்டும் என்று.

போன வருஷம் மதுரையிலிருந்து புறப்பட்ட டூரிஸ்ட் பஸ்ஸில் நான் என் குடும்பத்துடன் போயிருந்த போது திருப்தியாகத் தரிசனம் கிட்டவில்லை. மதுரையிலிருந்து புறப்படும்போதே பல மணி நேரத் தாமதம். வழியெல்லாம் நசநசவென்று மழை. இருட்டும் தருவாயில் எங்களை அடிவாரத்தில் கொண்டு சேர்த்தார்கள். அரை மணி நேரத்தில் திரும்ப வேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது. ஏதோ போனோம், வந்தோம் என்று திரும்பினோமே தவிர, பார்த்தது எதுவுமே சரியாக நினைவில்லை. சந்நிதியில் ஐந்து நிமிஷம் கூடத் தாமதிக்க முடியவில்லை.

மலை உச்சிக்குப் போக வர சாலை வசதி இருந்தும், எங்கள் பஸ்ஸிற்கு அனுமதி இல்லை. தேவஸ்தான பஸ் அப்போதுதான் மேலே போயிருந்தது. திரும்பி வந்து புறப்பட எப்படியும் ஒரு மணி நேரம் ஆகலாம் என்றார்கள். பஸ்ஸில் இருந்த முப்பத்தைந்து பேரும் அங்கிருந்த சில டாக்ஸிகளை நோக்கி விரைந்தோம்.

என்னுடன் என் மனைவி, பெண், பேத்தி வந்திருந்தார்கள். பேத்திக்குத் தனியாக உட்கார இடம் வேண்டும். தராவிட்டால் தன் குரலால் ஊரைக் கூட்டுவாள். காலையி

லிருந்து பஸ் பயணத்தில் அனுபவப்பட்டிருந்தோம். மொத்தம் எட்டுப் பேர்கள் ஏறினால்தான் வண்டியை எடுப்பேன் என்றார் ஓட்டுனர். தலைக்கு ஆறு ரூபாய் கேட்டார் போகவர. ஐந்து பேர் அமரக் கூடிய வண்டியில் எட்டுப் பேர்.

அப்போது எங்கள் வண்டி புறப்படவில்லை என்பதை அறிந்த ஓர் அம்மையார் வேகமாக வந்தார்கள். அவர்களால் ஓட முடியாது. அசைந்து அசைந்து வந்தார்கள். அழித்தால் மூன்று 'பிந்து கோஷ்' செய்யக் கூடிய சரீரம். உடுத்தியிருந்த பட்டும் பூட்டியிருந்த தங்கமும் பணப் பசையைப் பறைசாற்றின.

அவளை மட்டும் டாக்ஸியின் பின் ஆசனத்தில் அமர அனுமதித்தால், அப்புறம் இருபுறமும் சில 'மில்லி மீட்டர்களே' மிஞ்சும். அப்புறம் பாக்கி ஏழு பேர் எங்கே உட்காருவதாம்? ஓட்டுனர் வண்டியின் கதவைத் திறந்து அந்த அம்மையாரை ஏறி அமரச் சொன்னதும் நாங்கள் ஒட்டு மொத்தமாக அலறினோம். நான் உடனே ஒரு முடிவுக்கு வந்தேன்.

"இதோ பாரப்பா... எட்டு பேர் ஏறினால் உனக்கு நாற்பத்தெட்டு ரூபாய் கிடைக்கும். நான் ஐம்பது ரூபாயாகக் கொடுத்து விடுகிறேன்... எங்களை மட்டும் கூட்டிப் போ" என்றேன். அவனுக்கென்ன? பணம்தானே முக்கியம்? சம்மதித்தான். அந்த அம்மையாரை அடிவாரத்தில் புறக்கணித்து விட்டு மேலே ஏறி, தரிசனம் முடித்துத் திரும்பினோம்.

அப்போது கூட அந்த அம்மையார் ஒவ்வொரு டாக்ஸியாகப் பார்த்து இடம் தேடி அலைந்து கொண்டிருந்தார்.

"தனியாக ஏறிப் போனால் கூட டாக்ஸி அச்சு முறிந்து விடும்!" எனப் பரிகசித்தாள் என் பெண். "ஐயோ பாவம்... இப்படி ஒரு சதைக் குன்றாக வளர்ந்து சிரமப்படுகிறாளே!" என்ற அனுதாபம் தான் எனக்குப் பிறந்தது.

இப்போது ஒரு வருஷத்துக்கு மேல் ஆயிற்று. அந்தப் பக்கம் போக ஒரு சந்தர்ப்பம்.

போன இடத்தில் முகூர்த்தம் முடிந்தது. இலை போட இன்னும் மூன்று மணி நேரம் ஆகும் எனத் தெரிய வந்தது. கோவிலுக்குப் போய்த் திரும்பலாம் என நண்பனுடன் புறப்பட்டேன்.

டவுன் பஸ்ஸைப் பிடித்து அடிவாரம் அடைந்தோம். ஒரு டாக்ஸியை நாடி, ஏறி அமர்ந்தோம். திடுக்கிட்டுப் போனேன். போன வருஷம் பார்த்த அதே அம்மையார் எங்கள் டாக்ஸியில் ஏற ஓடி வந்தார். டாக்ஸியில் எங்களைத் தவிர இன்னும் மூன்று பேர் ஏற்கெனவே இருந்தனர்.

இறைவா! இது என்ன கூத்து?... எப்படி நான் வரும் சமயம் பார்த்து இந்த அம்மையாரும் வருகிறார்?

பழையபடி நாங்கள் மட்டும் ஐம்பது ரூபாய் கொடுத்து மலைக்குப் போய்த் திரும்பினோம். திரும்பி டவுன் பஸ்ஸில் ஏறியவுடன் போன வருஷத்து அனுபவத்தையும் கூறி, என் ஆற்றாமையை என் நண்பனிடம் வெளியிட்டேன்.

"நீ நூறு தடவை இங்கே வந்தாலும் அந்த அம்மாள் இங்கேதான் இருப்பார்கள்."


"பாவம்டா! என்றைக்குத்தான் அவர்களை மலைக்குப் போய்த் தரிசிப்பார்களாம்!"

"அவர்கள் நினைத்தால் எப்போது வேண்டுமானாலும் தனியாக ஒரு வண்டியில் பணம் கொடுக்காமல் போய் வரலாம்... ஏனென்றால் இங்கே ஓடுகிற டாக்ஸிகளில் பாதி அந்த அம்மாவுக்குச் சொந்தம்."

"என்னடா சொல்கிறாய்?"

"டாக்ஸி எட்டு பேருக்குக் குறைவாய் போனால் லாபம் குறையும்.. காத்திருக்கக் காத்திருக்கத் தேவஸ்தான பஸ்ஸுக்குக் கூட்டம் சாயும். எப்போது எட்டு பேர் இல்லையோ அப்போது இந்த அம்மாள் டாக்ஸியில் ஏறப் போவது போல் பாசாங்கு காட்டுவார்கள். எப்போதோ வந்து போகும் உன்னைப் போன்ற இளிச்சவாயன்கள் — ஸாரிடா — ஐம்பது ரூபாயைத் தூக்கி எறிவார்கள்... அவர்கள் அவசரம் அப்படி..."

நான் ஊமையாகிப் போனேன்.



[redacted]

"வேலைக்குப் போற பெண் வேண்டாம். வீட்டோடு இருக்கிற பெண் போதும் என்கிறாரே உங்கள் அம்மா, ஏன்?"

"பகல் முழுதும் மாட்டுப் பெண் ஆபீஸ் போய் விட்டால் அவள் யார் கூடச் சண்டை போடறது? அதற்காகத்தான் வீட்டோடு இருக்கற பெண்ணைத் தேடறா!"

— லலிதா செல்லப்பா.

[redacted]

இக்கா அழுதபோது...

"ஒரு வாரத்துக்குள்ள வந்துரு சுசி... சரியா அடுத்த ஞாயித்துக் கிழமை. மத்தியான பஸ்ஸாலை எதிர்பார்ப்பேன். என்ன?"

"ம்..."

"சேர்ந்ததும் லட்டர் போடு."

"ம்......"

"பையனும் நீயும் இல்லாம ஹோன்னு இருக்கும். லட்டர் வந்தா மனசுக்குத் தெம்பு. நேர்ல நிக்கிறு மாதிரி...."

இன்னும் என்ன பாக்கி என்பதைப் போல் சுசிலா வெறித்துப் பார்க்க —

"குழந்தையை நேரத்துக்குச் சாப்பிட வச்சிரு. அடிக்காதே. அங்க குளிரும். ராத்திரியில ஸ்வெட்டர் போட்டுத் தூங்க வைமி..." என ராகவன் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ஸ்வெட்டர் எடுத்து வச்சிட்டியா?" என நிமிர்ந்த போதுதான் அவளைப் பார்த்தான். எரிச்சலோடு நேற்று இரவு பார்த்தாளே அந்தப் பார்வையாகத் தெரிந்தது.

"ஏன் கோவம் இன்னும் தீரலையா சுசி?"

"அட ராமா.... என்றாள் அவள்.

"சொல்லு அப்பத்தான் எனக்குத் திருப்தி"

"........."

"நீ ரொம்ப அவசரப்படறே.... நம்ம கஷ்டம் இன்னும் கொஞ்ச நாளைக்குத்தான். சீக்கிரமே நல்ல காலம் வரும். பாரேன்...."

"பெட்டியில் எல்லாம் அடுக்கியாச்சா?"

"ஓ.... அப்பவே ரெடி....."

பெட்டியை இழுத்து, திறந்து காண்பித்தான்.

அவனது துணிமணிகள், குழந்தைக்கு வேண்டிய மருந்து பாட்டில்கள், பால் பவுடர் எல்லாவற்றையும் மறக்காமல் எடுத்து வைத்திருந்தான். இவ்வளவு சின்னப் பெட்டியில் அத்தனையையும் அடக்கியது சாமர்த்தியம்தான். "இந்த மாதிரி சாமர்த்தியங்களுக்குக் குறைச்சல் இல்லை" என்று நினைத்துக் கொண்டாள்.

துணிக் கொடி காலியாக இருந்தது. உலர்ந்த அவனது துணிமணிகள் தகரப் பெட்டிக்கு மாறி இருந்தன. வேண்டாதவைகள் அழுக்குக் கூடையில் அடைபட்டிருந்தன.

வீடு 'வெறிச்' சென்று தெரிந்தது.

சில சில்லறைப் பாத்திரங்களையும், தண்ணீர்ப் பானையையும் அகற்றி விட்டால் துடைத்து வைத்த மாதிரி ஆகிவிடும்.

அவனுக்கு ஆத்திரம் வந்தது. பழைய கோபம் தலைதூக்கியது.

கல்யாணமாகி மூன்று வருஷம் ஆகிறது.

உண்டு, உடுத்தி, சேர்ந்து படுத்து, ஒரு குழந்தையைப் பெற்றுக் கொண்டதைத் தவிர மிச்சம் ஒன்றும் இல்லை. கையில் பைசா நாணயம் கிடையாது.

கல்யாணத்திற்குப் பிறகு புதிதாக அவன் வாங்கியது மண்ணெண்ணெய் ஸ்டவ் ஒன்றுதான். அதுவும் துருப்பிடித்து ஒழுக ஆரம்பித்து விட்டது.

பேசாமல் அக்காள் வீட்டிலேயே இருந்து விடலாமா? பத்துப் பாத்திரம் தேய்த்தால் தனக்கும், இந்தப் பிஞ்சு ஜீவனுக்கும் சோறு போட மாட்டாளா?

"என்ன சுசி பேச்சையே காணோம்? எனக்கும் ஆசைதான் சீக்கிரம் சொந்தத் தொழில் ஆரம்பிக்கணும்னு... வெறும் சம்பளத்தை நம்பி எத்தனை நாளைக்குப் போதும் போதாம வாழுறது.... ம்?" தன்னைச் சமாதானப்படுத்த முயற்சி செய்கிறானா?

அவனுக்குப் பழக்கப்பட்டுப் போன வார்த்தைகள்தான் அவை.

நெருக்கிப் பிடித்தால், "இதோ ஆச்சு" என்பான். நாளானால், "இப்ப எங்க சுசி... மார்க்கட் ரொம்ப டல்.... எனச் சலித்துக் கொள்வான். "பொறு பார்க்கலாம்" என சமாதானம் பண்ணுவான். "கை முதலுக்கு உன் நகை போதாது" எனக் காரணம் சொல்வான். "ஒண்டி ஆளு என்ன பண்ணுவேன்" என முணுமுணுப்பான்.

தனி மனிதர்கள் உலகில் எத்தனையோ சாதிக்கவில்லையா?


அவனுக்கு முதலாளி போதும். "ராகவன் கெடச்சது என் அதிர்ஷ்டம். என் பிள்ளை மாதிரி அவன்" என்ற வார்த்தை போதும்.

மாதக் கடைசியில் இழு—பறியாக இருக்கிற நிலைமையைச் சொன்னால் கோபம்.

நேற்றைக்குக் கூட அதனால்தான் சண்டையே வந்தது.

காப்பிப் பொடி ஆகிவிட்டது. யாரிடமும்

முஃஹ்ராஜ் யாசீன்



கேட்க வேண்டாம் என்ற வைராக்கியத்தில் வெறும் பாலில் சர்க்கரையைக் கரைத்து இறக்கி வைத்தாள். ஏன் என்று ராகவன் வந்து கேட்டால், சுடச்சுடப் பதில் சொல்ல சில 'நல்ல' வார்த்தைகளையும் யோசித்து வைத்திருந்தாள்.

மாலை ஏழு மணி.

''உஷ்... அப்பாடா'' என வீடு திரும்பியவன் ''காப்பி ரெடியா?'' எனக் கேட்டான்.

தனது ஒத்திகைகளோடு; ''காப்பிப்பொடி இல்லை. வெறும் பால்தான் இன்னிக்கு'' எனச் சொல்லிவிட்டு, அவனது முகத்தைப் பார்த்தாள் சுசிலா.

''குட்... இருக்கிறதை வச்சு வாழ்க்கையை அமைச்சுக்கணும். அதான் நல்ல பாலிசி'' — எதிர்பாராத பதில் இது.

''பாலிசியைக் குடிக்க முடியாது. எனக்குக் காப்பிப் பொடி வேணும்'' என்றாள் சுசிலா.

''ஒருநாள் அட்ஜஸ்ட் பண்ணிக்க. நாளைக்குச் சம்பளம்.''

''சம்பளம் வந்தா மட்டும் என்ன? பத்து நாள் தாராளம். அப்புறம் இழுபறி. எதிர்காலத்தை நினைச்சுப் பார்த்தீங்களா...? குடும்பம் பெரிசாகிக்கிட்டே போகுது.''

''மனுஷனுக்குத்தான் அந்தப் பயம். பறவைகள் மிருகங்களுக்கு இருக்கா?''

''நான் மிருகம் இல்லை. புல்லைத் தின்னு வளர முடியாது. கட்டிக்கத் துணி வேணும். நகை நட்டு வீட்ல சாமான் செட்டுன்னு வேணும்...''

''உடம்பு அளவில் எல்லோரும் மிருகம் தான்... விஞ்ஞானம் அப்படித்தான் சொல்லுது.'' ஏதோ வேடிக்கைக்காக ராகவன் சொல்ல, அவளது கோபம் மேலும் ஏறியது.

''அதான் பார்க்கிறேனே தினத்துக்கும் ராத்திரியில. அதைத் தவிர குடும்பம்ங்கிறதுக்கு வேற என்ன நடக்குது இங்கே?'' என்றாள்.

பொட்டில் அடித்த மாதிரி ஒருகணம் கலங்கிப் போனான் ராகவன். சிரிப்பு மறைய, தன்னைச் சுதாரித்து அவளையே பார்த்தான்.

கேவலம் பணத்தேவையா இத்தனை பெரிய கேள்விக்குக் காரணம் என்று யோசித்திருப்பாளோ?

ராத்திரி மௌனமாகவே கழிந்தது. அவளுக்குப் பயமாகி விட்டது. தனது வார்த்தைகள் அதிகம் என்பது விளங்க,

தனக்கு என்ன ஆயிற்று என்று யோசித்தான்.

அலுப்பா? இங்கே அங்கே நகர முடியாமல் மூலையில் அடித்த மாடாகச் சுற்றிச் சுற்றி வர நேர்ந்த எரிச்சலா?

அக்காள் வரச் சொல்லி எழுதிக் கொண்டிருந்தது ஞாபகம் வந்தது.

விடிந்ததும், ''நான் ஊருக்குப் போறேன்'' என்றான்.

''கோவிச்சுக்கிட்டா?''

''கோவம் இல்லை. என்னமோ மனசு சரியாயில்லே.''

''சரி...... போய்ட்டு வா. மத்தியானம் சம்பளம் வாங்கி வர்றேன்.''

வாங்கி வந்தான். அவள் புறப்பட உதவி செய்தான். புறப்பட்ட நிலையில் ''ஒரு வாரத்துக்குள்ளே வந்துடு...'' என்றான்.

பஸ் ஏறி வெகுதூரம் வந்த பிறகுதான், அவனது பத்திரத்திற்குத் தான் எதுவுமே சொல்லவில்லை என்பது ஞாபகத்திற்கு வந்தது.

அக்காள் புருஷன்தான் அவளை முதலில் பார்த்தார். எங்கோ அவசரமாகப் புறப்பட்டு வாசலுக்கு வந்தவர், எதிரில் வந்து நின்ற ஆட்டோவையும், கீழே கைக்குழந்தையுடன் இறங்கிய அவளையும் கண்டுவிட்டு, ''அடடே... சுசீ... வாம்மா...'' என்றார். அங்கிருந்தே உள்பக்கம் திரும்பி, ''யாரு வந்திருக்கான்னு பாரு... விருந்தாளி!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.



ஆள் முன்னைவிட இளமையாகத் தெரிந்தார். துளிகூட வெளுக்காத தலைமுடி. டீஷர்ட். கூலிங் கிளாஸ்...

சாதாரணமாக எட்டிப் பார்த்த அக்காள், "அடி சுசீ..." எனக் கூச்சல் போட்டாள். அவளது குழந்தைகள் ரமேஷும், சுதாவும் கூட ஓடி வந்தார்கள்.

"என்னடி இது லெட்டர் கூடப் போடாம?...."

"உன் லெட்டர் கிடைச்சது. என்னவோ தோணிச்சு. வந்துட்டேன்"

"சரி சுசீலா... ரெஸ்ட் எடு. நான் அப்புறம் பார்க்கறேன்"

–மாமா போய் விட்டார்.

அக்காள் கைக் குழந்தையை வாங்கிக் கொண்டாள். கையைப் பிடித்து "வாடி உள்ளே....." என அழைத்துப் போனாள்.

வீடு பளிச்சென்று இருந்தது.

மொஸைக் தரை. பளபளத்த சுவர்கள். கம்பீரமாக நிற்கும் பிரிஜ். வண்ணத் துணி போர்த்திய டீ.வி., மிக்ஸி, கிரைண்டர். சுதாவின் கழுத்தில் மூணு பவுன் ஒற்றைச் செயின். அக்காவின் உடைகளுக்கு பீரோ. கட்டில், மெத்தை.....

"யேயப்பா......" என்ற மலைப்புத்தான் வந்தது.

கடைசியாக அவள் வந்து இரண்டு வருஷம் இருக்கும். அதற்குள் இவ்வளவா?

மாமாவுக்குப் பதவி உயர்ந்திருக்குமோ? "இந்தப் பிடித்தம் அந்தப் பிடித்தம்" என்று சொல்வார்களே. அதுபோல சேமித்திருப்பாரோ? பாதி தவணையாக இருக்குமோ?

ஒரு கணம் எல்லாவற்றையும் அனுபவித்து விட வேண்டும் போல வேகம் வந்தது அவளுக்கு. வாழ்க்கையில் என்ன இருக்கிறது? காலம் முழுதும் கஷ்டப்படுவதை விட, இப்படி ஒருநாள், ஒரு பொழுது அனுபவித்து, செத்து விட வேண்டும்.

அவள் முகத்தில் ஓடிய சிந்தனை ரேகைகளைப் படித்த அக்கா கேட்டாள்:

"என்ன சுசீ.... கோவிச்சுக்கிட்டு வந்தியா? முகம் ஒரு மாதிரியா இருக்கு?"

"இல்லேயே......."

"சும்மா சொல்லுடி...." அவள் கெஞ்சுதலாய்க் கேட்க—

எதையாவது கற்பனை செய்து கொள்ளப் போகிறாள் என பயந்து சுருங்கச் சொன்னாள்.

"உனக்கும் பிரச்னையா.... சரிதான்" என்றாள் அக்காள்.

"அப்படின்னா?"

"இப்பத்தான் வந்திருக்கே. வா.... அப்புறம் பேசலாம்"

சொன்னாளே தவிர, பேசுவதற்குத் தனிமை கிடைப்பது அரிதாகவே இருந்தது. வேலை..... வேலை.....

துணி துவைக்க, பாத்திரம் விளக்க, கிரைண்டரில் மாவை அள்ள, காப்பி போட, பலகாரம் செய்ய, இடையில் குழந்தைகளிடம் கத்த...

இவ்வளவு வசதிக்கு இவள் ஏன் அல்லாட வேண்டும்.

கேட்டாள்.

"ஏன்க்கா.... ஒரு வேலைக்காரி கிடைக்க மாட்டாளா உனக்கு?"

அக்கா ஏதோ சொல்ல வாயெடுத்த போது, ரமேஷ் — மூத்தவன் — வந்தான்.

"அம்மா எனக்குப் பணம் வேணும்...."

"எதுக்குடா...?"

"சினிமாவுக்குப் போகணும்......"

"பரீட்சை நாளல சினிமா.... சல்லிக்காசு தர மாட்டேன். நேத்திக்குத்தானே அம்பது குடுத்தேன்....."

"அது நேத்திக்குப் பார்ட்டிம்மா.... இன்னிக்குத்தான் சினிமாவுக்குப் போறோம்"

"போய்ப் படி........"

"முடியுமா? முடியாதா?" என விறைத்தான் அவன்.

"முடியாது......"

"நிசமா?"

"நிசம்மா......"

"சரி நான் அங்கே போயி வாங்கிக்கறேன். அப்பா அங்க இருப்பார்ல?"

அக்காள் ஆடிப் போனாள்.

'நாயே.... பேயே' என வாய்க்கு வந்தபடி திட்டினாள். "அப்பன் புத்திதானே வரும். ஓடு நாயே என் முன்னாலே நிக்காதே......" பீரோ சாவியை விட்டெறிந்தான். "என்னக்கா" எனக் கலவரமடைந்து சுசீலா வினவ, "என்னத்தைச் சொல்றது......" எனத் தோளில் சரிந்தாள்.

காப்பி சாப்பிடுவதற்கு வீட்டில் மூன்று பேர்தான் இருந்தார்கள். சுசீலா, அக்காள், அவளது பெண் சுதா......


சுதா ஹாலில் டீ.வி. பார்த்துக் கொண்டிருக்க, சுசீலா காப்பி கலந்ததும் அக்காள் அடுக்களையில் இருந்து கத்தினாள். "ஏய் சுதா! வாடி காப்பி ஆறுது"

"பொறும்மா வர்றேன்....."

"சனியனே..... குடிச்சுட்டுப் போய் உக்காந்து தொலை. யாரு வேணாம்னது?"

"விடுக்கா.... அது இஷ்டப்பட்டப்ப குடிக்கட்டும்....."

"அவளுக்குன்னு இன்னொரு வேலை



கண் டாக்டர்: என்ன சாமியாரே, என்ன வேணும்?

சாமியார்: ஞானக் கண் சரியா தெரியலே. கொஞ்சம் டெஸ்ட் பண்ணி கண்ணாடி எழுதிக் கொடுங்க!

— லலிதா செல்லப்பா.

பார்க்கணுமா..... சுதா..... ஏய்......''

''சும்மா இருக்க மாட்டேம்மா...... நீ.....''

'வெடுக்' கென்று எழுந்து வந்தவள் ஒரு வாய் எடுத்துக் குடித்தாள். அப்படியே வாஷ் பேசினில் ஓடிப் போய்க் கொப்புளித்தாள்.

''காப்பியா இது? வேப்பெண்ணெய் மாதிரி இருக்கு. இதுக்குத்தான் இவ்ளோ அவசரமாக் கூப்பிட்டியா?''

''இதுகளுக்கு ருசி கண்டு போச்சு. நாக்கு ருசி. அப்பனுக்கு உடம்பு ருசி.'' என்றாள் அக்கா.

சுசிலாவுக்குச் சன்னமாக ஏதோ புலப் பட்டது.

அக்காவை மெல்லியதாக ஏதோ போர்த்தியிருப்பதாகவும், உள்ளே தனக்குள் அவள் புழுங்கிக் கொண்டிருக்கிற மாதிரியும்.....

மணி ஒன்பதரை.

''வா சுசிலா...... சாப்பிடலாம்'' என்று கூப்பிட்டாள் அக்காள்.

''மாமா வரட்டுமே......'' என்றாள் அவள்.

''அவரு வரமாட்டாரு...... நீ வா. பசிக்குது''

இலை விரித்து நிறைய பரப்பி இருந்தாள்.

''இத்தனை போட்டிருக்கே..... திடீரென மாமா வந்துட்டா என்ன பண்றது?''

''அதான் வரமாட்டாரன்னே.....''

''அதென்ன அவ்வளவு நிச்சயமாச் சொல்றே?''

''சாப்பிடு.....'' அக்காள் சிரித்தாள். விரக்தி கலந்த சிரிப்பு.

பேசிக் கொள்ள ஏதுமற்றவர்கள் போல இருவரும் மௌனமாகச் சாப்பிட்டு, எழுந்து, மீதியைக் கழுவி, துடைத்து, ஹாலில் அருகருகே பாய் விரித்துப் படுத்துக் கொண்ட பிறகும் அதே மௌனம் நீடித்தது.

கொஞ்ச நேரம் பொறுத்து. ''அக்கா.....'' எனக் கூப்பிட்டாள் சுசிலா.

''ம்...'' எனத் திரும்பினாள். கன்னத்தில் நீர்த் திவலைகள். விளக்கொளியில் மங்கலான ஊதாவாய்..... அழுகிறாளா?

''என்னக்கா இது?'' எனத் துள்ளி எழுந்தாள் சுசிலா.

அக்காவின் உடல் பெரிதாகக் குலுங்க ஆரம்பித்து விட்டது.

''இத்தனை இருந்தும் எனக்கு வாழ்க்கை இல்லேடி. அவரு எனக்கு மோசம் பண்றார்டி.....'' எனக் கேவினாள்.

''புள்ளைங்க முழிச்சுக்கப் போவுது. அழாதே. என்னன்னு சொல்லு...''

சொன்னாள்.

மாமாவுக்கு உத்தியோகம் உயர்ந்ததை—

பின்வழிகளில் நிறையப் பணம் வருவதை—

எவளோ ஒருத்தியை வைத்துக் கொண்டு இந்த வயதில் கொட்டமடிப்பதை—

''முதல்ல எனக்கு ஒண்ணுமே தெரியலேடி. தினத்துக்கும் லேட்டாத்தான் வருவாரு. பெரிய உத்தியோகம், அப்படித்தான் இருக்கும்னு நினைச்சுக்கிட்டேன். இரண்டொருத்தர் ஜாடையாப் பேசினப்பக் கூட பொறுமையில கதை பண்றாங்கன்னு காதுல வாங்கிக்கலே. ஒருநாள் குழந்தைகள்லாம் ஆசைப்படுதேன்னு சினிமாவுக்குப் போனோம். அங்கேதான் அந்தக் கண்றாவி தெரிஞ்சது. அவரும் வந்திருந்தாரு — அவளோட. என்னங்க இதுங்கறேன். ஆமாங்கிறார். குழந்தைகளை வச்சுக்கிட்டு என்ன பண்ணுவேன் சொல்லு?.... அன்னக்கி இருந்து நான் பேசறதில்லே. வாரத்துக்கு ஒரு தரம் ரெண்டு தரம் வந்து குழந்தைகளைப் பார்த்துட்டுப் போயிடறாரு.... அப்பன் மிரட்டாத பிள்ளைகளா குழந்தைகளுக்கும் துளிர்த்துப் போச்சு. அதுங்க எதிர்காலத்தை நினைச்சாத்தான் பயமா இருக்கு......''

சுசிலா திகிலடைந்த முகத்துடன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''அவளையும் ஒரு தனிக்குடித்தனம் வச்சிருக்காராம். அங்கேயும் நிறைய செலவு பண்றாராம். எத்தனை நாளைக்கு சொல்லு... ஒரு மொட்டை பெட்டிஷன் போனா எல்லாத்தையும் அள்ளிக்கிட்டு கையில விலங்கை மாட்டிட மாட்டானா...ம்?''

தான் என்ன சொல்வது என சுசிலாவுக்கு விளங்கவில்லை.

அக்காள் இன்னும் என்னென்னவோ பேசினாள். அவரை விட்டு விலகி விடப் போவதாக.... தனக்கென்று ஒரு வேலை தேடப் போவதாக....

மனத்தின் பாரத்தையெல்லாம் இறக்கி வைத்துவிட்டு அழுதாள்....

அக்காள் அழுதபோது சுசிலாவுக்கு ராகவனின் ஞாபகம் வந்தது.

''ஒரு வாரத்துக்குள்ள வந்துரு சுசி...'' புறப்படும் போது எவ்வளவு வாஞ்சையாகச் சொன்னான்...! அந்த ஏழைமையிலும் சொர்க்கம் இருக்கிறது.

நாளையோடு ஒரு வாரம் ஆகப் போகிறது: ஊருக்குப் புறப்பட வேண்டும். அவளுக்கு அக்காவை நினைத்த போது சங்கடமாய் இருந்தது.

தலைவர்: மேடையில் அமர்ந்திருக்கிற அந்த நாலு பேச்சாளர்களையும் இறங்கி, எதிரே தரையில் உட்காரச் சொல்லுங்க...

இவர்: ஏன் தலைவரே...?

தலைவர்: மேடைக்கு முன்னால் நாலு பேராவது இருந்தால்தான்யா எனக்குப் பேசவரும்...!

— சரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.



வேரில்லாத மரங்கள்

சின்ன 'கிரிக்கெட் பேட்'!

மரத்தாலான 'மினியேச்சர்' கிரிக்கெட் பேட்!

சாண் உயரம், இரண்டங்குலம் அகலம், கறுப்புப் பிடியுமான பேட்!

''ராஜாவுக்கு மிகுந்த அன்புடன்—கபில் தேவ்'' — என்று எழுதிக் கையெழுத்திடப் பட்ட பேட்!

பெட்டியிலிருந்து வெளியில் எடுத்ததை மேஜை மீது வைக்கும் முன், அரை நிமிஷம் அதையே ஊன்றிப் பார்த்த போது சந்தோஷமாக இருந்தது.

தில்லியில் நடந்த சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், ட்ரெஸ்ஸிங் ரூமில் உட்கார்ந்திருந்த கபில்தேவிடம் சென்று ராஜாவைப் பற்றிக் கூறி ''அவன் பேரை எழுதி ஒரு கையெழுத்துப் போட்டுத்தர முடியுமா கபில்?'' என, ''கொஞ்சம் இருங் கள்'' என்று எழுந்து போனவர் திரும்பி வந்த போது கையில் குட்டியாய் ஒரு மினியேச்சர் பேட்!

''பேர் என்ன சொன்னீங்க?'' என்று கேட்டு, அதிலேயே கையெழுத்திட்டுத் தந்ததை ராஜாவிடம் ''இந்தா உனக்கு ஒரு பரிசு'' என்றவாறு தூக்கித் தந்தால் அவன்





திக்கு முக்காடப் போகிறான் — கட்டாயம்.

கற்பனை உதட்டில் ஒரு முறுவலை தவழ விட, பெட்டியிலிருந்த இதர சாமான்களை வெளியில் எடுக்க முற்பட்ட நிமிஷத்தில் அறைவாசலில் முத்து வந்து நின்றான்.

''சாப்பாடு எதுவும் வேணாம் முத்து... ஃப்ளைட்லேயே சாப்பாடு கொடுத்திட்டாங்க... ஜக்குல ஐஸ் வாட்டர் வச்சிட்டு, நீ படுக்கப் போ... பாக்கி விஷயங்களைக் காலைல பேசிக்கலாம்... இந்த டெல்லி விமானம்னாலே வீட்டுக்கு வந்து சேர்ந்து, படுக்க, அர்த்தராத்திரி ஆகுது...''

முனகலாகத் தனக்குத் தானே பேசிக் கொண்டு உடைகளை அலமாரியில் மாட்டி விட்டுத் திரும்பின மகாதேவன், முத்து இன்னமும் அங்கேயே நிற்பதைப் பார்த்து விட்டுப் புருவங்களை உயர்த்தினார்.

''என்னப்பா... ஏதாவது சொல்லணுமா?''

முத்து ஓரடி எடுத்து வைத்து அறைக்குள் வந்தான். கிட்டத்திலிருந்து பார்க்கையில் அவன் முகம் சோகத்தில் கோணி இருப்பதைப் பார்க்க முடிந்தது.

''என்ன விஷயம் முத்து?''

''ராஜாவை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்காங்க ஸார்!''

மகாதேவன் திடுக்கிட்டார்.

''எதுக்கப்பா?''

''ராஜாவுக்கு மஞ்சள் காமாலை ஸார்... நீங்க ஊருக்குப் போனதும்தான் தெரிஞ்சுது.. அப்பக் கூட அந்த வீட்டுப் பெரியவங்க வைத்தியம் பார்க்காமல் மந்திரம், தந்திரம்னு சொல்லிட்டு என்னென்னமோ செஞ்சதுல, ரொம்ப ஜாஸ்தியாயிடுச்சு... ரெண்டு நாளா ராஜா உடம்புல நீர் கோத்துக்கிட்ட மாதிரி ஒரே வீக்கம்... கண்ணும், உடம்பும் ரொம்ப மஞ்சளாயிடுச்சு... அரிப்பு வேற... நேத்து ராத்திரியிலேருந்தே ராஜா தெளிவாப் பேசல.. விடிஞ்சதும் மயக்கம் அதிகமா இருக்கிற மாதிரித் தோண, பெரியவங்க பயந்துகிட்டு முதல் முறையா வைத்தியரைக் கூட்டிட்டு வந்தாங்க... அவுரு கன்னாபின்னானு திட்டிட்டு உடனே ஆஸ்பத்திரியிலே சேர்த்திட்டாரு... நான் போய்ப் பார்த்திட்டு வந்தேன் ஸார்... நினைவு இல்லாம படுத்திருக்கிற புள்ளையைப் பாக்கறப்போ பகீர்னுது ஸார்...''

மேற்கொண்டு கால் மணி போலப் பேசி, கடந்த ஆறு நாட்களில் நடந்த விவரங்கள் அனைத்தையும் அறிந்து கொண்டபோது கோபம், வருத்தம், ஆத்திரம் எல்லாமாக மகாதேவனுள் கலந்து வியாபித்தன.

ஜாண்டிஸ் என்று புரிந்த உடனேயே வைத்தியரை வரவழைத்து என்ன செய்ய வேண்டும் என்பதைக் கேட்டறிந்து, தக்க நடவடிக்கைகளை எடுக்காமல், என்ன செய்து கொண்டிருந்தார்கள் அந்த வீட்டுப் பெரியவர்கள்?

தணிகாசலமும், பரிமளமும்தான் அந்தக் காலத்து மனிதர்கள்; வைத்தியத் துறையின் முன்னேற்றம் புரியாமல் மந்திரம், மாயம் என்று நம்பிக்கை வைத்துப் பேசியிருக்கலாம், நடந்து கொண்டிருக்கலாம்... ஆனால் இந்த மாதவன், வசந்தாவுக்கு மூளை எங்கே போயிற்று?

கோபத்தின் ஊடே சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னால் ஒரு கதைக்காக, ராஜஸ்தான், குஜராத் என்று அலைந்து திரிந்து, கண்விழித்து, கண்டபடி சாப்பிட்டதில் காமாலை வந்து, தான் மூன்று வாரங்கள் படுத்திருந்தது ஞாபகத்துக்கு வந்தது.

நாலு நாட்கள் அஜீரணம், வாந்தி, ஜுரம், லேசாகக் கண் மஞ்சள்; இதற்கே டாக்டர் சந்தேகப்பட்டு, ரத்த, மூத்திரப் பரிசோதனை செய்ய, மண்டையில் அடித்த மாதிரி 48 மணி நேரத்தில் முடிவு வந்து விட்டது.

மஞ்சள் காமாலை!

அடுத்த நாளே அவரை ஆஸ்பத்திரியில்

சிவசங்கரி



"எவ்வளவு பிரச்னையாக இருந்தாலும் நம்ம அமைச்சர் பிரஸ் மீட்டிங் என்றால் தவறாமல் கலந்துக்குவார்!"

"ஏன்...?"

"பொதுக் கூட்டம் மாதிரி இதுல கல்லடி இருக்காதே அதான்!"

— கடுவை கோபால்சாமி.

சேர்த்து, நரம்பு வழியாய் வைட்டமின் கே; க்ளுகோஸ் ட்ரிப் ஏற்றி, நோய்த் தடுப்புக்காக ஆண்டிபயாடிக், இன்டெஸ்டினல் ஆண்டிசெப்டிக் மருந்துகளைக் கொடுத்து, அதிக காரம், உப்பு, புளிப்பு இல்லாமல் பழரசம், மோர், இளநீர் என்று குடிக்க வைத்து, "இன்னும் ரெண்டு மாசம் கண்டிப்பா எதையும் சாப்பிடாம ஓய்வா இருந்து உடம்பைப் பார்த்துக்கங்க. மஞ்சள் காமாலைதானேனு அலட்சியமா இருக்கிறது கூடாது" என்று அக்கறையுடன் அறிவுரை கூறி...

அப்படிச் செய்ய வேண்டிய எதையுமே செய்யாமல், மாதவனும், வசந்தாவும் தங்கள் அறியாமையின் காரணமாய் ராஜாவைத் துன்பப்பட வைத்திருப்பது கோபத்தை அதிகமாக்க, மகாதேவன் எழுந்து இப்படியும் அப்படியும் நடந்தார்.

யோசித்தார்.

ராஜாவை உடனடியாய்ப் பார்க்க வேண்டும் போலத் தோன்ற, பார்வையைக் கடிகாரத்தின் மேல் வீசினார்.

பன்னிரண்டு பத்து...

எந்த ஆஸ்பத்திரியும் இந்த நேரத்தில் பார்வையாளரை அனுமதிக்காது...

முத்துவை அனுப்பிவிட்டு, ஜக்கிலிருந்து ஒரு டம்ளர் குளிர்ந்த நீரை எடுத்துக் குடித்தும் கோபம் அடங்காமல் இருக்க, கதவைத் திறந்து கொண்டு பால்கனிக்குச் சென்று நின்றார்.

ஊரே உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கையில் பக்கத்து வீட்டில் மட்டும் வாசல் அறை, பின் கட்டு விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன.

திறந்த ஜன்னல் வழியாகத் தணிகாசலம் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருப்பதையும், அடிக்கடி முன்னால் சாய்ந்து தலையைக் கைகளில் தாங்கிக் கொள்வதையும், கண்களைத் துடைத்துக் கொள்வதையும் தெளிவாகக் காண முடிந்தது.

அழுகிறாரா?

பேரனுக்கு ரொம்ப உடம்பு சரியில்லையே என்று வேதனைப்படுகிறாரா?

இவரைப் போலவே பரிமளமும், பின் கட்டில், அழுது புலம்பிக் கொண்டிருக்கலாம், அல்லது பீடத்துக்கு முன் மண்டியிட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக்கலாம் என்பதை ஊகிக்க முடிய, மகாதேவனுள்ளிருந்து நீளமாய்ப் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது.

— 'காலை' பாட்டி 'புனித சப்பாத்தி' கொண்டு வந்தப்புறம் தாத்தா சும்மா இருப்பாரா? பதிலுக்குத் தாயத்துக் கட்டியிருக்கார். நீங்க ஊர்லேர்ந்து வர்றதுக்குள்ளே, இதுக்குப் போட்டியா பாட்டியும், அதுக்கு எதிர்ப் போட்டியா தாத்தாவும் ஏதாச்சும் மேல மேல செஞ்சு, என்னை உண்டு, இல்லேன்னு ஆக்கிடுவாங்க. நீங்க வேணாப் பாருங்க...

தில்லிக்குப் புறப்படும் முன் ராஜாவைக் காணச் சென்ற போது கொஞ்சம் கேலியும், நிறையச் சலிப்புமாக அந்தச் சிறுவன் பேசிய வார்த்தைகள், திடுமென நினைவுக்கு வர, ஒருவித அவஸ்தையுடன் மகாதேவன் அங்கிருந்த கூடை நாற்காலியில் அமர்ந்தார்.

சற்றே சரிந்து கழுத்தைப் பின்னுக்குத் தள்ளி மேலே தெரிந்த வானத்தை வெறித்தார்.

கருநீல ஆகாயம்...

ஆயிரக்கணக்கில் நட்சத்திரக் கூட்டம்...

மகாதேவன் கண்களை மூடிக் கொண்டார்.

— 'அங்கிள், நேத்து தாத்தாவோட கோவிலுக்குப் போயிருந்தேன். அங்கே ஒரு பெரியவர் கதா காலட்சேபம் செஞ்சிக்கிட்டிருந்தார். 'ஒரு குளம், இதுக்கு நாலு பக்கமும் படிக்கட்டுகள், எந்தப் படிக்கட்டு வழியாவும் எறங்கித் தண்ணி எடுக்கலாம். இது அவரவர் வசதி, இஷ்டத்தைப் பொறுத்திருக்கு, இல்லையா...? இதேபோல, தெய்வத்தைக் குளத்தோட நீருக்கும்; மதங்களை நாலு பக்கப் படிக்கட்டுகளுக்கும் ஒப்பிடலாம். வழி எதுவானாலும்; அடையப் போற இலக்கு கடைசியில ஒண்ணுதான்'னு சொன்னார். தெய்வம் ஒண்ணு, வழிதான் வேற வேறன்னா எதுக்காக அங்கிள், பாட்டியும், தாத்தாவும் 'என் தெய்வம்தான் உசத்தி, உன்னுது மட்டம்; என் வழி சரி, உன்னுது தப்பு'ன்னு சதா சண்டை போட்டுக்கறாங்க...?'

அன்றைக்கு ராஜா இவர் முன்வந்து நின்று, தீவிர யோசனை கண்களில் புகை மூட்டமாய்ப் படிய இப்படிக் கேட்டதும், மின்சாரம் பாய்ந்த மாதிரி உடம்பு உதறிப் போட்டதை இப்போது மகாதேவன் நினைத்துக் கொண்டார்.

இந்தச் சின்னப் பையனுக்குத் தோன்றின உறுத்தல்கூட அந்த வீட்டுப் பெரியவர்களுக்கு ஏற்படவில்லையே என்கிற

அவஸ்தை எழ, அன்றுதான் அவர்கள் என்ன நினைத்துக் கொண்டாலும் பரவாயில்லை, கையைக் கட்டிக் கொண்டு இனியும் உட்கார்ந்திருந்தால் பாழாய்ப் போகப்போவது ராஜாதான் என்பதால் அவர்களோடு பேசியே தீருவது என்று தீர்மானம் பண்ணிக் கொண்டார்.

ஆனால் நினைத்ததைச் செயலாக்க முடியாதபடி வேலை தலைக்கு மேல் சேர்ந்து போயிற்று; தொடர்ந்து தில்லிக்குப் போக வேண்டி வந்துவிட்டது... அப்புறம்...

மகாதேவன் சட்டென்று தன்னை ஒரு தரம் உலுக்கிக் கொண்டார்.

அடுத்த வீட்டு விவகாரத்தில் தலையிடுவது எதற்கு என்கிற தயக்கத்தில் என்னையும் அறியாமல் நானும் உப்பு சப்பு பெறாத விஷயங்களைக் காரணமாகக் காட்டுகிறேனோ!

ஒன்றைச் செய்யத் துணிவில்லாததை ஒப்புக் கொள்ள மறுக்கும் நினைப்பில் வேலை, ஊருக்குப் போனது, என்று நொண்டிச் சாக்குச் சொல்கிறேனோ?

நியாயமான கேள்விகள் ஏற்கெனவே ஜனித்திருந்த அவஸ்தையை இன்னும் ஆழமாக்க, மகாதேவன் கண்களைத் திறந்து மறுபடியும் வானவெளியை வெறித்தார்.

எச்சிலைக் கூட்டி விழுங்கி, கவனத்தை நட்சத்திரங்களின் கண் சிமிட்டல்களில் செலுத்த முயன்றார்.

எங்கோ ஒரு நாய் பரிதாபமாய் ஊளையிட்டது.

புத்தி மீண்டும், மீண்டும் ராஜாவிடமும், அடுத்த வீட்டுப் பெரியவர்களிடமுமே ஓடியது...

— 'இதுக்குப் போட்டியா பாட்டியும், அதுக்குஎதிர்ப்போட்டியா தாத்தாவும்ஏதாச்சும் மேலே மேலே செஞ்சு என்னை உண்டு இல்லேன்னு ஆக்கிடுவாங்க...

— தெய்வம் ஒண்ணுதான்னா எதுக்காக அங்கிள் தாத்தாவும், பாட்டியும் இப்படி சண்டை போட்டுக்கிறாங்க?'

நியாயமான கேள்வி.

ஏன் சண்டை? எதனால் வெறுப்பு? இன்றைக்கு வேரையே துளைத்து விடுமளவுக்குக் கசப்பும், வெறுப்பும் மண்டக் காரணம் என்ன?

இத்தனைக்கும் ஆரம்பம் எங்கே?

அடுத்த வீட்டுப் பெரியவர்கள் நால்வரையும் தனித்தனியே எடை போட்டால் ஒவ்வொருவருமே நல்ல குணம் கொண்டவர் தாம்; ஆனாலும், ஏதோ ஓர் அசட்டுப் பிடிவாதத்தில் அமிழ்ந்து போய்க் கண்களைக் கட்டிவிட்ட மாதிரி நடந்து கொள்வதில் விவேகம் தலை எடுக்க வழி இல்லாமல் போய் விட்டது — இதுதானே உண்மை?

'மதம், ஜாதி, மொழி எல்லாவற்றையும் கடந்து விசாலமான மனசுடன் வாழ்வோம்' என்கிற நினைப்பில் முதன் முதலில் விதை ஊன்றப்பட்டது என்னவோ வாஸ்தவம்தான் என்றாலும் சரியான சிந்தனையும் தகுந்த கவனிப்பும், இல்லாமல் போனதில், தேவையான தண்ணீர், உரம் இன்றி வளர்ச்சி முடக்கப்பட்டு, வேர்ப்பூச்சி கண்டு-



"பி.சி. சொர்க்காரை உங்க கட்சி சார்பில் தேர்தலில் நிறுத்தப் போறீங்களாமே?"

"அதுவா, சட்ட சபையிலே பேப்பர் வெயிட், மைக், பேனா, செருப்பு இதெல்லாம் பறந்து வரும் போது தடுத்து நிறுத்தத்தான்!"

— ஊத்தங்கரை உமா சங்கர்.

விட்ட மரமாக அவர்கள் மாறிவிட்டது தானே நிஜம்?

ஆதியில் மதமும், தெய்வமும் மனித சமுதாயம் ஒரு கட்டுப்பாட்டுடன் இயங்கவும், தர்ம, நியாய உண்மைகளுக்குத் தலை வணங்கி மனிதன் நிம்மதியோடு வாழ வழி செய்வதற்காகவும் தோற்றுவிக்கப்பட்டன என்பதை வளர்ந்த பின்பும், தனக்காக நல்லது கெட்டதைச் சிந்திக்கத் திறன் உண்டான பின்பும், இந்த ஜனங்கள் புரிந்து கொள்ளாமல் 'என் தெய்வம் உசத்தி; உன் கடவுள் மட்டம்' — என்கிற விவேகமற்ற கீழ்த்தரமான வாதங்களில் ஈடுபட்டுத் தானும் நிலைகுலைந்து, அடுத்தவர்களையும் பாழடிப்பது எதற்காக!

மத நோய்வயப்பட்டதால் தலை எடுத்து விட்ட ஆங்காரம், கசப்பு, இன்று தங்களுடைய பேச்சு, சிந்தனை, நடத்தை என்று அத்தனை மேலும் காளானாகப் படர்ந்து மனிதாபிமானத்தை இழக்க வைத்து விட்டதை அவர்கள் ஏன் உணரவில்லை?

இந்த வேர்ப்பூச்சி அவர்களோடு நில்லாமல் அடுத்தவர்களையும் பாதித்து எல்லாரையுமே வேரில்லாத மரங்களாக விரைவில் ஆக்கிவிடும் என்பதைப் புரிந்து கொள்ள ஏன் மறுக்கிறார்கள்?

ஆயாசம் ஆளைத் தாக்க, மகாதேவன் யோசனை போதும் என்று எழுந்தார். அறைக்குள் சென்று படுத்துக் கொண்டார்.

மனசில் கனம் சற்றும் குறையாமல் ரொம்ப நேரம் அல்லலுற்ற பின், தம்மையும் அறியாமல் உறங்கியவர், நாராசமாய் யாரோ அழுவது காதில் விழ, திடுக்கிட்டு



போலீஸ்காரர் ஒருவர் பிக்பாக்கெட் 'கேஸில்' கைதான ஒரு கேடியை அழைத்துக் கொண்டு ஸ்டேஷனுக்குப் போகும் வழியில் ஹோட்டலில் நுழைந்தார். டிபன் சாப்பிட்டதும் அதற்குரிய பணத்தை அந்தக் கேடி இருவருக்குமே சேர்த்துக் கொடுத்து விட்டான்.

அந்தப் போலீஸ்காரர் அவனிடம், ''உனக்குச் சாமர்த்தியம் இருந்தால் என் பையில் இருக்கும் பணத்தைப் பிக்பாக்கெட் அடிக்க முடியுமா?'' என்று கேட்டார்.

உடனே அந்தக் கேடி, ''கொஞ்ச நேரத்திற்கு முன்பு டிபன் சாப்பிட்டதற்குக் கொடுத்த பணமே உங்கள் பையிலிருந்து நான் பிக்பாக்கெட் அடித்த பணம்தானே?'' என்று சொன்னான்!

— உஷா கிருஷ்ணமூர்த்தி.

எழுந்து உட்கார்ந்தார்.

விடிந்து விட்டதா என்ன?

வேகமாய் எழுந்து ஜன்னலிடம் சென்ற போது ''ஐயோ ராஜா....'' என்று கதறிய வாறு பரிமளம் விழுந்தடித்துக் கொண்டு வாசலுக்கு வருவது தெரிந்தது.

கேட் அருகில் தனியார் ஆஸ்பத்திரி ஆம்புலன்ஸ்...

எ... என்ன ஆயிற்று?

பதற்றத்துடன் திரும்பிய நொடியில் முத்து பால்பாக்கெட்டுகளுடன் ஓடி வந்தான். கண்களில் நீர்.

''ரா... ராஜா செத்துட்டானும் ஸார்... பாடிய விட்டுக்குக் கொ.. கொண்டு வந்திருக்காங்க...''

சொல்லிவிட்டு அவர் பதிலுக்காகக் காத்திராமல் வந்த வேகத்தில் அவன் ஓட, மகாதேவன் நிற்க முடியாமல் படுக்கையில் உட்கார்ந்தார்.

பார்வையில் பூச்சிகள் பறந்தன...

அடிவயிற்றில் வெட்டுக்கிளிகள் தாவின...

சில்லிட்ட ரத்தம் இருதயத்தில் தேங்கி நின்றது...

அரை மணி கழித்து, கையில் 'கபில்தேவ்' தந்த சின்ன கிரிக்கெட் மட்டையுடன் அடுத்த வீட்டை மகாதேவன் அடைந்த போது விஷயம் தெரு முழுதும் பரவி, அந்தக் காலை நேரத்திலேயே கேட்டிலிருந்து, உள்வரை முடிச்சு முடிச்சாய்த் தெரு மனிதர்கள் நின்றிருந்தார்கள்.

வாசல் அறை பெஞ்சில் ராஜா....

மஞ்சள் பூத்து உப்பின முகம், உடம்பு...

பேரனின் கால்களில் முட்டிக் கொண்டு கதறும் பரிமளம்... பிள்ளை மேல் கவிழ்ந்து அரற்றும் வசந்தா...

வாயில் துண்டை அடைத்தபடி சுவரில் சரிந்து உட்கார்ந்துவிட்ட தணிகாசலம்...

கண்களிலிருந்து வழியும் நீரைத் துடைக்கத் தெரியாமல் மாதவன்...

மௌனமாகக் கிட்டத்தில் சென்ற மகாதேவன் கையிலிருந்த கிரிக்கெட் பேட்டை ராஜாவின் பக்கத்தில் வைத்தார்.

கலைந்திருந்த தலைமுடியைக் கோதி, கன்னத்தை வழித்து விட்டபோது நெஞ்சுக்குள் குமிழாகக் கோபம் வெடிக்க, உரக்கக் கேட்டார்.


''தீர்மானம் பண்ணிட்டீங்களா?''

ஓங்கி ஒலித்த அவர் குரல் சடக்கென்று அந்தக் கூடத்தில் ஓர் அசாதாரண அமைதியை உண்டாக்கியது. மகாதேவன் கண்களை இடுக்கிக் கொண்டார். ஒவ்வொருவராய் ஆழ்ந்து பார்த்தார். பின் வார்த்தை வார்த்தையாய் இன்னும் உரக்கப் பேசினார்:

''கிறிஸ்துவ முறைப்படி புதைக்கப் போறீங்களா, இல்ல எரித்து தர்மப்படி செய்யப் போறீங்களானு தீர்மானம் பண்ணிட்டிங்களானு கேக்கறேன்... ஏன்னா, சவப் பெட்டிக்கு ஆர்டர் பண்ணணுமா, இல்ல வெட்டியானுக்குச் சொல்லி அனுப்பணுமானு தெரிஞ்சிக்கறது நல்லது இல்லையா? தயவு பண்ணி, இந்த ஒரு முறையாவது சண்டை இல்லாமல் ஒரு முடிவுக்கு வந்தீங்கன்னா, ராஜாவோட ஆத்மாவுக்கு அது நிம்மதியைத் தர்ற செயலா இருக்கும்னு நா நம்பறேன்... மனசு உடைஞ்சு இருக்கறப்போ இப்படி பேசறதுக்காக மன்னிக்கணும். ஆனா, இந்த வார்த்தைகளை இப்பக் கூடச் சொல்லலேன்னா, ராஜா என்னை மன்னிக்க மாட்டான்... ரிச்சுவல்ஸ் ஆர் நாட் ரிலிஜன்.. மதம், வேற, சடங்குகள் வேற... இத இனியாவது மறக்காம இருக்க முயற்சி பண்ணுங்க... பெரியவங்க இளையதலைமுறைக்கு வழிகாட்டியா நடந்துக்கணுமே தவிர, அவங்க சீரழிவுக்கும், அழிவுக்கும் நாம, நம்மோட வெறித்தனமான சிந்தனைங்க காரணமாயிடக் கூடாது... எல்லாத்தையும் விட; மனிதாபிமானம் நிறைஞ்ச மனுஷனா இருக்கிறது முக்கியம். அவ்ளோதான். என்னை மன்னிச்சிடுங்க..''

மேலே பேச முடியாமல் துக்கம் தொண்டையை அடைக்க, குனிந்து ராஜாவின் சில்லிட்டு விட்ட நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டு, யாரோ நிர்வாணமாய் நிற்க வைத்துச் சவுக்கால் மனசையும், உடம்பையும் விளாறி விட்ட மாதிரி அதிர்ந்து விட்ட எவரையும் நிமிர்ந்து பார்க்காமல் திரும்பி, மெள்ள அந்த அறையை விட்டு மகாதேவன் நடக்க ஆரம்பித்த போது, அவர் கண்களில் பெருகிய நீர் கன்னத்தில் வழிந்து, பூமியில் தெறித்தது.

(முற்றும்)



கழுகுமலைக் கள்ளன்

அப்பாவி, சாதுப்பசு என்று இருக்கும் ஒருவனுடைய குடும்பம் தேன் கூடு போல் கலைக்கப்பட்டால் அந்த அப்பாவி, சாதுப் பசு என்ன ஆவான்? கழுகு மலைக் கள்ளன் ஆவான்!

கழுகுமலைக் கள்ளன் — சரண்ராஜ். கால் கை வலிப்புக்காரர். ஒரு பக்கம் அம்மாவும் அப்பாவும் நெருப்பில் சொக்கப் பனையாக எரிய, இன்னொரு பக்கம் தீயில் சிக்கிவிட்ட தங்கையைக் காப்பாற்றுவதற்காக, வலிப்பு நோயால் அடித்துப் போடப்பட்டாற் போல் இருந்தும், ஓடிவந்து நெருப்பில் நுழைந்து தங்கையைக் காப்பாற்ற — சரண்ராஜ், சாகச ராஜ்தான்.

முதலில் வில்லனாக நுழைந்து விட்டால் ஆட்டோமேடிக்காக ஹீரோ ஆகிவிடலாம் போல. சமீபத்திய உதாரணம் சரண்ராஜ்.

அந்தக் கழுகை எங்கே பிடித்தார்களோ தெரியவில்லை. நல்ல டிரெய்னிங்தான். கள்ளனுக்காகத் தூது போவதும், காட்டினுள் அன்னியர் நுழைவதைத் தன்னுடைய வினோத 'அகவல்' மூலம் தெரியப்படுத்துவதும் கடைசியில் ராதாரவியின் துப்பாக்கிக் குண்டு காரணமாக உயிர்த் தியாகம் செய்வதும் 'ச்ச்' என்று கழுகுக்காப் பரிதாபப்பட வைக்கின்றன.

அமாவாசை, கழுகுமலைக் கள்ளனுக்குப் படு விசுவாசமாக இருந்து விட்டுக் கடைசியில் கள்ளனை, கள்ளன் சொல்படியே காட்டிக் கொடுத்து விட்டு, ஊரார் வசவைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் தூக்குப் போட்டுக் கொண்டு மர உச்சியில் தொங்குவது — கதைக்குள் ஓர் அழகான கவிதைக் கதை!

பேபி விலாசினி — ஷாலினி, சுஜிதா வரிசையில் மிகச் சமீபத்தில் முன்னுக்கு வரப் போகிற நம்பிக்கை நட்சத்திரம்.

ராதா ரவி (இன்ஸ்பெக்டர்)யின் பெண்ணைப் புற்று நோயின் கொடுமையிலிருந்து காப்பாற்றுவதற்காக, சரண்ராஜ் வலிய வந்து இன்ஸ்பெக்டரிடம் மாட்டிக் கொண்டு, இன்ஸ்பெக்டருக்குப் பணம் கிடைத்து, குழந்தை சிகிச்சைக்கு அமெரிக்கா



அனுப்பப்பட்டவுடன் மறுபடியும் போலீஸ் டிபார்ட்மென்ட்டுக்கு டேக்கா கொடுத்து விட்டு நழுவி விடுவது, போலீஸ் டிபார்ட்மென்டைக் கையால் ஆகாதவர்கள் போலச் சித்திரித்து விட்டாலும் சுவையான சித்திரிப்புத்தான்.

ஹீரோயின் என்று ஒருவர் இல்லையென்றால் எப்படி? எனவே ரேகா, கிராமத்து மச்சரம்மா — பரவாயில்லை.

காமிரா காட்டின் மரம் செடி கொடிகளுக்கு நடுவில் பச்சைப் பசேல் என்று கண்ணுக்குக் குளுமையாக ஊடுருவி ஓடி வருவது படத்திற்கு ஒரு ப்ளஸ் பாயின்ட்.

ஸ்டண்ட் ஸீன்களை அமைத்த ஜூடோ ரத்தினம்காரு அவர்களே, பிடியுங்கள் பாராட்டுகளை!

ஐந்து பாடல்களில் நான்கு பாடல்களுக்கு டிக் மார்க். சந்திரபோஸிற்கு ஒரு ஷொட்டு!

எஸ். எஸ். சந்திரன், சின்னி ஜெயந்த், கோவை சரளா கூட்டு. ஹா ஹாவும் இல்லை; சேச் சேயும் இல்லை.

க்ளைமாக்ஸில் திக் திக் திக் என்று நெஞ்சு அடித்துக் கொள்ளும் அளவுக்கு ஒரு **Build — up.**

கிளாப். கிளாப். கிளாப்.

நீண்ட நாள் கழித்து, ராஜசேகர் மறுபடி தேறிவிடுவார் என்ற நம்பிக்கையைக் கொடுக்கும் படம்!

— ஜெயமன்மதன்

பொதுத் தேர்தல் 'அம்போ'தானா?





கூட்டுறவுத் தேர்தல்

* என்.ஜெ.பிர்தௌஸ்ஜெஸியா, ஆத்துப்பாலம்.

? தேர்தல் உடனே வந்தால் நல்லதா? சில மாதங்கள் தள்ளிப் போனால் நல்லதா?

! உடனே வராவிட்டாலும் சுபஸ்யசீக்கிரம் வருவதுதான் நல்லது. ஆளுனர் ஆட்சியில் இப்போது நமக்குப் பெரிதாகக் குறை ஏதுமில்லை என்றாலும் அதிகாரிகளின் ஆட்சி ஜனநாயகமாகாது என்பது ஒருபுறமிருக்க, அது அதிக்கிரம ஆட்சியாக மாற வெகு காலம் செல்லாது.

* க. தாணுமாலயப் பெருமாள், குளத்தூர்.

? "'ஏ' ஃபார் ஆப்பிள்; 'பி' ஃபார் பாய் என்று சொல்லிக் கொடுப்பதற்குப் பதில் 'ஏ' ஃபார் அல்லா; 'பி' ஃபார் புத்தா; 'ஸி' ஃபார் கிரைஸ்ட் என்று குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கலாம். குழந்தைகளுக்கு மதவெறி ஏற்படாது" என்று ஜனாதிபதி ஆர். வி. புதிய யோசனை சொல்லியிருக்கிறாரே?

! "அதிலும் அல்லாவுக்குத்தான் முதலிடமா? அது ஏன் ஆண்டாளாக இருக்கக் கூடாது? 'பி' ஃபார் பிரும்மாவாக ஏன் இருக்கக் கூடாது?" என்று பெரியவர்கள் தான் சிண்டைப் பிடித்துக் கொள்வார்களே தவிர, குழந்தைகளிடம் மதவெறி இல்லை. மேலும் ஆர். வி. யின் யோசனை நமது அரசின் மதச்சார்பின்மைக் கொள்கைக்கு முரணானது என்று வாதாடப்படும்! 'ஏ' ஃபார் ஆப்பிளே இருந்து விட்டுப் போகட்டும்; புதிய பிரச்னைகள் கிளம்பாமலிருந்தாலே போதும்!

* ஆர். அப்துல் சலாம், திருச்சி.

? 'லஞ்ச ஊழல் குற்றத்துக்காகத் தண்டிக்கப்பட்ட அதிகாரிகள் பட்டியல் வெளியிடப்படும்' என்று சிதம்பரம் கூறியிருக்கிறாரே? அப்படியானால் லஞ்ச ஊழல் புரியும் அரசியல்வாதிகள் தண்டிக்கப்பட மாட்டார்களா?

! அப்படிச் சரித்திரமே கிடையாது; ஒன்று, விஷயம் அம்பலமானால் அவர்களாகவே வெட்கப்பட்டு ராஜினாமா செய்யலாம் அல்லது மக்கள் விழிப்புடனிருந்து அவர்களைப் பதவி நீக்கம் செய்யலாம். ஆனால் நம் தேசத்தில் அரசியல்வாதிகளுக்குச் சுரணை இல்லை; மக்களுக்கு ரோஷம் இல்லை.

* பாபு குமார், பெங்களூர்.

? அலெக்ஸாந்தர், 'கூட்டுறவு சங்கத் தேர்தல் நடத்துவேன்' என்கிறாரே, அப்படியானால் பொதுத் தேர்தல் அம்போதானா?

! கூட்டுறவு சங்கத் தேர்தல்கள் நிச்சயமாக நடத்தப்பட வேண்டிய ஒன்று. பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நடத்தப் படாததால் பல கூட்டுறவு சங்கங்கள் உயிர்த் துடிப்புடன் செயலாற்றாமல் பொலிவிழந்து விட்டன. கூட்டுறவு இயக்கத்தில் அரசுக்கு நம்பிக்கை இருந்தால் அதனை ஒழுங்காக நடக்கச் செய்ய வேண்டும். அல்லது கலைத்து விட வேண்டும். ஸ்பெஷல் ஆபீசர்களைப் போட்டுக் காலத்தை ஓட்டுவது அபத்தமானது. பொதுத் தேர்தலுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. பொதுத் தேர்தல் ஒரு கால கட்டத்துக்கு மேல் தாமதமானால் கட்சித் தலைவர்களும் சரி, மக்களும் சரி சும்மா இருக்க மாட்டார்கள்; தட்டிக் கேட்பார்கள்.

* சன்பை சி. சண்முகம், சீர்காழி.

? பாரத ரத்னா விருதைப் பெற்றுக் கொண்ட பின் மற்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமல் ராஜீவ் காந்தியைத் திரும்பிக் கூடப் பாராமல் திரும்பிய ஜானகியின் செயல் பற்றி...?

! ராஜீவ் எம். ஜி. ஆருக்கு பாரத ரத்னா கொடுத்துவிட்டு ஜானகி அணியின் காலை வாரி விட்டார்; ஜானகி எம். ஜி. ஆர். சார்பில் பாரத ரத்னாவைப் பெற்றுக் கொண்டு ராஜீவின் மூக்குடைத்து விட்டுத்



* ஏட்டிக்குப் போட்டி



* பட்டியல் வெளியிடுவார்!



* புது வோசனே!

திரும்பினுர். எல்லாம் ஏட்டிக்குப் போட்டி சமாசாரம்தான்.

* மதிமிதா, ஈரோடு.

? பட்ஜெட்டின் பற்ருக்குறையைச் சமாளிக்க அரசின் ஆடம்பரச் செலவுகளேக் குறைத்துக் கொள்வதாகத் திவாரி கூறு கிருரே?

! ஏதோ சொல்லவாவது செய்கிருரே என்று ஆறுதல் அடையலாம். ஆனல் நடக்கப் போகிற காரியம் அல்ல. ஏற்றுமதிகளே அதிகரிக்க இறக்குமதிக் கட்டுப்பாடுகளேத் தளர்த்தியிருப்பதும் உசிதமான காரியமாகத் தோன்றவில்லே. மொத்தத்தில் திவாரி 'டாக்டர்,' செத்துக் கொண்டிருக்கிற இந்தியப் பொருளாதாரத்துக்குத் தப்பு மருந்துகளேக் கொடுத்துக் கொண்டிருக் கிருர்!

* க. சரவணகுமார், தூத்துக்குடி.

? 'காமராஜரின் பொற்காலத்தை மீண்டும் தமிழகத்தில் கொண்டு வருவதே எங்கள் கட்சியின் நோக்கம்' என்று மூப்பனுர் கூறியுள்ளாரே?

! காங்கிரஸ் பொதுக் காரியதரிசி கே. என். சிங்கின் சமீபத்திய பேச்சை வைத்துப் பார்க்கும் போது ஜெயலலிதா அணியுடன் கூட்டணி அமைக்கும் ஆசை இன்னமும் காங்கிரஸ் கட்சிக்கு இருப்பதாகவே தோன்றுகிறது. அது உண்மையானல் காமராஜ் பற்றி வாய்திறக்கவே காங்கிரஸ் அருகதையற்றதாகிறது.

* எஸ். ரஷீத் அலி, திருச்சி.

? தேர்தலில் ஜெயிக்கும் எதிர்க்கட்சித் தலேவர்களேயும் மந்திரி சபையில் இடம் பெறச் செய்தால் நாட்டுக்கு நன்மை பயக்காதா?

! ஜனநாயகத்தில் ஆளும் கட்சியை விட ஒரு படி அதிக முக்கியத்துவம் வாய்ந்தது நல்லதொரு எதிர்க்கட்சியின் பணி என்பதை உணர்ந்தால் இந்தக் கேள்விக்கே அவசியம் இராது. அதனல்தான் காங்கிரஸ் தனித்து நிற்க வேண்டும் என்றும் ஒருவேளே தோல்வியைச் சந்தித்தாலும் சட்டசபையில் சிறப்பான ஜனநாயகப் பணியாற்றலாம் என்றும் கூறுகிருேம். எம். ஜி. ஆர். காலத்திலோ அது ஆளும் கட்சியாகவும் இராமல் எதிர்க்கட்சியாகவும் விளங்காமல் ஒளி குன்றிப் போயிற்று.

நீங்கள் கேட்டவை — தராசு

* எஸ். பிரியதர்சினி, பாளேயங்கோட்டை.*

? போஃபர்ஸ் விசாரணே தோல்வியுறச் செய்ய அத்தனேயும் செய்யும்படி ஸ்விடனிலுள்ள இந்தியத் தூதரகத்துக்கு தில்லி ஆணேயிட்டிருக்கிறதாமே?

! தில்லியின் பாச்சா ஸ்விடனில் பலிக்காது. இங்கே நாடாளுமன்றக் குழு அமைத்து விஷயத்தை ஆழக் குழிதோண்டிப் புதைக்கப் பார்த்தாலும் ஸ்விடிஷ் நாடாளுமன்றமும் ஸ்விடிஷ் போலீஸும் பாதாளம் வரை பாய்ந்து உண்மைகளேக் கிளறி வெளிக் கொண்டு வருவதில் தீவிரமாய் இருக்கின்றன. சமீபத்திய செய்திகளின்படி ராஜீவ் மீது சந்தேகத்தின் நிழல் படு கறுப்பாகப் படிந்திருக்கிறது.

* கு. கணேசன், சென்னே — 15.

? வெளிநாட்டிலும் உள்நாட்டிலும் சுமார் 1,45,000 கோடி ரூபாய் கடனே வைத்துக் கொண்டு இந்தியாவை எப்படி 21 ஆம் நூற்ருண்டுக்கு அழைத்துச் செல்லப் போகிருர் ராஜீவ்?

! இருபதாம் நூற்ருண்டில் பெற்ற அரசியல் சுதந்திரம் பொருளாதார அடிமைத்தனமாக மாறிவிட்ட நிலேயில்தான்.


* ரூ. 15 பரிசு பெறுபவர்:

எஸ். பிரியதர்சினி,
37—A, தெற்கு பஜார்,
பாளேயங்கோட்டை — 627 002.

K. குரூப் கம்பெனிகள் வழங்கும் சிறப்பு சலுகைகள்

N.S.K. பில்டர்ஸ்

அனைத்து டெபாஸிட்டுகளுக்கும் நில உத்திரவாதம்



சில டெபாஸிட்டுகளே ஏற்றுக் கொள்ளப்படும்
30.4.88 வரை வட்டி விகிதங்கள்.

1 வருடம்	2 வருடங்கள்	3 வருடங்கள்	5 வருடங்கள்
17%	18%	19%	21%

ஆண்டு வட்டிக்கு 1% அதிகம் 5 ஆண்டு டெபாஸிட்டுகளுக்கு இலவச பரிசுகள்:—

டெபாஸிட் தொகை	இலவச பரிசு
ரூ. 5000	குவார்ட்ஸ் சுவர்க் கடிகாரம்
ரூ. 10000	மின் விசிறி
ரூ. 25000	மிக்ஸி
ரூ. 50000	வெட்கிரைண்டர்
ரூ. 100000	1 சவரன் தங்கக்காசு

மேற்கண்ட வட்டி விகிதங்களும், இலவச பரிசுகளும் 30.4.88 வரை மட்டுமே.
மே 1 முதல் 1% வட்டி விகிதம் குறைக்கப்படுவதால், ஏப்ரல் 30 தேதிக்குள் டெபாஸிட்டை செலுத்தி பயனடையவும்.

5% சிறப்பு தள்ளுபடி

மாபெரும் சலுகை

N.S.K. நகர், திருநின்றவூர், சென்னை - 602 024

ஒரு மனையின் விலை ரூ. 20,000/- மட்டுமே.

சிறப்பு தள்ளுபடி 5% (1.3.88 முதல் 30.4.88 வரை)

1. M.M.D.A. அங்கீகாரம் பெற்றது. நெ. PPD LO 10/87
2. அனைத்து வசதிகளும் நிறைந்த இடம்
3. வில்லங்கமில்லாத சட்ட ஒழுங்கு பத்திரம்.

மனைகளை பார்வையிட்டு உங்களுக்கு தேவையான மனைகளை தேர்ந்தெடுத்து கொள்ளுங்கள்.

குறைந்த செலவில் வீடு கட்டும் திட்டம்!

1800 சதுர அடி மனையில் குறைந்த பட்சம் 500 சதுர அடி கட்டிடப் பரப்புள்ள ஒரு தனி வீடு.
விலை சதுர அடி ஒன்றுக்கு ரூ. 200/- (மனை உட்பட)

மனைகளை இலவசமாக பார்வையிட 30.4.88 வரை தினசரி ஏற்பாடு செய்யப்படும்.

NSK ரியல் எஸ்டேட்ஸ்
38-B, பர்கிட் சாலை (முதல்மாடி), தி. நகர், சென்னை-600 017
தொலைபேசி எண்: 445252, 442106

EXELADS/NSK059/88 (TAM)

தளபதி இடமதி:

"இடமதி அண்ணே! நம்ம கட்சியின் இரண்டு அணியினரும் அவங்க அவங்க அணியிலே என்னைச் சேரச் சொல்லிப் பணப்பெட்டியோட வந்து வற்புறுத்தறாங்க. என்ன செய்யலாம்?"

இடமதி: "ரெண்டு அணியினரிடமும் முத்திரை போடப்பட்ட டெண்டர் வாங்கிடுங்க. டெண்டரைப் பிரிச்சு, யார் அதிகமாப் பணம் தர்றதா எழுதியிருக்காங்களோ, அவங்க அணியிலே சேர்ந்துடுங்க!"

— வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சை.

"அவனவனும் முதல்வர் பதவிக்கு ஆலாய்ப் பறக்கிற போது நம்ம இடமதி ஒரு பிரமாத காரியம் பண்ணினார்!"

"என்ன அது?"

"'யார் வேணுமானாலும் முதலமைச்சரா உக்காந்துக்குங்க, கவலையில்லே. ஆனால் என்னைத் துணை முதல்வரா நியமிக்கிறதா யார் வாக்குத் தர்றாங்களோ அவங்களுக்குத் தான் தேர்தலில் என் ஒத்துழைப்பு'ன்னு ஒரு போடு போட்டுட்டார்!"

— எஸ். வி. ராஜசேகர், சென்னை — 5.

கட்சியைப் பிளக்க ஒரு சட்டம்!



"தளபதி இடமதிகிட்டே எங்க பேட்டையில் தண்ணீர்ப் பஞ்சம் பற்றி மனுக் கொடுத்தது தப்பாப் போச்சு..."

"ஏன், என்ன ஆச்சு?"

"கோரிக்கையைத் தப்பாப் புரிஞ்சுக் கிட்டுத் தெருவுக்கு ரெண்டு ஒயின் ஷாப் திறக்க ஏற்பாடு செய்துட்டார்!"

— பி. ஜெயப்பிரகாஷ், பொள்ளாச்சி.



நண்பர்: ஒவ்வொரு கட்சியும் ஆட்சியை விட்டு இறங்கியதும் இரண்டாகப் பிரிஞ்சாகணும்னு சட்டமே கொண்டு வரலாம்!

இடமதி: எதுக்குங்க அப்படி ஒரு சட்டம்?

நண்பர்: அப்பத்தானே அவங்க செய்த ஊழலெல்லாம் வெளியே வரும்!

— ஏ. எம். பாண்டியன், சென்னை — 21.

வளர்மதிக்குப் பரிசு வளர்கிறது!
வளர்மதி ஆசைத்தம்பி எழுதிய [illegible] இடமதி [illegible] இங்கு [illegible]. அவர்க்கு 200 ரூபாய் [illegible]

வட்டமேஜை

அங்கேயும் இதே கதைதான்!

• தெலுங்குதேச எம். பி. உபேந்திரா பேட்டி மிகச் சிறப்பாக இருந்தது. ஒவ்வொரு வரியிலும் அவர் கவனம் தெரிந்தது. மிகத் திறமையான பேச்சாளர் தான் போலிருக்கிறது.

வைத்தீஸ்வரன் கோவில், வை. ஆ. யதார்த்தினி.

• 'வலுவான எதிர்க்கட்சி எங்கு— எப்போது அமைகிறதோ அப்போதுதான் அங்கு உண்மையான ஜனநாயகம் தழைக்கும்' என்றார் அமரர் ஜவாஹர்லால் நேரு. ஆனால் இங்கோ... எதிர்க் கட்சிகளுக்குப் பாராளுமன்றத்திலேயே மதிப்பில்லை என்பதைப் பேட்டிக் கட்டுரை வாயிலாய் அறியும் போது எங்கே போய் முட்டிக் கொள்வது என்றுதான் புரியவில்லை.

கோவை — 16, கா. க. வே. ரோகிணி.

• 'பிளி'யாக இருந்தாலும், கல்கி என்றவுடன் அனைத்தையும் ஒதுக்கிவிட்டுப் பேட்டி கொடுத்த கலெக்டர் உஜாகர் சிங் உண்மையில் பாராட்டுக்குரியவர். நமது இருவர் நோக்கமும் மக்களுக்குச் சேவை செய்ய வேண்டும் என்பதுதான் இல்லையா? என்று உஜாகர் சிங் கூறியது மகிழ்ச்சிக்குள்ளாக்கியது.

சீர்காழி, சன்பை. கி. சண்முகம்.

• சமைக்கத் தெரிந்தவன்; சிறுகதையில் வரும் அழகரசன் தாடி வைத்துக் கொண்டு இருப்பதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் "கரோ"வின் படத்தில் தாடியைக் காணோமே...?!

விருத்தாசலம், கி. குருராஜன்.

• இராஜா பாலச்சந்தர் எழுதியுள்ள 'சமைக்கத் தெரிந்தவன்' சிறுகதை வித்தியாசமான கரு கொண்ட கதை என மனமாரப் பாராட்டும் வண்ணம் உள்ளது. சமைப்பது... ஆண்கள் நினைப்பது போல் அவ்வளவு சுலபம் அல்ல... என்பதை நாசூக்காகக் கதாசிரியர் சொல்லியிருப்பது நன்றாக இருக்கிறது.

திருச்சி — 18, ராஜி ராதா.

• லாட்டரிச் சீட்டு வாங்குபவர்களைப் பற்றி உழைப்பில் நம்பிக்கையில்லாதவர்கள் என்று தராசு பதில்களில் கூறியுள்ளார்; நாள் முழுக்க உழைத்துப் பெறும் கூலியில் பெரும் பகுதியைத்தான் அவர்கள் லாட்டரிச் சீட்டுக்கும், சாராயத்திற்கும் செலவிடுகிறார்கள் என்பதுதான் மிகவும் வருந்தத்தக்கது. இப்படிப்பட்டோருக்கு வழிகளை, ஊக்குவிப்பது அரசாங்கம்தான்: ஏமாந்து போகிறவர்கள் எல்லாம் உழைப்பாளிகளின் குடும்பங்களே!

பழனி — 15, கி. நாகராஜன்.

• 'நட்பு ஒரு ஆறுதல், சிரிப்பு ஒரு வரப்பிரசாதம்' என்ற வரிகள் அனுபவித்து எழுதப்பட்டவை என் பதில் சந்தேகமே இல்லை. மனக்கதவு சிறுகதை பொதிகைத் தென்றலாய் வருடியது.

தங்கமாபுரிப்பட்டணம், ராஜேஷ்.

• மருதுவின் இந்த வார அட்டைப்படம் **Superb.** அரசியல் தகிடுதத்தங்களின் மொத்த உருவை நம்முன் நிறுத்திய 'மருது' அவர்களை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை!

மயிலாடுதுறை, கி. எழில்.

• 'தேர்தல் தகிடுதத்தங்கள்' என வளமான கருத்துக்களை வழங்கியுள்ளீர். அந்தக் கவலை சிலருக்கு மட்டும் இருந்தால் போதாது. மேற்கு எப்ப வெளுக்குமென கூத்தாடியும் — கிழக்கு எப்ப கருக்குமெனக் கூவிக் காரனும் இருப்பது போல் இராமல் வோட்டுப் போடும் மக்களும், அதனால் பயனடையும் அரசியல் இயக்கங்களும் விழித்துக் கொள்ள வேண்டும்.

பழனி — 1, சுபா. விமலபாண்டியன்.

• 'தேர்தல் தகிடுதத்தங்கள்' என்ற தலைப்பில் எழுதப்பட்டுள்ள கட்டுரையில், சிறுபான்மை வோட்டுக்கள் பெற்று நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வருவது பற்றிக் கூறும் போது, 'பிரிட்டனிலும் அமெரிக்காவிலும் இதற்கு வாய்ப்புக் குறைவு; ஏனெனில், அந்நாடுகளில் இரு கட்சி ஜனநாயகம் நிலவுகிறது' என்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்.

"ஜனநாயகங்கள் எப்படி வோட்டு அளிக்கின்றன" என்ற ஆங்கில நூலை நான் அண்மையில் படித்துக் கொண்டிருந்தேன். அதிலிருந்து தெரிய வருவது என்னவெனில், பிரிட்டனில் நிலவரம் இந்தியாவிலிருந்து மாறுபட்டதல்ல என்பதுதான்! அங்கேயும் இரு கட்சிகளுக்கு அதிகமாகப் போட்டியிடுகின்றன: கன்ஸர்வேடிவ், லிபரல், லேபர். பதவிக்கு வருவது பெரும்பாலும் கன்ஸர்வேடிவ் அல்லது லேபர் கட்சிகளே. இவர்கள் ஐம்பது சதவிகிதத்துக்குக் குறைவான வோட்டுக்களைப் பெற்று ஐம்பது சதவிதத்துக்கும் அதிகமான இடங்களை நாடாளுமன்றத்தில்பெறுவதுதான் வழக்கமாக இருந்து வருகிறது. வேட்பாளர்களை மட்டும் தனித்தனியே பார்த்தாலும், இருவருக்கு மேல் போட்டியிடும் தொகுதிகளில் வெற்றிபெறுகிறவருக்குப் பெரும்பான்மை வோட்டுக்கள் கிடைப்பதில்லை. அதிகபட்ச வோட்டுக்களைப் பெற்றவர் என்ற அளவில்தான் வெற்றி பெறுகிறார். எனவே, மைனாரிடி வோட்டுக்களைப் பெற்று வேட்பாளர் தேர்ந்தெடுக்கப் படுவதும் மைனாரிடி வோட்டுக்களைப் பெற்று ஒரு கட்சி ஆட்சிக்கு வருவதும் நாம் பின்பற்றுகிற பிரிட்டிஷ் தேர்தல் முறையில் உள்ளடக்கமாக இருக்கும் ஒரு பெரிய குறை. இரு நாடுகளுக்கும் பொதுவான குறையாக இன்று விளங்குகிறது.

சென்னை — 41,
எம். ஜி. பாலசுப்பிரமணியன்.

உருக்கமாகப் பாடும் சீர்காழியின் முடிவும் உருக்கமாகவே அமைந்து விட்டது. 'தலைசிறந்த ஒரு நாவலாசிரியர் கூட இத்தனை உருக்கமான ஒரு முடிவைத் தமது கதைக்குத் தர முடியாது' என்று கூறத் தக்க விதத்தில், சீர்காழியின் கதை முடிவுற்றது. ''அப்பாவுக்கு மூச்சுத் திணறுகிறது'' என்று தாயார் மகனை அவசரமாக அழைத்ததும், டாக்டர் மகன், மாத்திரையை அவர் நாவுக்கடியில் வைத்து விட்டு விபூதி பூசியதும், மகனைத் தந்தை, ''நல்ல பிள்ளை'' என்று வாழ்த்தியதும், ''அம்மாவைப் பார்த்துக் கொள்'' என்று கூறியதும், மருத்துவமனைக்கு அழைத்துப் போகப்பட்ட சீர்காழி, வழியெல்லாம் திணறலுக்கிடையில் கந்த சஷ்டி கவசம் கூறியதும், லஸ் முனையில் பிள்ளையார் கோயிலைக் கண்டதும் ''இறைவா, நாட்டைக் காப்பாற்று'' என்று வேண்டியதுமான தொடர் நிகழ்ச்சிகள் நமது நெஞ்சங்களை உருகச் செய்து விட்டன.

செம்மங்குடி கூறியது போல், ''எத்தனையோ வித்வான்கள் இருக்கிறார்கள். இத்தனை நல்ல குரலும் அதை விட நல்ல குணமும் யாரிடம் இருக்கின்றன?''

பாமரரும் பண்டிதரும் ரசிக்கும்படி பாடியவர் சீர்காழி. அதன் பின்னும் ஓர் உண்மைக் கதை உண்டு. பல ஆண்டுகளுக்கு முன், மயிலை கபாலி கோயிலில் கச்சேரி செய்து கொண்டிருந்தார், மதுரை மணி அய்யர். அதனைச் சாமானியர் — ரிக்ஷாக்காரர் போன்ற உழைப்பாளர் வர்க்கத்தினர்— மெய்மறந்து ரசிப்பதைப் பார்த்தார் இளைஞர் கோவிந்தராஜன். குறிப்பாக, சுவரம் பாடும் போது அவர்கள் நிலை கொள்ளாமல் துள்ளுவதைக் கண்டார். அவர்களிடம், ''நீங்க இதிலே என்ன ரசிக்கிறீங்க?'' என்று கேட்டார். ''அது என்ன, படி ஏறி இறங்கற மாதிரி என்ன சொகமா பாடறாரு!'' என்று அந்த உழைப்பாளருள் ஒருவர் கூற, கோவிந்தராஜனுக்குப் புல்லரித்தது. ஒரு பேருண்மையும் புலப்பட்டது.

பாட்டு என்பது சங்கீத ஞானம் உள்ளவர்களைத் திருப்திப்படுத்தி அவர்களிடம் பட்டமோ பாராட்டோ பெறுவதற்காக மட்டும் ஏற்பட்டதல்ல; பாமர மக்களைப் பாட்டு ஈர்க்க வேண்டும்; அவர்களை மகிழ்விக்க வேண்டும்; அவர்கள் இதயங்களை உருக்க வேண்டும் என்பதைப் புரிந்து கொண்டார். அதனையே தமது இசை வாழ்க்கையின் குறிக்கோளாகவும் கொண்டு பெரு வெற்றி பெற்றார்.

சங்கீத மும்மூர்த்திகளின் கீர்த்தனைகளை அவர் அற்புதமாகப் பாடக் கூடியவர்; தெலுங்கு நன்றாகத் தெரியும்; தீட்சிதர், சாமா சாஸ்திரிகளின் கீர்த்தனைகளை அட்சர சுத்தமாகப் பாடுவார். ஆனால் தமிழ்ப் பாடல்களிலேதான் அவர் நெஞ்சம் பரிபூரணமாக லயித்தது. நமது மனமும் நெகிழ்ந்தது.

அமரர் கல்கி அவர்களின் 'பொய்மான் கரடு' என்ற நாவல், 'பொன் வயல்' என்ற பெயரில் திரைப்படமான போது அதிலே ஒரு நடனக் காட்சிக்குப் பாடினார் சீர்காழி. சினிமாவுக்கு முதன் முதலாகக் குரல் கொடுத்தது அப்போதுதான். படம் சுமாராகத்தான் ஓடியது. அப்போது கல்கி சீர்காழியிடம் சொன்னார்: ''படம் ஓடுவதும் ஓடாததும் இருக்கட்டும்; உங்களுடைய 'சிரிப்புத்தான் வருகுதய்யா' பாட்டு ஒன்று போதும்; அது தமிழகத்துக்குக் கிடைத்த லாபம்; அதற்காகப் படத் தயாரிப்பாளர்கள் நஷ்டம் ஏற்பட்டால் கூடத் தாங்கிக் கொள்ளலாம்!'' — இதை, என்னைச் சந்திக்க நேரும் போதெல்லாம் நினைவு கூர்வார் சீர்காழி. அப்போது அவர் கண்கள் ஈரமாகும்.

இசைப் பேரறிஞருக்குக் குழந்தை முகம்; அவர் மனமும் அப்படியே. யாருக்கும் ஒரு தீங்கும் நினைக்கக் கூடத் தெரியாதவர்.


இறைவனைப் பூஜிக்கும் போது, ''உலகம் வாழ்க'' என்பார். ஆட்டோகிராஃப் கேட்டால் ''வாழ்க வையகம்'' என்று எழுதிக் கையெழுத்திடுவார்.

வையகம் வாழும் வரை இசை வாழும்; இசை வாழும் வரை சீர்காழி வாழ்வார்.

— கி. ரா

இசைப் பேரறிஞருக்குக் குழந்தை உள்ளம்!





வசனகர்த்தா: நிறைய வசனங்களைச் சரியில்லேன்னு நீக்கிட்டீங்களாமே, ஏன் சார்...?

டைரக்டர்: அதை எல்லாம் இசையமைப்பாளர் கிட்டக் கொடுத்துப் பாட்டாப் போடச் சொல்லிட்டேன்...!

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.



"என்ன, உங்கள் பிள்ளைகளுக்குச் சங்கரன், கிங்கரன் என்று பெயர் வைத்திருக்கிறீர்கள்?"

"ஆமா, சம்பளம் மட்டும் வாங்கிக் கொண்டிருந்த போது பிறந்தவன் சங்கரன். இப்போது பிறந்தவன் கிங்கரன்!"


— கி. அ. லக்ஷ்மி.

மனைவி: "நேற்று உங்க கட்சியின் கொள்கை விளக்கக் கூட்டத்தில் பேசினீங்களா?"

கணவன்: "ஆமாம், எப்படி கண்டுபிடிச்சே?"

மனைவி: "ராத்திரி தூக்கத்தில ஒரே உளறல் மயமா இருந்துச்சே.....!"

— கடுவை கோபால்சாமி.





"உன் பெயர் கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறப் பாடுபடுவது பற்றி சந்தோஷம். ஆனா அதுக்கு நூறு ரூபாய் கடன் கேட்கிறியே எதுக்காக?"

"நூறு நாட்களில் நூறு பேரிடம் நூறு நூறு ரூபாயாகக் கடன் வாங்கி சாதனை புரிந்தவன் என்ற சிறப்பைப் பெறத்தான்!"

— லலிதா செல்லப்பா.



"கந்தசாமி துணை'ன்னு லாரியிலே எழுதியிருக்கீங்களே.....?"

"அதுவா, எங்க அண்ணன் கந்தசாமி போக்குவரத்துத் துறை மந்திரியா இருக்கும்போது பர்மிட் கொடுத்த லாரி...."

— ஊத்தங்கரை உமா சங்கர்.



• பிட்ரோடா

குழந்தைகளுக்குக் கொடுமை!


இதை உங்களுக்கு நம்புவது கடினமாக இருக்கும்; ஆனால் நூற்றுக்கு நூறு உண்மை! மூன்று வயது கூட முடியாத குழந்தைகளைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்துக் கொள்ளக் கடுமையான பரீட்சைகள் நடத்தப்படுகின்றன! நர்ஸரி வகுப்பில் சேரக் குழந்தைகளிடம் கேட்கப்படும் கேள்விகளுக்கு விடைகளை, நமது நாட்டின் எம். எல். ஏ. அல்லது எம். பிக்கள் எத்தனை பேர் கூற முடியும் என்பது சந்தேகமே! உதாரணமாக ஒரு மூன்று வயதுக் குழந்தையிடம், 'இந்தியா

காங்கிரஸ் மூத்த தலைவர்களின் கவலை!


மாயாஜால் பிட்ரோடா:

டாக்டர் ஸாம் பிட்ரோடா என்ற பெயர் இப்போது அடிக்கடி பத்திரிகைகளில் அடிபடுகிறது. நாட்டை இருபத்தோராம் நூற்றாண்டுக்குத் தகுதியுள்ளதாகத் துரிதமாக உருமாற்றப் பிரதமரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் பிட்ரோடா. "மாயா ஜால் பிட்ரோடா" என்று செல்லமாக அழைக்கப்படுகிறார். 'மாயா ஜாலம் போல் நாட்டை உருமாற்றப் போகிறாராம்! செய்து விட்டுப் போகட்டும் ஆட்சேபனை இல்லை' என்று தலையாட்டிய காங்கிரஸ்காரர்கள், பிட்ரோடா, 'காங்கிரஸ் கட்சிக்கும், புத்துணர்ச்சி ஊட்டுகிறேன்' என்று ஆரம்பித்த போது, திடுக்கிட்டு விழித்துக் கொண்டார்கள். 'ஆ., ஊ' என்று பலமாக எதிர்ப்புத் தெரிவிக்க ஆரம்பித்து விட்டார்கள்!

'விஞ்ஞான ரீதியான அணுகு முறையைக் கையாண்டு, காங்கிரஸ் கட்சியைத் திருத்தி அமைத்து, மக்களிடையே அதற்குள்ள செல்வாக்கை அதிகரித்துக் காட்டுகிறேன்' என்கிறார் பிட்ரோடா. காங்கிரஸில் உள்ள, பழுத்துக் கொட்டை போட்ட மூத்த தலைவர்கள், 'நூறு வருஷங்களாக மக்களின் ஆதரவுடன் வளர்ந்து வந்துள்ள கட்சி, இனி கம்ப்யூட்டர் ஆதரவுடன் வளர வேண்டுமா? என்று வியப்பு கலந்த கிண்டலும் கேலியுமாகக் கேட்கிறார்கள். அடிப்படையில் தங்கள் 'பிடி' தளர்ந்து விடுமோ என்ற பயம் தான்! இருப்பினும், காங்கிரஸில் இளைஞர்களின் ஆதரவு பிட்ரோடாவுக்கு இருப்பதாகத் தெரிகிறது. பார்க்கலாம், பிட்ரோடா என்ன தான் செய்யப் போகிறார் என்று!




• அபின் தரும் பாப்பி மலர்.



''உங்க வீட்டுக்காரர் இப்பத்தான் கொஞ்சம் கொஞ்சமா முன்னுக்கு வந்து கொண்டிருக்கிறார்னு சொல்றியே, என்ன தொழில் செய்யறார்?''

''நாசமாப் போச்சு! நேற்று ரேஷன் கியூவிலே கடைசியா நின்னுகிட்டிருந்த வரு கொஞ்சம் கொஞ்சமா நகர்ந்து இன்னைக்கு முன்னாடி வந்திருக்கார்னு சொன்னேன்!''

— ஏ. கருணாநிதி.



''உங்களைக் கோடிக்கணக்கில் ஊழல் செய்து சொத்துச் சேர்த்து விட்டவர்னு அவர் குற்றம் சாட்டுகிறாரே, நீங்க அதுக்கு என்ன பதில் சொல்றீங்க?--

''நான் ஒன்றும் அவரைப் பற்றிச் சொல்லக் கூடாது. தலைவரா இருந்து எனக்கு அவர் வழிகாட்டியவர். அவ்வளவுதான் நான் சொல்ல முடியும்!''


— கடுவை கோபால்சாமி.

''இது அப்பாவி மக்கள் அதிகம் வாழ்கிற பகுதின்னு அமைச்சர் தெரிஞ்சுகிட்டார்!''

''எப்படிச் சொல்றே?''

''எங்க ஆட்சிக் காலத்தில்தான் நாடு விலைவாசி உயர்வில் உலக அரங்கில் முதலிடத்தை வகிக்கிறதுன்னு பொதுக் கூட்டத்தில் பெருமை அடிச்சுக்கிட்டாரே!''

— மணியன் தர்மலிங்கம்.



வின் முக்கிய நதிகள் எவை?' என்று கேட்கப்பட்டது! இன்னொரு குழந்தையிடம், 'குளிர்கால மாதங்களைச் சொல்லு' என்று கேட்டார்கள். இதை விடப் பயங்கரம், 'இந்தியாவின் பாலைவனப் பகுதிகளில் வாழும் பறவை எது?' என்ற வினா ஒரு குழந்தை மீது தொடுக்கப்பட்டது!

இப்படி கடுமையான கேள்விகள் கேட்கக் காரணம் என்ன? அதில் ஒரு ரகசியம் இருக்கிறது! ஏகப்பட்ட குழந்தைகள் 'அட்மிஷன்' தேடுகின்றன. கழித்துக் கட்டக் கையாளப்படும் உபாயமே நுழைவுத் தேர்வு! நூறு குழந்தைகளைச் சேர்த்துக் கொள்ளக் கூடிய ஒரு பள்ளிக்கு ஐயாயிரம் விண்ணப்பங்கள் வந்துள்ளன!

கல்லூரி வகுப்புக்கள், காலி!

வர்த்தகப் பொருட்காட்சி, ஃபேஷன் பரேடு, புத்தகப் பொருட்காட்சி என்று ஏதாவது ஒன்று மாறி மாறிப் புது தில்லியில் நடந்து கொண்டே இருக்கிறது. இந்தப் பொருட்காட்சிகளை நடத்துகிறவர்கள், கல்லூரி மாணவிகளை வழிகாட்டிகளாகவும், விளக்கமளிப்பவர்களாகவும் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதற்குத் தினந்தோறும் சன்மானம் அளிப்பது தவிர, டிபன் காப்பி போன்றவை இலவசமாகத் தருகின்றனர். இதனால் ஏராளமான கல்லூரி மாணவிகள் பொருட்காட்சிகளில் வேலை பெறுகின்றனர். கல்லூரி வகுப்புக்கள் காலி!

இப்போது கல்லூரிகளின் நிர்வாகிகள் மாணவிகளுக்கு எச்சரிக்கை விடுத்து, 'ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்' என்று பயமுறுத்த வேண்டிய அளவுக்கு நிலைமை போய் விட்டது!

கஞ்சா வளர்ப்பிலும் குழந்தைகள்!

காஷ்மீர், ஹிமாசலப் பிரதேசம், உத்தரப் பிரதேசத்தின் மலைப்பாங்கான பகுதிகள் ஆகியவற்றில் திருட்டுத்தனமாக கஞ்சாச் செடி பயிரிடுவது நிறையவே நடந்து வருகிறது. இதனை ஒழித்துக்கட்ட அண்மையில் போலீஸ் 'ரெய்ட்' நடத்திய போது அதிர்ச்சிக்குள்ளாயினர்! காரணம், இந்தப் பாப்பி — அபின் செடி — தோட்டங்களில் சின்னஞ் சிறு குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருப்பதுதான்! சாஸ்லை எடுக்கப் பாப்பி விதைகளை உள்ளங்கைகளுக்கிடையில் வைத்துக் கசக்கும் வேலையைக் கூடக் குழந்தைகள் செய்து கொண்டிருந்தன! இந்த அபின் உற்பத்தியாளர் மீது கடுமையான நடவடிக்கை எடுத்தால் மட்டும் போதாது; கிராம மக்களிடம் அபின் — கஞ்சா ஆகியவற்றின் ஆபத்துக்களையும், குழந்தைகளை இங்கு பணியாற்ற அனுமதிப்பதால் ஏற்படக் கூடிய விபரீதங்களையும் எடுத்துரைத்துப் பிரசாரம் பண்ண வேண்டும் என்பது இப்போது உணரப்பட்டிருக்கிறது.

— ரவீந்தர் குமார்

தர்மம்

பூலோக சொர்க்கம் எது? என்பதைப் பற்றி நமக்குள் கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், பூலோக நரகம் என்பது, ஆபீஸ் நேரத்தில் பல்லவன் பஸ்ஸில் பயணம் செய்வதுதான் என்கிற விஷயத்தை நீங்கள் சென்னைவாசியாக இருந்தால் சத்தியம் பண்ணி ஒப்புக் கொள்வீர்கள்.

அதுவும் 'வி' சர்வீஸ் ப்ஸ்கள் புதுக் கவிதைகள் மாதிரி ஏராளமாக வந்து விட்ட பிறகு, சாதாரண பஸ்கள் தேர்தலில் டெபாஸிட் இழந்த வேட்பாளர்கள் மாதிரி மரியாதை இழந்து விட்டன.

''சீக்கிரம் போகலாம் வோய்'' என்று, எல்லாருக்குமே 'வி' சர்வீஸ் பஸ்கள் மீது அபாரமான காதல் வந்து விட்டது. நினைத்த இடங்களில் குப்பை லாரி மாதிரி நின்று, நின்று போகாமல் விமானப் பயணம் மாதிரி சர் ரென்று போக யாருக்குத்தான் விருப்பமிருக்காது? அப்படி விரும்புகிறவர்களில் அடியேனும் ஒருவன்.

ஆனால் பாருங்கள்... இன்று வெள்ளிக் கிழமை. அடையாறு மாதா கோவிலில் ஏதோ விசேஷம் போல. வழக்கத்தை விட '4வி' பஸ்ஸில் அதிகக் கூட்டம். டெர்மினஸிலிருந்து நாலு ஸ்டேஜ்களுக்கு அப்புறம் பஸ் ஏறுகிற நான் இந்தக் களேபரத்தில் நுழைந்து இடிகள், நாற்றங்கள், கால் மிதித்தல்கள் வியர்வைப் பிசுபிசுப்பு, ஆண், பெண்ணென்று வித்தியாசம் பாராத உரசல்கள், கண்டக்டரின் ஏக வசன மரியாதை — இவற்றைக் கடந்து... அப்பாடா இன்னும் இரண்டே நிறுத்தங்கள்தான்.. இறங்கி விடலாம்.

மணி 10.10 ஆயிற்று. ஆபீசுக்கு ஏற்கெனவே தாமதம். இந்த பிராஞ்சுக்கு மாற்றலாகி வந்து பத்து நாட்கள்தான் ஆகின்றன. புதிய பிரதேசம். மானேஜர் மகா முசுடு. மற்ற ஊழியர்கள் இன்னும் என்னை, ஒரு புத்தகத்தின் பின்னாலிருக்கும் பிழை திருத்தப் பட்டியலைப் பார்க்கிற மாதிரி அலட்சியமாகத்தான் பார்க்கிறார்கள். இந்த லட்சணத்தில் இன்று ஆபீசில் இன்ஸ்பெக்ஷன் வேறு. என்னதான் செய்யப் போகிறேனோ...!

காலையில் மார்க்கெட் உலா முடிந்து, ரேஷனில் கெரோஸின் வாங்கி வந்து, மனைவிக்குச் சமையலில் கூடமாட உதவி பண்ணி, குழந்தைகளைக் குளிப்பாட்டி, நானும் தயா



ராகி, சாப்பாட்டைப் பொட்டலமாகக் கட்டிக் கொண்டு பஸ் பிடித்து... யப்பா... ஏண்டா சாமி... மிடில் கிளாஸ் மனுஷனாகப் பிறந்து தொலைச்சோம்னு இருக்கு...

விஸில் சப்தம். அட... நம்ம ஸ்டாப்பிங் வந்தாச்சு. நெரிசலிலிருந்து முதலில் மன சால் விடுதலையாகி, அப்புறம் உடம்பால் கீழே குதித்தேன்.

''சாமி... தருமம் பண்ணுங்க சாமி!'' என்னை அண்ணாந்து பார்த்து ஒலித்த அந்தக் குரல். எனக்கு எரிச்சலூட்டியது.

''அடச் சே... வழியை விடு சனியனே'' என்று வார்த்தைகளால் அறைந்து விட்டு, பிறர் என்னை வினோதமாகப் பார்ப்பதை அலட்சியம் செய்து விரைந்தேன்.

பத்து நிமிஷ நடை ஆபீசுக்கு.

இவனை எப்போதும் அந்த பஸ் ஸ்டாண்டில்தான் பார்க்கிறேன். காலையில் இந்தப் பக்கம்... சாயங்காலங்களில், வெயில் இந்தப் பக்கம் அடிப்பதால் எதிர் ஸ்டாண்டில். இருக்கிற ஒற்றைக் காலுடன் கைகளால் ஊர்ந்தபடி சதா இதே குரல்: ''சாமி... தருமம் பண்ணுங்க சாமி!''

காரணமேயில்லாமல் எனக்கு அந்தக் குரலைப் பிடிக்கவில்லை. இந்தப் பத்து நாட்களில் என் முகம் அவனுக்குப் பரிச்சயமாகி விட்டிருக்கிறது. எல்லாரையும் போல் என்னிடமும் தகரக் குவளையை நீட்டுவான். ஆனால், ஒருநாளும் நான் அவனுக்குப் பத்து பைசா கூடப் பிச்சை போட்டதில்லை.

ஆபீஸ் இன்ஸ்பெக்ஷனில் ஏகமான வேலை. இடுப்பு முறிந்து விடும் போல் ஆகி விட்டது. வீட்டுக்குக் கிளம்பும் போது இரவு ஏழரை, எல்லோரும் போன பிறகு, கடைசி ஆளாகக் கிளம்பி வெளியே வந்தேன்.

'உடனடியாக வீட்டுக்குப் போய் 'அக்கடா'வென்று படுக்கையில் விழ வேண்டும். தலை 'விண்விண்' என்று தெறித்தது. டென்ஷன் அதிகமாக இருந்ததனால் லேசாக மயக்கம் வந்தது. பஸ் ஸ்டாண்டுக்கு நடக்கவே முடியவில்லை...' சமாளித்துக் கொண்டு ஒரு சிகரெட்டை வாங்கிப் பற்ற வைத்து, ஸ்டாண்டுக்கு வந்தேன்.

ஓரிருவர் பஸ்ஸுக்காகக் காத்திருந்தனர். அந்தப் பிச்சைக்காரனின் 'சாமி தருமம் பண்ணுங்க சாமி' குரல்.

சிகரெட் பாதியில் அணைந்து போயிற்று. வத்திப் பெட்டிக்காக பேண்ட் பாக்கெட்டில் கை விட்டேன். 'அடடா... என்ன இது... எட்டணா மட்டும் இருக்கே...! அடுத்த பாக்கெட் — அதுவும் காலி... பின் பாக்கெட்... ம்ஹூம்... சட்டைப் பையிலும் காசு ஏதுமில்லை. காலையில் ஆறு ரூபாய் கையிலிருந்ததே....!'

அடடா... ஆமாம்... இன்று உணவு வேளையில் ஆபீசில் ஏதோ ஃபங்க்ஷன் என்று மனமகிழ்மன்ற ஆட்கள் 'நன்கொடை' என்று வந்தார்கள். அவர்களோடு நட்பை வளர்த்துக் கொள்ளக் கிடைத்த ஒரு சந்தர்ப்பத்தை இழக்க மனசில்லாமல் என் பெயரெழுதி ஐந்து ரூபாயைக் கொடுத்து விட்டது நினைவுக்கு வந்தது. மீதி ஒரு ரூபாய். சிகரெட்டுக்கு எட்டணா போக மீதி எட்டணா. இப்ப பஸ்ஸுக்கே பிரச்னையாகி விட்டதே... டிக்கெட்டுக்கு ஒரு ரூபாய் பத்து காசு வேண்டும். எட்டணா டிக்கெட் வாங்கி இறங்கி மீதி தூரத்தை நடக்கலாம் என்றால் முட்டி செத்துக் கிடந்தது.

'ஆபீசிலும் எல்லோரும் வீட்டுக்குப் போய்விட்டிருந்தார்கள். அக்கம் பக்கத்திலும் யாரும் தெரிந்தவர்கள் இல்லை.... நடக்கவும் முடியாது போல் இருக்கிறதே... என்ன செய்வது?' என்று வாய்விட்டே முணுமுணுத்து விட்டேன் போலும். அந்தப் பிச்சைக்காரன் என்னை வினோதமாய்ப் பார்த்தான்.

''ஆட்டோவுல போகலாம்னா அதுவும் திடீர்னு ஏதோ வேலை நிறுத்தமாம்'' என்று யாரோ பேசிக் கொண்டு போனார்கள். வீட்டுக்குப் போய் ஆட்டோ கட்டணத்தைக் கொடுத்து விடலாமென்றால் — அந்தச் சாத்தியமுமில்லை. ஸ்தம்பித்து நின்று கொண்டிருந்தேன். ஏதோ ஒரு பஸ் வந்தது. அருகிலிருந்த ஒன்றிரண்டு பேரும் சென்று விட... இப்போது நானும் அந்தப் பிச்சைக்காரனும் மட்டுமே...

அனிச்சையாக அவனைப் பார்த்தேன்.

அவன் தன் தகர டப்பாவிலிருந்த சில்லறையைத் துழாவிக் கொண்டிருந்தான். சற்றைக்கெல்லாம் அவனும் கிளம்பி விட்டான். செய்வதறியாது நிலத்தை வெறித்த போதுதான் அந்த ஒரு ரூபாய் நாணயம் கண்ணில் பட்டது. அவன் தகர டப்பாவைத் துழாவியபடி இருந்த இடத்தில் விழுந்து கிடந்தது. சில நிமிடங்களுக்குமுன் அது அங்கே இருக்கவில்லை. எனவே அது அவனுடையதாகத் தான் இருக்க வேண்டும்.... பத்தடி தூரமே சென்றிருந்த அவனை வேகமாக நெருங்கி ''இந்தாங்க ஒரு ரூபாயைக் கீழே விட்டுட்டீங்க'' என்றேன்.

''அது என்னிதில்லைங்க....'' என்றான்.

வேகமாகத் தெருவைக் கடந்து, முனை திரும்பி, இருட்டில் கலந்தான்.

இப்போது ஒரு கௌரவப் பிரச்னை. இந்த ஒரு ரூபாயை என்ன செய்வது...? சரி வேற வழி இல்லை. இதை எடுத்துக் கொண்டு பஸ் ஏற வேண்டியதுதான்.

சுற்றிலும் பார்த்தேன். யாருமில்லை. பஸ் வந்தது. சட்டென்று குனிந்து அந்த ஒரு ரூபாய் நாணயத்தை எடுத்துக் கொண்டு பஸ்ஸில் ஏறி டிக்கெட்டை வாங்கினேன்.

சிலீரென்று காற்று முகத்தில்பட்ட போது, எனக்குச் சட்டென்று விஷயம் புரிந்தது. யாரோ கன்னத்தில் ஓங்கி அறைந்தாற் போல் இருந்தது. நான் முணுமுணுத்ததைக் கேட்டு — என் நிலைமை தெரிந்து நாசூக்காக உதவி பண்ணியிருக்கிறான் அந்தப் பிச்சைக்காரன். ஆனால் நான்....? மனம் கனத்துப் போனது.

சூர்யா



சுதந்திர நாட்டின் அடிமைகள்

ஜிகு ஜிகுவென்று சரண்ராஜின் மார்க்கெட் வால்யூ ஏறிக் கொண்டு வருகிறது போலும். கொஞ்சம் முரட்டுத்தனமான காரெக்டர் என்றால் 'கூப்பிடு சரண்ராஜை' என்று சொல்லி விடுகிறார்கள்.

இதில் சண்டியர் சரண்ராஜ். உதடுகளை விரித்து, பற்களைக் காட்டுகிற சரண்ராஜைப் பார்த்தால் நிச்சயம் வரிப்புலியின் சிரிப்பாகத்தான் இருக்கிறது. பணக்கார ராதிகா, எங்கோ சாலையில் இருக்கும் சரண்ராஜைக் காவலுக்குக் கொண்டு வந்து வைத்துக் கொள்வதென்பது எங்கேயோ போய்க் கொண்டிருந்த ஓணானைப் பிடித்துத் தலையில் விட்டுக் கொண்ட கதைதான்.

ரவிச்சந்திரன் + மந்திரி குழுவின் நிழலான விவகாரத்தை நிழல்கள் ரவி கண்டுபிடித்துவிட, ஒரு 'சபாஷ்' பெற்றுக் கொண்டு நிழல்கள் ரவி சுடப்படுவதுடன் கறிவேப்பிலையின் உபயோகம் முடிந்து போகிறது.

கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று சொல்ல ஒரு ஸ்ரீவித்யா. கடைசியில் கணவன் கையாலேயே சிவலோகப் பதவி அடைய, இந்தப் பக்கம் ராதிகா கொடுமைக்கார அப்பாவை டிஷ்யூங்... டிஷ்யூங்.

முன்பெல்லாம் படத்திற்குப் படம் ஒரு கிராமத்துப் பண்ணைக்காரர், மிராசுதார், ஜமீன்தார் வருவார். கொடுமைக்காரராக, ஸ்த்ரீ லோலராக, உலகின் எல்லாவித கெட்ட பழக்கங்களும் ஒருங்கே அமைந்தவராக இருப்பார். இப்போது சினிமாக்காரர்கள் மிகவும் மாறிவிட்டார்கள். கிராமத்துப் பண்ணைக்காரரைத் தூக்கியெறிந்துவிட்டு மந்திரியை அழைத்து வந்து உட்காரவைத்து விட்டார்கள். இந்தப் படத்தில் மத்திய அமைச்சராம்.

செந்தில் — டிரைவர். ஏதோ அவ்வப்போது புன்னகை பூக்கச் செய்கிறார்.

பாடல்கள் ஒன்றும் சொல்கிற மாதிரியோ, கேட்கிற மாதிரியோ இல்லை போலிருக்கிறதே!

ராதிகா அரசியல்வாதிகளுடன், வில்லன்களுடன் மோதுகிறார் என்றால் டாலடிக்கும் சட்டையும், கூலிங் கிளாஸும், ஹைஹீல் செருப்புமாக அவரை அலைய விடுகிறார்கள். இந்தப் படத்திலும் அப்படியே. ஆனால் ரசிக்க முடிகிறது.

எஸ்.ஏ. சந்திரசேகர் எப்போதும் சமுதாயத்தில் ஏமாந்து போனவன் ரோலை ஏற்றுக் கொண்டு நம்மிடம் இரக்கத்தைச் சம்பாதித்துக் கொள்வார். இந்தத் தடவை கறுப்புக் கோட்டு மாட்டிக் கொண்டு வந்து நம்மை எல்லாம் ஏமாந்து போனவர்களாக ஆக்கி விட்டார்.

செந்தாமரைக்கு மகளே மகளே என்று புலம்ப வேண்டிய கடுகளவு ரோல். சகுந்தலாவிற்கும் அப்படியே.

கதையைச் சில திடுக் திருப்பங்களுடன் கொண்டு போயிருப்பதற்காக டைரக்டரைப் பாராட்டலாம் என்றாலும், இன்னும் சிறிது நாட்களுக்கு மந்திரிகளை, மந்திரி மகன்களை, அரசியல்வாதிகளை, திரைப்படத்திலிருந்து அகற்றி விட்டால் மந்திரிகளிடமிருந்து நமக்கு விடுதலை கிடைக்கும் — அட்லீஸ்ட் சினிமாப் படங்களில்.

— ஜெயமன்மதன்

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: லெ. ரசேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



POND'S
பொன் நகைகள்
மின்னிட... சந்தன
நறுமணம் கமழ்ந்திட...
POND'S
Sandal Talc
இனிய உணர்வுகள் மனதில் மலர்ந்திடும் கணங்கள். உங்கள் மேனியில் பொன் நகைகள் மின்னிட, தூய சந்தனத்தின் நறுமணம் கமழ்ந்திட இதுவரை அனுபவித்தறியா உணர்வுகளால் உள்ளம் பூரிக்கிறது; பெண்மை உங்களிடம் பூரண பொலிவு பெறுகிறது.
அரிய நறுமணம்,
மதிப்பில் பொன்னைப்
போல் உயர்ந்தது.
POND'S Sandal Talc
பாண்ட்ஸ்
சாண்டல்
டால்க்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

